கல்கி

KALKI 2-3-1975 60 காசு






மின்னலடிக்கும் வெண்மைக்கே...
ரின்
RIN
DETERGENT CAKE
ரின், சோப் அல்ல இது. புத்தம் புதுமையான ஒரு சலவைச் சாதனம்—வில்லை வடிவிலே ஒரு டிடர்ஜெண்ட். சிக்கன மிக்கது ரின்: சோப்பை விட மேலும் அரை மடங்கு அதிகத் துணிகளை வெளுத்திடும். திறந்த சோப்புப் பெட்டியிலே ஈரமுலர வைத்துக் கொண்டால் சிறந்த பலன் அளிக்கும் ரின். குடும்பத்திலுள்ள யாவரின் துணிகளிலும் மின்சுடரின் வெண்மை பளிச்சிடவே: ரின்!
சலவையோ யானையளவு!
சோப்பை விட அரை மடங்கு
அதிகத் துணிகளை வெளுப்பது ரின்!

கல்கி



ஆனந்த. மாசி 18
1975 மார்ச் 2

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே! சம்பவங்களும் கற்பனையே.

மேலட்டை : "தமிழகத்தில் தண்ணீர்ப் பஞ்சமாமே? கேள்விப்பட்டேன்"

—வண்ணப்படம் : வித்யாஷ்ரதா

அடுத்த வாரம் :

• எதிர்காலச் சிறப்பிதழ் •

☐ **விண்வெளித்துறை :**

ஸ்ரீ ஹரி கோட்டா ராக்கெட் தளத்திலிருந்து நமது ராக்கெட் என்று கிளம்பும்? அது பற்றிய விவரங்கள் என்ன?

☐ **அணுசக்தித் துறை :**

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பயன்கள், ஆபத்துக்கள் யாவை?

☐ **டெலிவிஷன் :**

தமிழகத்தில் பெருமளவில் பரவும்போது என்னென்ன மாற்றங்கள் எந்த எந்தத் துறைகளில் நேரும்?

☐ **அரசியல் :**

ஜே. பி. விரும்பும் எதிர்கால ஆட்சியும் அரசியலும் எத்தகையது?

☐ **அதிசயங்கள் :**

எதிர்காலத்தில் என்னென்ன விஞ்ஞான அதிசயங்களைச் சந்திக்கலாம்?

☐ **ஹாஸ்யம் :**

எதிர்காலச் சிரிப்பு பற்றி வாசக அன்பர்கள் என்னவெல்லாம் கற்பனை செய்துள்ளார்கள்?

☐ **சிறுகதைகள் :**

எதிர்காலத்தை நிலைக்களனாகக் கொண்டு எழுதப்பட்ட சிறுகதைகள் எத்தகைய பரபரப்பை ஏற்படுத்தும்?

மேற்படி கேள்விகளுக்கும் இன்னும் பல விநோத விழுக்களுக்கும் விடை பகர்கின்றது அடுத்த வாரக் கல்கி.

மக்ஸய்ஸாய் விருது பெற்ற



ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களுக்கு

திருச்சி நகர மக்கள் அளிக்கும்

பாராட்டு

*

1975 மார்ச் 2ம் தேதி மாலை 6 மணிக்கு

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி

ஸ்ரீ K. S. வெங்கட்ராமன் அவர்கள் தலைமையில்

திருச்சி, சீதாலக்ஷ்மி ராமசாமி கல்லூரியிலுள்ள

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அரங்கத்தில்

*

பாராட்டு விழாவுக்குப் பின்னர்

ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின்

இன்னிசைக் கச்சேரி

கண்டதேவி அழகர்சாமி	...	வயலின்
காரைக்குடி மணி	...	மிருதங்கம்
வி. நாகராஜன்	...	கஞ்சிரா
புதுக்கோட்டை மகாதேவன்	...	மோர்சிங்

கல்கி

மலர் 34
இதழ் 31

கூட்டணி வெற்றி - 1

கோவிந்தபுராவிலும் ஜபல்பூரிலும் போலவே ஹரியானாவிலும் இந்திரா காங்கிரஸ் உபதேர்தல்களில் மண்ணைக் கவ்வியது. மாநில சட்ட சபைக்கு அங்கு நடந்த மூன்று உபதேர்தல்களுள் இரண்டில் இந்திரா காங்கிரஸ் படுதோல்வி கண்டது.

கம்யூனிஸ்டுகள் அல்லாத எதிர்க்கட்சியினர் இணைந்து செயல் பட்டால், அதற்கு ஜெயப்பிரகாசரின் ஆதரவும் கிடைத்துவிட்டால் மாபெரும் வெற்றி பெறுவது திண்ணம் என்பது மீண்டும் நிரூபண மாகி யிருக்கிறது. இந்திரா அரசின் அபத்தமான பொருளாதாரக் கொள்கைகள் மக்களை வருத்தி ஆட்சியிடம் வெறுப்பை வளர்த் துள்ளன. என்னதான் பண பலத்தையும் அதிகார பலத்தையும் பிரயோகித்தாலும் இந்திரா அம்மையாரின் ஜம்பம் சாயாது, எதிர்க் கட்சிகளின் கூட்டணிக்கு முன்னால் !

இந்த நிரூபணத்துக்குப் பிறகும் பீகாரில் போன்று பொதுஜன இயக்கங்கள் இதர மாநிலங்களுக்கும் பரவ வேண்டுவது அவசியம் தானா என்பதை ஜெயப்பிரகாசர் யோசிப்பது நலம். அவசரகாலச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும், தேர்தல் முறைகளில் சீர்திருத்தம் வேண்டும் என்பதில் ஜே. பி. அவர்களுடன் நல்லிதயம் படைத்த அனைவரும் ஒத்துப் போவார்கள். ஆனால் இவற்றை ஜனநாயக ரீதியிலேயே வெற்றி பெற்று நடத்திக்கொள்ள வாய்ப் பிருக்கும் போது போராட்டம் எதற்கு? அது நாட்டில் ஒரு பொறுப்பற்ற சூழலைத் தொழிலாளி முதல் உயர் அதிகாரி வரை சகலரிடத்திலும் வளர்த்து வருகிறதல்லவா ? சுதந்திரப் போராட் டத்துக்கும் சுதந்திர இந்தியாவில் போராட்டத்துக்கும் நிறைய வித்தியாசம் உண்டு. முந்தைய பாணி போராட்டம் இன்றுஉதவாது.

புரட்சி, போராட்டம், இயக்கம் ஆகியவை மூலம்தான் அதிகார வெறியும் ஆணவமும் படைத்த அரசைப் பணியச் செய்ய முடியும் என்பது வாஸ்தவம்தான். ஆனால் மக்களைக் கவர எதிர்க் கட்சிகளின் ஒத்துழைப்பும் நல்ல மாற்றுத் திட்டமும் போதும்.

ஜெயப்பிரகாசர் மக்களை வெல்ல முயலட்டும்; ஆணவம் மிக்க இந்திரா அரசைப் பணிய வைப்பதை மக்கள் தேர்தல் சமயத்தில் கவனித்துக் கொள்வார்கள்.

ஜே. பி. அவர்கள் அஞ்சுவது போல் தேர்தலே நடக்காமல் போய்ப் பங்களா தேசப் பாணி சர்வாதிகாரம் இந்தியாவிலும் ஒரு வேளை தலையெடுக்குமானால் அப்போது புரட்சிக்கும் மக்கள் இயக்கத் துக்கும் அவசியம் ஏற்படலாம் ; இப்போது அல்ல.


கூட்டணி வெற்றி - 2

பாராளுமன்றத்திலும்கூட கம்யூனிஸ்டுகள் அல்லாத எதிர்க் கட்சியினர் இணைந்து செயல்படத் தொடங்கியிருக்கிறார்கள். ராஷ்டிரபதி உரையின்போது வெளிநடப்புச் செய்தார்கள்.

மேற்படி உரை விலைவாசிகள் இறங்கிவிட்டதாகவும் ஊழல் ஒழிந்து போனதாகவும் உற்பத்தி அதிகரிப்பதாகவும் பாவலா காட்டிவிட்டுப் பாகிஸ்தானுக்கு அளிக்கப்படும் அமெரிக்க ஆயுத உதவியைப் பெரிதுபண்ணி, ''ஐயோ ஆபத்து!'' என்று அலறுகிறது.

மக்களுக்கு இப்படிப் பூச்சாண்டி காட்டி, வயிற்றுப்பாட்டுக்கு வழி செய்யாத குறையை மூடி மறைக்கும் ராஷ்டிரபதி உரையை எதிர்க்கட்சிகள் பகிஷ்கரிக்காமல் வேறென்ன செய்வது !

இந்திரா அரசின் சார்பில் தயாரித்தளிக்கப்பட்ட ஓர் அபத்த உரையை வாசித்துவிட்டுப் போய்ச் சேர்ந்தார் ராஷ்டிரபதி. அவர் கடமை தீர்ந்தது. பாராளுமன்ற எதிர்க்கட்சியினரின் கடமை ஆரம்பமாகிறது. முட்டுக்கட்டை போடுவதில் மட்டும் கவனம் செலுத்தாமல், ஆர்ப்பாட்டங்களுக்கும் நாடக பாணி நடத்தைக்கும் மட்டும் முக்கியத்துவம் தராமல் எதிர்க்கட்சிகளின் கூட்டணி ஆக்க பூர்வமான ஆற்றலையும் காண்பிக்கட்டும்.


சர்வதேச மாதர் வருடம்
ஆரம்பம்!
நாயக்
பருவா
விசேஷ அந்தஸ்து!
ஷேக் அப்துல்லா

என்ன சேதி?

'ஆ' என்றால் வேலைநிறுத்தம்!

காந்தீயம் பாப்பும் காமராஜர்

நடக்கிற காரியமா?

சர்வாதிகாரப் போக்கு

கவர்னரே! சும்மா இரும்!

முத்துமணிகள்

திரும்பிய பக்கமெல்லாம் வேலைநிறுத்தமாக இருக்கிறது. வேலூர் ஆஸ்பத்திரியில், தமிழக அரசு தலைமைச் செயலகத்தில், இந்திய உணவுக் கார்ப்பொரேஷனில், இப்போது ரிஸர்வ் பாங்கில்!

தமிழகத் தலைமைச் செயலகத்தில் போராட்டம் வாபஸ் வாங்கப் பெற்றுப் பேச்சு வார்த்தைகள் தொடங்கியுள்ளதை வரவேற்று வாழ்த்துகிறோம்.

ரிஸர்வ் பாங்க் அதிகாரிகளின் போக்கை வன்மையாகக் கண்டிக்கிறோம். கோரிக்கைகளில் நியாயம் இருப்பதால் போராட்டம் நியாயமாகிவிடாது. மேஜை நாற்காலிகள் துடைக்க முடியாது என்று அட்டெண்டர்கள் கூறுவதும், மேஜை துடைக்காவிடில் வேலை செய்ய முடியாது என்று அதிகாரிகள் பேசுவதும் அநாகரிகம் மட்டுமல்ல, அக்கிரமம்கூட. நாட்டின் இன்றையப் பொருளாதாரச் சூழல் இத்தகைய விபரீத விளையாட்டுக்களுக்கு இடமளிப்பதாயில்லை. தூசு தட்ட முடியாதென்று கூறுமாறு அட்டெண்டர்களைத் தூண்டிவிட்டதே அதிகாரிகள்தான் என்று பேசப்படுவதில் உண்மை இருக்குமானால் அது தேசத் துரோகத்துக்கு ஒப்பான பெருங் குற்றமாகும்.

தொழிற்சங்க நடவடிக்கைகள் ஊழியர்களின் நலனுக்காக ஏற்பட்டவைதாம். ஆனால் அது தேச நலனுக்குக் குந்தகமாக மாறும்போது அரசு கடுமையாக நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.

* * *

தேர்தல் நெருங்குவதை உத்தேசித்துக் காமராஜர் அடிக்கடி சுற்றுப்பயணங்கள் மேற்கொள்கிறார். வயது காரணமாகத் தேகம் சற்றுத் தளர்ந்திருந்தாலும் மனோதிடம் சிறிதும் இழக்காமல் கடமையே கண்ணாகச் செயல்படுகிறார். செல்லுமிடமெல்லாம் அமோக வரவேற்பைப் பெற்று வருகிறார். தேர்தல் நிதி வசூலும் நடக்கிறது. ஆட்சி அதிகாரம், பண பலம் என்ற இரட்டை ஆயுதங்களைக் கொண்டுள்ள இந்திரா அம்மையாரை எதிர்க்க அவருக்கு மக்கள் வாரி வழங்க வேண்டும், அன்பைச் சொரிய வேண்டும், உழைப்பை நல்க வேண்டும்.

காமராஜர் தாம் செல்லுமிடங்களிலெல்லாம் காந்திய நெறிகளை நினைவூட்டி வருகிறார். காந்திஜி கூறியவை சாசுவதமான உண்மைகள் என்பதைப் புரிந்து கொள்ளாமல் இந்திரா அம்மையார் காந்திஜி இன்று இருந்தால் நமது கொள்கைகளை மாற்றிக் கொண்டிருப்பார் என்று கூறி வருகிறார். ஆனால் இந்திராவைவிட மக்கள் காந்தியத்தை நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர் உபதேசங்களை அரசு காற்றில் பறக்க விட்டதால் ஏற்படும் தொல்லைகளை அன்றாடம் அனுபவிப்பவர்களாயிற்றே. அவர்கள் காந்தியத்துக்கு எதிராக அமையும் எந்த அணியையும் ஆதரிக்கமாட்டார்கள்.

* * *

பாலாற்றின் அடிவாரத்திலிருந்து நீர் எடுத்துச் சென்னைக்கு அனுப்பும் திட்டம் வீராணம் திட்டத்தின் ஓர் அங்கமாகும். இப்போது உள்ள தண்ணீர் பஞ்சத்தை உத்தேசித்துப் பாலாறு திட்டத்துக்கு முக்கியத்துவம் தந்து துரிதப்படுத்த முனைந்திருக்கிறது தமிழக அரசு. என்றாலும் இது காலங் கடந்த

ராஜாஜி சிந்தனை

சோஷலிச வரிகள்!

64—65ம் ஆண்டில் மொத்த வருமான வரி 294 கோடி. ஆனால் இதே கால கட்டத்தில் அரசு வசூலித்துள்ள மறைமுக வரிகளோ (சுங்க வரிகள், எக்ஸைஸ் வரிகள்) 1247 கோடி. அதாவது வருமான வரியைப் போல் நாலு மடங்குக்கும் அதிகமான வரிகளைப் பண்டங்கள் மீதாக அரசு விதித்திருக்கிறது. இது சோஷலிஸ கோஷத்துக்கு நேர் முரணானது.

மறைமுக வரிகள் ஏழை மக்கள் தலையில் நேரடியாக விழுகின்றன. ஆனால் அது அவர்களுக்குத் தெரிவதில்லை. ஒருவன் கெரொஸின் வாங்கினால் விலையில் 45 சதம் வரி. சர்க்கரை வாங்கினால் கொடுக்கும் காசில் 50 சதம் வரி. தீப்பெட்டி வாங்கினால் விலையில் 62 சதம் வரி. இதைச் சோஷலிஸம் என்பதா?

எக்ஸைஸ் வரிகள் கடந்த பதினைந்து ஆண்டுகளில் 67 கோடியிலிருந்து 827 கோடியாகவும் சுங்க வரிகள் 157 கோடியிலிருந்து 420 கோடியாகவும் உயர்ந்துள்ளன!

சுயராஜ்யா மார்ச் 5, 1966

விழிப்புணர்ச்சியாகவே படுகிறது. அடுத்த மழைப் பருவத்துக்குள் பாலாறு நீராவது, சென்னைக்கு வரவாவது ? நடக்கிற காரியமா?

* * *

காஷ்மீர் குறித்து ஷேக் அப்துல்லாவுடன் மத்திய அரசு என்ன உடன்படிக்கைகள் செய்துகொண்டது என்பது இன்றளவும் மர்மமாகவே இருக்கிறது. மக்கள் மன்றத்தில் இந்த விஷயத்தை விவாதிக்காமலேயே ஷேக் அப்துல்லாவை ஆட்சிப் பொறுப்பு ஏற்கச் சொல்வதும் அவரைப் பிரதம மந்திரி என்று அழைக்க அனுமதி அளிப்பதும் உசிதமாகத் தோன்றவில்லை. காஷ்மீரத்துக்கு என்னென்ன சலுகைகள் உண்டோ, அவ்வளவையும் தமிழகத்துக்கும் வழங்க வேண்டும் என்று இங்கு ஒரு 'ஷேக் அப்துல்லா' ஏற்கனவே குதிக்க ஆரம்பித்துவிட்டார்.

காஷ்மீர விஷயத்தில் உடன்படிக்கை என்னவாயிருந்தாலும் அதைப் பாராளுமன்றமும் மக்களும் அறியாமல் ரகசியமாக நிறைவேற்றப் பார்ப்பது 'வடிகட்டின சர்வாதிகாரப் போக்கு ஆகும்.


* * *

கோவில்களையும் அரசாங்க உடைமையாக்கிவிட வேண்டுமாம்!

உத்தரப் பிரதேச கவர்னர் திரு சென்ன ரெட்டியின் மூளையில் இந்த அபார யோசனை உதித்திருக்கிறது.

கவர்னருக்கு வேலை இல்லையென்றால், சும்மா இருக்கலாம். ஏன் இப்படி அபத்தமான யோசனைகளை உதிர்த்துத் தங்களுக்கும்


வெ. ஜானகி


''தூரன்''


கோமி. மணிசேகரன்

தாங்கள் வகிக்கும் பதவிக்கும் அவப் பெயரைத் தேடிக் கொள்கிறாரோ, தெரியவில்லை.

கோவில் வேத, ஆகம சாஸ்திரங்களில் நம்பிக்கையும், தெய்வ வழிபாட்டில் நம்பிக்கையும் உள்ளவர்களால் நிர்வகிக்கப்பட வேண்டும். ஒன்றிலும் நம்பிக்கையில்லா அரசாங்கம் நிர்வாகப் பொறுப்பை ஏற்றால், கோவில் நிர்வாகம் சீர்கெட்டுக் கோயில்கள் பாழாய்ப் போகும்.

மக்களின் சத்தியம், நேர்மை, கட்டுப்பாடு ஆகிய நற்பண்புகளை வளர்ப்பன ஆலயங்களே. அரசாங்கத்தின் வழக்குமன்றங்களும் காவல் துறையும் மட்டும் இதைச் சாதிக்க முடியாது.

* * *

ஒவ்வொரு மாதமும் பல்வேறு பத்திரிகைகளில் வெளியாகும் சிறுகதைகளை ஆராய்ந்து, சிறந்த ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் பணியை இலக்கிய சிந்தனை என்ற அமைப்பு கடந்த சில ஆண்டுகளாகச் செய்து வருகிறது.

சென்ற 1974ம் ஆண்டில்இந்த அமைப்பு மூன்று சிறுகதைகளைக் கல்கிப் பத்திரிகையிலிருந்து தேர்ந்தெடுத்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடனும் பெருமிதத்துடனும் தெரிவித்துக் கொள்கிறோம். திரு கோமி. மணிசேகரன் எழுதிய 'சிறிய வயதில் பெரிய அனுபவம்' வெ. ஜானகி அவர்கள் எழுதிய 'நீலவானத்தில் வெள்ளை நாரைகள்', திரு 'தூரன்' எழுதிய 'சிவப்புச் சட்டை' ஆகியன இந்தப் பெருமையைப் பெற்றன. இக்கதைகள் ஜூன், ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் வெளியிடப் பெற்றன.



சென்னை வைஷ்ணவக் கல்லூரி மாணவர்கள் தங்கள் கலைத் திறனைக் காட்டிப் பல சிற்ப சித்திரங்களை உருவாக்கி அவற்றைக் கண்காட்சியாக வைத்திருந்தனர். அவற்றுள் ஒன்று இந்த விநாயகர். களிமண்ணால் ஆனது; ஆயின் கருங்கல்லில் செதுக்கியது போன்று தோற்றமளிப்பது.



குமாரி சோபனாவின் பரத நாட்டிய நிகழ்ச்சி ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்வாமி சபாவில் நடந்தது. பரத நாட்டிய நுணுக்கத்துடன் நிகழ்ச்சி சிறப்பாயிருந்தது. நடன நிகழ்ச்சியின் போது ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்வாமி சபாவின் நீண்டகால கலைப் பணியைப் பாராட்டித் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் ஒரு சிறப்புப் பரிசை வழங்கியது.

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி
சங்கராசாரிய சுவாமிகள்

எனக்கு ஏன் கனகாபிஷேகம்? (3)



இந்த உலக வாழ்க்கை ஒரு யாத்திரையாக நடக்கிறது. யாத்திரை என்றால் ஒரு வழி வேண்டும். இதை 'அத்வா' என்பார்கள். அந்த வழி முடிகிற இடம், அதுதான் அக்கரை.

இதை 'பாரம்' என்பார்கள். வேத தர்மத்தின் வழியில் நாம் சென்றால் முடிவில் அக்கரையாக, லட்சியமாக இருப்பது நாராயணனே. அத்தனை நமஸ்காரங்களையும் அவன் பாதத்தில்தான் செலுத்த வேண்டும்.

அப்படிப் பகவத்பாதமாக இருக்கிறவர் நம் ஆசார்யாள். நமஸ்காரங்களையெல்லாம் நாராயணனிடமே அனுப்பிவைக்கிற மாதிரி எனக்குப் பலவிதமான கனகாபிஷேகங்கள் பண்ணுகிறீர்களே—தேங்காய் பழம், வரவேற்புரை, ஸ்தோத்திரம், ஹாரங்கள், அசல் பொன்மாரி என்று பொழிகிறீர்களே இவற்றை எல்லாம் நான் ஸ்ரீ பகவத்பாதர்களுக்கே அர்ப்பணிக்கிறேன். நீங்கள் எனக்கு ஸ்தூலமாக இப்படியெல்லாம் கனகாபிஷேகம் பண்ணும்போது, இவற்றையே நான் மானசீகமாக ஆசாரியாளுக்குக் கனகாபிஷேகமாகச் செய்கிறேன். பரம தரித்திரங்களுக்குச் சம்பத்து வருமாறு கனகதாரை பெய்வித்த அந்த வள்ளலுக்கே இந்த அபிஷேகங்கள் எல்லாம் உரித்தானவை. இவற்றை நான் அவருக்கு அர்ப்பணிக்காவிட்டால், இந்த அர்ப்பண புத்தி என்னை இயக்கி வைக்காவிட்டால், அது அடியோடு நன்றிகெட்ட செயலேயாகும். அவரது நாமத்தைத் தரித்துக் கொண்டிருக்கிறேன் என்ற ஒன்றுக்காக எனக்கு நடக்கிற பெருமைகளை அவருக்கே சமர்ப்பிக்காவிட்டால் அது நன்றிகொன்ற தன்மைதான்.

இந்த ஒரு நாள் நடந்த கனகாபிஷேகம் மட்டுமல்ல; பிரதிதினமும், பிரதி க்ஷணமும் அவருடைய ஆக்ஞைப்படி நடந்து, அதாவது ஸ்வதர்மப்படியான வேத கர்மத்தைச் செய்து, அவருக்கு அனவரத கனகாபிஷேகம் பண்ணிக் கொண்டேயிருக்க வேண்டும்.

குழந்தைகளாகிற நாம் அவருடைய ஆக்ஞைப்படி நடந்து கொண்டு ச்ரேயஸை அடைந்தால் அதையே அவர் தமக்குக் கனகாபிஷேகமாகக் கொள்வார். இதனால் அவருக்கும் கனகாபிஷேகம்; லோகம் முழுவதற்கும் சதுர்வித புருஷார்த்தங்களின் நிறைவு என்கிற கனகாபிஷேகம். இதைக் 'கனகம்' 'பொன்' என்று சொல்லிவிட்டால் போதுமா? அதுகூடப் போதாது. எந்த ஓர் இனத்திலும் துறையிலும் ரொம்பவும் உசத்தியாக இருப்பதைப் 'பொன்' என்று சொன்னால் நமக்குத் திருப்தி வந்துவிடுவதில்லை. அதைவிட உயர்வாக, 'ரத்தினம்' என்றே சொல்கிறோம். ஸ்திரீ ரத்தினம், கவிரத்தினம், வைத்திய ரத்தினம், சங்கீத ரத்தினம், மனிதகுல ரத்தினம், பாரத ரத்தினம் இப்படி ரத்தினமாகவே சொல்கிறோம். அறம் — பொருள் — இன்பம் — வீடு — அனைத்தும் அனைவருக்கும் நிறைந்து பொழிவதைக் கனகாபிஷேகம் என்பதைக் காட்டிலும் சர்வலோக ரத்னாபிஷேகம் என்றே சொல்ல வேண்டும்.

வேதத்தில் சொல்லியிருக்கிற கர்மங்களை அநுஷ்டித்து, இதையேசாதனமாகக்கொண்டு ஈசுவர பூஜை செய்ய வேண்டும் என்று ஆசாரியாள் ஆக்ஞையிட்டதாகச் சொன்னேன். அப்படியானால் ஈசுவர பூஜைதான் நம் முடிந்த முடிவான லட்சியமா? இல்லை. கர்மம் என்கிற சாதனத்தால் சாதிக்கிற லட்சியமான இந்த ஈசுவர பூஜையும் இன்னொரு லட்சியத்துக்குச் சாதனமாகவே ஆகிறது. முடிந்த முடிவான அந்த இன்னொன்று என்ன? அதைக் குறித்து ஆசார்யாளின் ஆக்ஞை என்ன? இதைத்தான் ''ஸோபான பஞ்சக''த்தின் கடைசி மூன்று வார்த்தைகளில் சொல்கிறார்: 'அத பரப்ரஹ்மாத்மனா ஸ்தீயதாம்.'

''கர்மத்தைக் கடமையாகப் பண்ணு; அதன் பலனில் இச்சை வைப்பதை விடு; பாபக் கூட்டத்தைத் தூரத்து; ஸத்ஸங்கத்தில் சேரு'' என்றெல்லாம் மேலேமேலே சொல்லிக் கொண்டே போய், ''அப்புறம் பரப்பிரம்மம் ஆகிற ஆத்மாவிலேயே அப்படியே நிலைத்து நின்றுவிடு'' என்று முடிக்கிறார்.

ஒரே பரம்பொருள் இத்தனையும் ஆகியிருக்கிறது. 'இத்தனை'யில்தான் நாம் மனதைச் செலுத்திக் கொண்டிருக்கிறோம். அந்த ஒரே ஒன்றைப் பிடித்துக் கொள்ள வேண்டும். அதுவேதான் நாமாகியிருக்கிறது என்பதை அநுபவத்தில் புரிந்து கொண்டுவிட்டால், அந்த நிலையே மோக்ஷம். பிரம்மத்திலேயே அதுவாக நின்று விடுவோம்.

'எப்படி இந்த அநுபவம் என்கிற லட்சியம் கைகூடும்?' என்றால் அதற்கே ஈசுவர பூஜை என்ற சாதனத்தை ஆசார்யாள் சொல்லியிருக்கிறார். பரமேசுவரனை ஆராதிப்பதன் விளைவாக— பூஜாபலனாக — பரம சத்தியமான பிரம்மத்தை அநுபவத்தில் உணருகிறதற்கு வழியான சித்த சுத்தி, மன ஒருமைப்பாடு ஆகியன உண்டாகும்.

கர்மத்தால் செய்கிற பூஜை, பக்தியோடு தனியாக பூஜை என்று செய்கிற கர்மம், இவற்றோடு வேறு சில அங்கங்களையும் படிப்படியாகப் போட்டு இந்த உயர்ந்த நிலைக்கு — அதற்கு மேலே எதுவும் இல்லை என்ற நிலைக்கு— கொண்டு விடுகிறார் ஸ்ரீ ஆசார்யாள். இப்படிப் படிக்கட்டு மாதிரி கொஞ்சம் கொஞ்சமாக ஏற்றிவிடுவதால்தான் இந்த உபதேசத்துக்கே ''ஸோபான பஞ்சகம்'' என்று பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. ஸோபானம் என்றால் படிக்கட்டு. இவ்வரிசையில் மற்றப் படிகள் என்னென்ன? ''நல்ல வித்வானை அடைக்கலமாகக் கொள்; அவருடைய பாதுகைகளைச் சேவி'' என்றெல்லாம் சொல்கிறார். ''வித்வான்'' என்றால் ''ஸத்வித்வான்'' — அதாவது ஒரே சத்தியமாக இருக்கிற பிரம்மத்தை அநுபவ அறிவால் அறிந்துகொண்ட ஞானி என்று பொருள்.

ஆசிரியர் ஆர்.வி.

சுயராஜ்யா, கல்கி பத்திரிகைகளில் எத்தனையோ பேரறிஞர்கள் எழுதியிருக்கிறார்கள் என்பது ஒருபுறமிருக்க, மேதைகள் பலர் நேரடித் தொடர்பு கொள்ளும் பாக்கியத்தையும் இந்த ஸ்தாபனம் பெற்றிருக்கிறது.

ஆரம்ப நாளிலிருந்து ஆசிரியர் கல்கி அவர்களுக்கும் ஸ்ரீ சதாசிவம் அவர்களுக்கும் பக்கத் துணையாகவும் ஆலோசகர்களாகவும் ராஜாஜியும் ரசிகமணி டி.கே.சி.யும் இருந்து இந்த நிறுவனத்தின் கௌரவத்தை வளர்த்தார்கள். உன்னதக் கோட்பாடுகளுடன் மிக உயர்ந்த பத்திரிகையாகக் கல்கி வெளிவர உதவினார்கள்.



சில காலத்துக்குப் பிறகு திரு காஸா சுப்பாராவ் அவர்கள் நடத்தி வந்த சுயராஜ்யா பத்திரிகையைக் கல்கி ஸ்தாபனமே ஏற்று நடத்தும் பெரும் பேற்றை அடைந்தது.

சுயராஜ்யாவின் ஸ்தாபக ஆசிரியர் காஸா ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு அச்சமற்ற பேனாவால் அற்புதமான கருத்துக்களை எழுதி வந்தார்கள். ராஜாஜியின் பொன்னுரை மொழிகளை, சாசுவதமான உண்மைகளை ஏந்தி வரும் ஏடாக சுயராஜ்யா திகழ்ந்தது. அந்தக் கருத்துக்களைக் கல்கி நேயர்களும் தமிழில் படித்து மகிழ்ந்தார்கள். நாட்டின் நிலை பற்றிக் கவலையோடு எண்ணி வருந்தவும் செய்தார்கள்!

உன்னதமான அந்தத் தலைமை காஸா அவர்களின் மறைவுக்குப் பிறகும், போதன் ஜோஸப், பிலிப் ஸ்ப்ராட் ஆகிய ஆசிரியர்களின் பொறுப்பில் நீடித்து வந்தது.

பின்னர் திரு க. சந்தானம் அவர்களை சுயராஜ்யா ஆசிரியராகப் பெறும் அதிர்ஷ்டத்தையும் இந்த நிறுவனம் அடைந்தது. ராஜாஜி அவர்களின் விருப்பத்துக்கு இசைந்து திரு சந்தானம் ஆசிரியராக இருக்கச் சம்மதித்தார். சுயராஜ்யா பத்திரிகையைக் கட்சி சார்பற்றதாக, கண்ணிய மிக்கதாக நாட்டு நலனுக்கு அரிய யோசனையை வெளியிடுவதாக நடத்தி வந்திருக்கிறார்.

எப்பேர்ப்பட்ட மனிதர்கள்! எத்தகைய ஆழ்ந்த சிந்தனைகள்! அவற்றை அச்சமற்ற அழகுடன் வெளியிடும் பாங்குதான் எவ்வளவு ரசிக்கும்படி இருந்தது! நினைக்கும்போதே தேகம் புல்லரிக்கிறது; மனம் பெருமிதத்தால் பூரிக்கிறது!

திரு க. சந்தானம் என்பது பிராயம் நிரம்பப் பெற்றுத் தற்போது ஆசிரியர் பதவியிலிருந்து ஓய்வு பெற எண்ணிய போது அவருக்குப் பிறகு பொறுப்பேற்க அதே அளவில் பெருந்தன்மையும், கண்ணியமும் பிராபல்யமும் உள்ள ஒருவரைப் பற்றி யோசிக்கலானோம். நிர்வாகிகள் அனைவருக்கும் ஒருமுகமாக ஒரேசமயத்தில் மனத்தில் பளிச்சிட்ட நபர் திரு ஆர். வேங்கடராமன் அவர்கள்தான். பல்வேறு அலுவல்களை உடைய அவர் மறுதளிக்காமல் ஒப்புக்கொள்ள வேண்டுமே என்ற கவலை சீக்கிரமே நீங்கியது.

திரு ஆர். வி. அவர்கள், ராஜாஜியின் ஆசியையும், அன்பையும் பெற்றவர் என்பதுடன் காஞ்சிப் பெரியவரின் பூரண அனுக்கிரகத்துக்கும் பாத்திரமானவர். அத்தகையவர் சுயராஜ்யா பத்திரிகையின் ஆசிரியராக விளங்குவது கல்கி பத்திரிகைக்கும் பேருதவி, பெருமதிப்பு என்பதைக் கூறத் தேவையில்லை.

தமிழகத்தில் தொழிலமைச்சராக இருந்து அரிய பெரிய சாதனைகளைப் புரிந்த திரு ஆர். வி., மத்திய அரசிலும் பெரும் பதவிகளை வகித்தவர். உலக நாடுகள் பலவற்றிலும் செல்வாக்குப் பெற்றவர். அரசியல், பொருளாதாரத் துறைகளில் அவர் பெற்றுள்ள அனுபவங்கள் சுயராஜ்யா — கல்கி பத்திரிகைகளுக்கும் அவற்றின் மூலம் நாட்டுக்கும் பயன் தருவனவாக விளங்கும்.

ஆர். வி. அவர்கள் தலைமையில் சுயராஜ்யா முன்னெப்போதும் போல் தர்மத்துக்கும் தேச நலனுக்கும் உழைக்கும்; நல்ல மனிதர்களுக்கு ஆதரவு அளிக்கும்.

மங்களகரமான இந்தச் செய்தியை கல்கி, சுயராஜ்யா அன்பர்களுடன் பகிர்ந்து கொண்டு மகிழ்கிறோம்.

பணமும் அனுபவமும்!



இரண்டு நண்பர்கள் சந்தித்தார்கள்.

ஒருவர்: ஆமாம். இப்பொழுது என்ன பண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்?

இன்னொருவர்: இப்பொழுது சும்மாதான் இருக்கிறேன். ஆனால் சீக்கிரமே இன்னொருவரோடு கூட்டாளியாகச் சேர்ந்து தொழில் நடத்தப் போகிறேன்.

ஒருவர்: நீங்களும் பணம் போடுகிறீர்களா?

இன்னொருவர்: நான் பணம் போடப் போவதில்லை. என் கூட்டாளி பணம் போடப் போகிறார். நான் என் அனுபவத்தைப் போடப் போகிறேன்.

ஒருவர்: பிறகு?

இன்னொருவர்: பிறகு என்ன? மூன்று வருடங்களுக்குப்பிறகு பார்த்தால் பணம் எனக்குக் கிடைக்கும். அனுபவம் அவருக்குக் கிடைக்கும்!

- நாடோடி



பிரிவுபசார விழா. அந்தக் கல்லூரியில் இருபத்தைந்து ஆண்டுகள் பணியாற்றிய புரொபசர் ஜெயராம் இன்று வேலையிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

பிரமுகர் வரிசை. வாழைத் தோரண, காகித மலர்களின் பின்னணியில் எதிர்காலத்தைச் சந்திக்கத் துடிக்கும் இளந் தலைமுறையின் பிரகாசமான முகங்கள். ஒலிபெருக்கியின் 'லல்லாலா....'

பாராட்டு மேடையில் உட்கார்ந்திருக்கிற புரொபசர், மீண்டும் ஒரு முறை—கண்ணுக்கு எதிரே, அறிவுக்கும் ஆதிக்கத்துக்கும் கட்டியம் கூறி நிற்கும் கம்பீரமான கல்லூரிக் கட்டடத்தைப் பார்க்கிறார். கண்ணீர் பொங்கிக் கொண்டு வருகிறது. துடைத்துக் கொள்கிறார்....

திரும்பவும் பார்க்கிறார். துடைத்துக் கொள்கிறார். திரும்பத் திரும்ப...

'இருபத்தைந்து ஆண்டுகள்...' நினைத்த மாத்திரத்தில் நெஞ்சமெல்லாம் விரிந்து குளிர்கிறது..... 'எத்தனை எத்தனை மாணவர்கள்.. எவ்வளவு சாமர்த்தியங்கள்; விவாதங்கள்; குறும்புகள்; ஹைஹைஹாக்கள்... இந்த மாணவ இனத்தின் குணும்சமே தனி...' நெஞ்சில் ஒரு சிலிர்ப்பு.

''மை டியர் ஸ்டூடண்ட்ஸ், உங்களையெல்லாம் பிரிந்து...'' குபுக்கென்று கண்களில் கங்கை பெருகி,. கன்னத்தில் வழிந்து கழுத்தில் சில்லிடுகிறது....

''....அறிவுப் பணியில் இருபத்தைந்து ஆண்டுகள் தோய்ந்து, ஆயிரக்கணக்கான அறிவுச் செல்வங்களைப் பாரதத் தாயின் இருக் கரங்களில் சமர்ப்பித்திருக்கும் புரொபசரின் சேவையை....''

''....'அன்ன யாவினும் புண்ணியங்கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்' இந்த வகையில் புரொபசர் ஜெயராம் அவர்கள் கட்டிக் கொண்ட புண்ணியங்கள் கோடானு கோடி என்று சொல்லி, இவ்விழாவில் உரையாற்ற வாய்ப்பளித்த...''

ஆயிரமாயிரம் பாராட்டுக்கள். பண முடிப்பு. நன்றி. 'ஜன கண மன....'

அவ்வளவுதான்; கூட்டம் கலைந்துவிட்டது.

'அவ்வளவுதான்....' புரொபசரால் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ள இயலவில்லை. தம்மையும் மீறி ''ஓ''வென்று கதறிவிடுவோமோ என்ற அச்சம்.

மேடையிலிருந்து கீழே இறங்குவதுதான் தாமதம்: ஆயிரமாயிரம் இளங் கரங்கள் சூழ்ந்து கொள்கின்றன....



நெடும்பயணம்

பிரேம் ஆனந்த்

போட்டிக் கதை - 24

''எல்லோருக்கும் போய்ட்டு வ...ரேன்!'' நெஞ்சு வெடித்து விடுமோ?

''சா....ர்'' — ஆங்காங்கே உருகும் இளங் குரல்கள். ('வார்த்தைகள் இத்தனை உருக்க மாகக்கூட ஒலிக்குமா !')

''அதோ... அதோ கார் நிற்குது சார்!'' என்று மாணவர் தலைவன் வந்து தழுவி, அழைத்துப் போய், காரில் ஏற்றி....

''பை....பை...''

"மறந்துட்டேளா?'' என்ற குரல்.

படுக்கையை விட்டு எழுந்து இந்நேரம் வரை சுவரில் இருந்த சுவாமி படத்தையே வைத்த விழி வாங்காமல் பார்த்துக் கொண் டிருந்த ஜெயராம் நிதானமாகத் திரும்பினார்.

பானுதான். குளித்த மேனியும், ஈரம் சொட்டும் கூந்தலுமாய், முகத்தில் புன்னகையைச் சுமந்து கொண்டு....

''எதை மறந்துட்டேன்?''

''விடியற்காலே அஞ்சு மணிக்கே எழுந்து உட்கார்ந்திருக் கேள்?''

''.......?''

''இன்னிக்குக் காலேஜ் போக வேண்டிய அவசியமில்லே!''

'' இனி என்றைக்குமே போக வேண்டிய அவசியமில்லே!'' — தழு தழுத்த குரல்.

துடித்துப் போய்க் கிட்டே வந்தாள் பானு. ''நா...நான் ஏதாவது மனசு புண்படும்படியா சொல்லிட்டேனா ?''

''அசடு, அசடு !'' — ஓர் அழகான புன்சிரிப்பு....

காலைக் கடன்களை முடித்துச் சாப்பிட்டும் ஆகிவிட்டது.

'எங்கே போவது ?'

தினசரி நடைமுறையில் திடீரென்று மாற்றம் ஏற்பட்ட தால் வந்த தடுமாற்றம் இது. ஜெயராமுக்குப் புரியவில்லை.

''தினம் காலமே அஞ்சு மணிக்கு எழுந்தா,பரக்கப் பரக்கக் குளித்து, அன்றையக் கல்லூரிப் பாடங் களைக் கவனித்து, அல்லது — டெஸ்ட் பேப்பர் திருத்தி, எட்டரையானால் லொங்கு லொங்கென்று பஸ் ஸ்டாப்புக்கு ஓடி....'' சற்றே நிறுத்திச் சொன் னாள் பானு: ''இன்னிக்கு வீட்டில்தான் இருங்க ளேன்.''

'' இருக்கேன்!'' — ஒரு குழந்தைத்தனமான சிரிப்பு.

புரொபசர் அன்று முழுதும் வீட்டில்தான் இருந்தார். யார்யாரோவந்தார்கள்; விசாரித்துவிட்டுப்போனார்கள். மாலை ஐந்து மணிக்கெல்லாம் கால்கள் துருதுருக்க ஆரம்பித்து விட்டன. எத்தனை நேரம் வீட்டில் சிறை இருக்க முடியும் !

'' நான் கொஞ்சம் வெளியில் போய் வரேன்'' என்று புறப்பட்டு விட்டார்.

நீண்ட சாலை...

கல்லூரி முடிந்ததும் வரும் இளம் சமுத்திரம். மாலைக் கல்லூரிக்கு விரைந்து கொண்டிருந்த உத்தியோகஸ்தர்கள். கார்கள்... முனிசிபாலிடி குப்பை வண்டியை ஞாபகப்படுத் துகிற டவுன் பஸ்கள்...

நடந்தார்.

இலேசாகக் களைப்பு ஏற்பட்ட பிறகுதான் ரொம்ப தூரம் வந்துவிட்டோம் என்று உணர்ந்தார். ''ஒரு காப்பி சாப் பிட்டால் தேவலாம்.''

எதிரே தென்பட்ட சின்ன ஹோட்டலில் நுழைந்து உட்கார்ந் தார்.

மெனு போர்டைப் பார்த்த வண்ணம், ''ஆமவடை... பஜ்ஜி... மைசூர் பாகு... ஆனியன் மசாலா தோசை...'' என்று பொரிந்து தள்ளிய சர்வர், அவரது முகத்தைத் திரும்பிப் பார்த்தான். ஸ்தம் பித்துப் போய் விட்டான்.

வேகத்தை வென்றனர்!



பாத்தியா மிராண்டோ


சோழவரம் விமானதளப் பாதையில் ஐம்பது தடவை வேகமாகச் சுற்றி வந்து மோட்டார் சைக்கிளுக்கான 'கிராண்ட் பிரிக்ஸ்' பரிசை இலங்கை பாத்தியா மிராண்டோ பெற்றார்!

பிரும்மச்சாரி இளைஞரான பாத்தியா மிராண்டோவிடம் ''மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் நினைவுகூரும்படியான சம்பவம் ஒன்றைக் கூறுங்கள்!'' என்கிறோம்.

''குர்னகலா மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் படுவேகமாகச் சென்ற நான் ஒரு விளக்குக் கம்பத்தில் மோதி விட்டேன். ஏழு மாதங்கள் ப்ளாஸ்டர் கட்டோடு ஆஸ்பத்திரியில் கிடந்தேன். இந்தக் கசப்பான நிகழ்ச்சியை நான் மறக்க இயலாது!''

அத்தனை கசப்பான நிகழ்ச்சிக்குப் பிறகும் மறுபடியும் மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் கலந்து கொள்ள முன் வந்திருக்கும் அவரை வியப்புடன் நோக்கி, ''கிராண்ட் பிரிக்ஸ் வெற்றி பெற்றதும் உங்கள் மன நிலை எப்படியிருந்தது என்று தெரிந்து கொள்ளலாமா?'' என்று கேட்கிறோம்.

''நான் இந்தச் சோழவரம் மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் கலந்து கொள்வேனோ மாட்டேனோ என்பதே கடைசிவரை 'சஸ்



கொண்டல் மகாராஜ்குமாரின் ஜாகுவார்

பென்ஸ்' ஆக இருந்தது. எனது பதினேந்து வருடத் தோழனான ஜப்பானிய மோட்டார் சைக்கிள் 'ஹோண்டா'வை விமானத்தில் அனுப்புவதில் பிரச்னை! என் சகோதரர் அசோகா மிராண்டோ எனது வாகனம் இந்தியா வந்தடையப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார்! 'கிராண்ட் பிரிக்ஸ்' வெற்றி இலங்கையில் 1972-ம் வருஷம் எனக்குக் கிடைத்தது. பிறகு இப்போது இந்தியாவில் கிடைத்துள்ளது!'' என்று கூறுகிறார் சாம்பியன் பாத்தியா மிராண்டோ.

இவரது தந்தை மோட்டார் சைக்கிள் பந்தயங்களில் பெரும்புகழ் பெற்றவர். சகோதரருக்கும் இதில் நிரம்ப ஆர்வம் உண்டு.

* * *

□ கொண்டல் மகாராஜ் குமாரின் 'ஜாகுவார்' ஸ்பெஷல் அத்தனை கார்களையும் பாய்ந்து கடந்து 'கிராண்ட் பிரிக்ஸ்' வெற்றி பெற்றது! இவர் 'கிராண்ட் பிரிக்ஸ்'ஸில் மூன்றாவது வெற்றியைச் சோழவரத்தில் ஸ்தாபித்திருக்கிறார்!

□ என். ஜயசந்திரன் சென்ற கார் விபத்துக்குள்ளாகி, பிரேக் பிடிக்காமல் போய்விட்ட பிறகும் அவர் சமாளித்துக் காரை ஓட்டி இரண்டாவது பரிசு பெற்றார்!

□ அறுபத்தொரு வயதான நிக்கல்சன் பதற்றப்படாமல் இந்தக் கிராண்ட் பிரிக்ஸில் கார் ஓட்டி, 'கார்ப் பந்தய விளையாட்டு வீரர்' கோப்பையைப் பெற்றார்! —குண்டுமணி

''சார்.... நீங்களா ?''

நொடிக்குள் அடையாளம் கண்டு கொண்டு சிலிர்த்தார் புரொபசர். ''ரங்குவா !''

''சார் நீங்க ?''

''நேற்று ரிடையராயிட்டேன்!'' அவரால் இப்படித்தான் சொல்ல முடிந்தது. ''ஆமா நீ..... பஸ்ட் இயரோடு காலேஜை விட்டுப் போயிட்டே இல்லே?''

''ஆமாம், சார்!'' ஆழமான பதில்.

''பி.ஏ. சேர்ந்த மறு வாரமே ஹார்ட் அட்டாக்குக்கு அப்பாவைப் பறி கொடுத்து விட்டு... காலேஜ் கட்..... இங்கேதான் ஹோட்டல் நடத்தறியா? எனக்குத் தெரியாது !''

''ரொம்ப நாளா நடத்தறேன் சார். ஆனல், இந்த இடத்துக்கு மாறிக் கொஞ்ச நாள்தான் ஆகிறது..... கல்லாவில்தான் உட்கார்ந்திருப்பேன்னு கிடையாது. கூட்டம் வந்துட்டா இடீர் இடீர்னு சர்வராயும் மாறிப்பேன்'' என்றவன் ''கொஞ்சம் இருங்க சார்!'' என்று உள்ளே ஓடினான்.

திரும்பி வந்தவன் கையில் லட்டு, பஜ்ஜி என்று....


''எனக்கு ஒரு காப்பி போதுமே...!''

''உங்க ஸ்டூடண்ட் வைத்திருக்கும் ஹோட்டல் பலகாரம் எப்படின்னு தெரிஞ்சுக்க வேண்டாமா ?'' சிரித்துவிட்டான்.

சிரித்துக் கொண்டே அவர் சாப்பிட்டு முடித்தார்.

ரங்குவிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்ட போது மனத்துக்குள் இதே தவிப்பு: 'அப்படி ஒரு துரதிருஷ்டம் குறுக்கிடலேன்னு இந்நேரம் ரங்குவும் ஒரு பட்டதாரி ஆகியிருப்பான்.'

சாலைத் திருப்பத்தில் திரும்பிய புரொபசர் திடுக்கிட்டார் —



இன்று உங்கள் குழந்தைக்கு–
புதிய
டெண்டெர் கேர்
நேற்று வரை வந்த பாப்பர் செய்யப்படாத பவுடர்கள் குழந்தையின் மேனியைப் புண் படுத்தக் கூடும். ஆனால் புதிய டெண்டெர் கேர் சரியாக பாப்பர் செய்யப்பட்டது. குழந்தையின் சருமத்தைச் சிறிதும் புண்படாமல் பாதுகாக்கிறது. அதன் நிகரற்ற வியர்வை உறிஞ்சும் சக்தி குழந்தையை மகிழ்ச்சியுடன் இருக்கச் செய்கிறது. பட்டுப்போன்ற டால்க், மிதமான நறுமணம்—எல்லாமே கவனமாகக் கலக்கப்பட்ட புதிய பேபி பவுடர்—டெண்டெர் கேர். உங்கள் குழந்தைக்காக!
NEW
COLGATE
tender care
BABY POWDER
For comfort & protection
உங்கள் குழந்தைக்கு அன்பும், ஆதரவும்— டெண்டெர் கேர்!
ரூ 1/- தள்ளுபடி!
விசேஷ தள்ளுபடி சலுகை
கூப்பனை வெட்டி எடுத்து அதில் ஆங்கிலத்தில் உங்கள் பெயரையும் முகவரியையும் பூர்த்தி செய்து கூப்பனில் உள்ள முகவரிக்கு அனுப்புங்கள். உங்களுக்கு ஒரு விசேஷ தள்ளுபடி கூப்பன் அனுப்பப்படும். அதைக் கொண்டு ரூ. 1/- தள்ளுபடியில், கால்கேட் டெண்டெர் கேர் பேபி பவுடர் ஜெயண்ட் சைஸ் டப்பா ஒன்றை நீங்கள் வாங்கிக் கொள்ளலாம்.
COUPON
To:
K
Colgate Tender Care Baby Powder D.O.
C/o Colgate-Palmolive (India) Pvt. Ltd.
12-A Ritchie Street, Madras 600 002
Dear Sirs:
I would like to have my Colgate Tender Care Discount Voucher sent to:
Name
Address
CTC.G.4.TM

அவருக்கு எதிரே நிதானமாக நடந்து வந்து அவரைக் கண்டதும் வேகம் பிடித்து, பார்க்காத மாதிரி தலையைக் குனிந்துகொண்டு பக்கத்துச் சந்தில் நுழைந்து மறைந்தவன்?...

'சாரங்களு அவன்?' துடித்தது மனசு. 'ஏன், ஏன் என்னைக் கண்டதும் ஓடி ஒளி கிறான்?' — புரியாத புதிர். ஏதோ தவிப்பு:

'ஓடி ஒளிகிறானே, ஏன்?' — உடலெல்லாம் வியர்த்துவிட்டது.

வீட்டுக்குத் திரும்பும் முயற்சியாக இன்னொரு சாலையில் நடக்க ஆரம்பித்த போது —

''சார் !'' என்ற உணர்ச்சிவசப்பட்ட விளிப்பு. திரும்பினவர் பரவசத்தில் தோய்ந்தார். ''பரசுவா.....?''

''ஆமாம், சார் !''

''சௌக்கியமா இருக்கியா ?''

''இருக்கேன் சார்..... சார் நீங்க ?''

''ஆமா; நேற்று ரிடையராயிட்டேன்....''

''இன்னிக்குத்தான் எனக்குத் தெரியும்.''

''நீ டிகிரி வாங்கிக் காலேஜை விட்டுப் போய் ரெண்டு வருஷமாச்சா ?''

''ஆமாம், சார்..... சாரங்கன் நான் எல்லாம் ஒரே பேட்ச்......''

'ஓ....' சாரங்கன் — சற்று முன் ஓடி ஒளிந்தவன்...' புரஃபசர் ஒன்றும் சொல்லிக் கொள்ளவில்லை. அதற்குள் —

''வாங்க சார், வீட்டுக்குப் போகலாம்.'' ஆர்வம் ததும்பும் அழைப்பு.

''வீட்டுக்கா ?''

''பக்கத்தில் தான் சார் !''

''ஓ, போவோமே !'' குதூகலத்துடன் ஒப்புக் கொண்டு புறப்பட்டார்.

வீடு பூட்டிக் கிடந்தது.

''யாரும் இல்லே?''

பரசு பூட்டைத் திறந்தான். ''அம்மா கிடையாது. அப்பா ட்யூட்டிக்குப் போய் இருக்கார்......''

''அப்பாவுக்கு ரயில்வேயில்தானே வேலே?''

''கரெக்டா ஞாபகம் வைச்சிருக்கீங்களே?'' ஒரு புன்னகை.

அந்தச் சூழ்நிலையும், சம்பாஷணையும் புரொபசரின் மனத்துக்கு இதமாக இருந்தன.

இதற்குள் பரசு எழுந்து வாசலுக்குப் போனான். எதிரே காப்பிக் கடை. சைகை காட்டினதும் பையன் காப்பி கொணர்ந்தான்.

''அடடா... இப்பத்தான் சாப்பிட்டேன். நம்ம ரங்கு இல்லே — டிகிரி முதல் வருஷமே நிறுத்தினானே — அவன் ஹோட்டல் நடத்தறான்....''

''தெரியும் சார் !''

''அப்படியா? எனக்குத் தெரியாது. தற்செயலா அந்தப் பக்கம் போனப்புறம்தான் தெரிய வந்தது...''— சற்று நேர யோசனை.

''ஏதோ அவனுக்கு ஒரு தொழில் அமைந்து விட்டது சார் !'' என்று பரசு சொல்லிக் கொண்டிருந்த விநாடியில் —

பின்புறக் கதவு தட்டப்பட்டது.

''கொஞ்சம் இருங்க சார்....''

பரசு, ஓடித் திறந்தான்..... வாசல் வழியாக வந்து பழக்கப்படாத சாரங்கன்தான்.

''என்னடா சப்தம், யாரோடு பேசிக்கிட்டிருக்கே?''

''நம்ம புரொபசர் ஜெயராம் சார்.''

''இங்கேயா இருக்கிறார்?'' — திடுக்கிட்டான் சாரங்கன்.

''ஏன்டா ?''

''கொஞ்சம் முந்தி நான் அவரைப் பார்க்க நேர்ந்தது. நல்ல வேளை. அவர் என்னைப் பார்க்குமுன் சந்தில் திரும்பிவிட்டேன்....''

''ஏய்.....?'' — பரசு ஸ்தம்பித்துப் போய் விட்டான்.

''என்ன, அப்படிப் பார்க்கிறே ? தன் பிராணனை வருத்தி நமக்குப் பாடம் நடத்தின மகாத்மா அவர். இத்தனை மாதங்களுக்குப் பிறகு சந்திக்கிறவர், 'என்ன செய்கிறாய் ?' என்று கேட்டால் நான் என்ன பதில் சொல்வேன் ?'' நொடிக்குள் நிலை குலைந்தான்.

''வந்து.... உன்னை எதுவும் கேட்டாரா ?''

''என் அதிர்ஷ்டம்... இன்னும் அந்தக் கேள்வி அவர் நாவில் பிறக்கலேடா....''

''நல்ல வேளை! என்ன செய்யறே என்று கேட்டு, சும்மா இருக்கேன் என்று பல் இளித்து அந்த நல்லமனசு புண்படவேண்டாம்டா...''

''சாரங்கா, இப்ப என் சங்கடம் என்ன தெரியுமா ?'' பரசு குறுக்கிட்டான்.

''என்னடா ?''

''வீடு வரை அவரை அழைத்து வந்து விட்டு காப்பியாவது வாங்கித் தர வேண்டாம்?''

''இன்னும் வாங்கிக் கொடுக்கலேயா?''

''வாங்கிக் கொடுத்து, நானும் சாப்பிட்டாச்சு.''

''பின்னே ?''

''....இன்னும் கொஞ்ச நேரத்தில் வட்டா எடுத்துப் போக பையன் வருவான்டா......''

மறு விநாடியே புரிந்துகொண்டு தழுதழுத்தான் சாரங்கன். ''இந்தாடா !'' கசங்கிய ஒற்றை ரூபாயைக் கொடுத்தான்.

''சாரங்கா, ரொம்ப தேங்க்ஸ்டா !''

''தேங்ஸ் இருக்கட்டும், ஒருவேளை, இப்ப நீ போனதும் புரொபசர், 'நீ என்ன செய்கிறாய்?' அப்படீன்னு கேட்டால், ஏதாவது ஒரு உத்தியோகத்தைச் சொல்லி வை. நேற்றுத்தான் அவர் ரிடையராகி இருக்கார். அவர் மனசை நோகஅடிச்சுடாதே.'' சாரங்கன் நகர்ந்தான்.

பரசு திரும்பி வந்து பார்த்தபோது —

புரொபசர் இல்லை.

காலையில் கிழித்த தேதிச் சீட்டின் பின்புறத்தில் - ''பாரதத்தின் செல்வங்களே....'' என்று தொடங்கி மேலே எழுத முடியாமல்... அடியில் புரொபசரின் கையெழுத்து.

பரசு துடித்துப் போய் வாசலுக்கு வந்தான். கூப்பிடு தூரத்தில் ஹோட்டல் பையன் வட்டாவை எடுத்துச் செல்வது தெரிந்தது.

''தம்பி.....!''

''என்ன?'' — பையன் அருகில் வந்தான்.

''காசு....?''

''அந்த ஐயா கொடுத்துட்டாங்க.''

''சார்.....'' அந்த விம்மல் — அவனது துடிப்பு.

''இத்தனை நாளும் இளம் குருத்துகளின் காலத்தை விரயமாக்கி, அவர்களை நடுத்தெருவில் விட்டுவிட்டோமோ என்று ஒரு குற்ற உணர்வு ஆட்கொள்ளத் தொலைவில் நடந்துகொண்டிருந்தார் புரொபசர்.

விலைவாசிகள் விஷம் போல்



ஏறிவரும்
இந்த
நாட்களிலும் கூட

உங்கள் மன நிம்மதிக்கு
மட்டும் பஞ்சமில்லை.

30 வருடங்களில் உங்கள் ஆயுள்
இன்ஷூரன்ஸின் மதிப்பு ரூ. 2500/-
அதாவது நீங்கள்
சாதாரணமாக
நாளொன்றுக்கு ஒரு
கோப்பை தேநீருக்கென
25 காசு* வீதம்
செலவிடுவதைப்
போன்றதே.



* இப்போது உங்கள் வயது 30
என்று வைத்துக் கொள்வோம்

PRATISHA 2013-IVI-TAM-1

இந்த நாட்களிலும்
ஆயுள் இன்ஷூரன்ஸ் உதவியினால் நீங்கள்
மன நிம்மதி பெறுவது உங்கள் சக்திக்குட்பட்டதே.



சிவகாமியின் சபதம்

நாற்பத்தேழாம் அத்தியாயம்

வீதி வலம்

ஆயிரத்து முந்நூறு வருஷங்களுக்கு முன்னால் பரத கண்டத்தில் பிரசித்தி பெற்றிருந்த மூன்று சாம்ராஜ்யத் தலைநகரங்களில் வாதாபி ஒன்றாகும். கன்யா குப்ஜத்தையும் காஞ்சியையும் போலவே வாதாபி நகரத்தின் புகழும் அந்த நாட்களில் கடல் கடந்து வெகு தூரம் சென்றிருந்தது.

ஒவ்வொரு தடவை திக்விஜயம் செய்து திரும்பும் போதும் புலிகேசியின் படை வீரர்கள் வெற்றி கொண்ட தேசங்களிலிருந்து ஏராளமான செல்வங்களைக் கொண்டு வந்து வாதாபியில் சேர்த்து வந்தார்கள். இதனால் வாதாபி நகரம் வளம் கொழிக்கும் நகரமாய் அந்தக் காலத்தில் விளங்கிற்று. அந்நகரில் வர்த்தகம் சிறந்தோங்கியிருந்தது. தூர தூர தேசங்களிலிருந்தெல்லாம் அந்த நகருக்கு இரத்தின வியாபாரிகள் வந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

அமரர் கல்கி





பிரசித்தி பெற்ற ஜைன ஆலயங்களும் பௌத்த மடங்களும் வாதாபியில் இருந்தபடியால், பற்பல நாடுகளிலிருந்தும் யாத்திரீகர்கள் அந்நகருக்குவருவதுண்டு.

இதனாலெல்லாம் வாதாபி நகரம் எப்போதும் கலகலப்பாகவே இருந்து வந்தது. அதிலும் சக்கரவர்த்தி தலைநகரில் இருக்கும்போது கேட்க வேண்டியதே இல்லை.

சக்கரவர்த்தியைப் பேட்டி காண்பதற்காகச் சிற்றரசர்கள் காணிக்கைகளுடன் வருவார்கள். சீனம், பாரசீகம் முதலிய தூர தூர தேசங்களிலிருந்து அரசாங்கத் தூதர்கள் வருவார்கள்.

மாட மாளிகைகள் கூட கோபுரங்களுடன் விளங்கிய வாதாபியின் வீதிகள் எப்போதுமே திருவிழாக் காலத்தைப் போல் ஜனக் கூட்டம் நிறைந்து விளங்கும். வண்டிகள் — வாகனங்களின் சப்தம் ஓயாமல் கேட்டவண்ணம் இருக்கும்.

வாதாபி நகரின் வீதிக் காட்சிகளைப் பார்த்துக் கொண்டு சிவகாமி பல்லக்கிலே போய்க் கொண்டிருந்தபோது அவளுடைய உள்ளம் அடிக்கடி காஞ்சியையும் வாதாபியையும் ஒப்பிட்டுக் கொண்டிருந்தது. பழைமையான காலத்திலிருந்து செல்வமும் பண்பாடும் சேர்ந்து வளர்ந்து வந்த நகரத்துக்கும் திடீரென்று செல்வம் படைத்துச் செழிப்படைந்த புதுப் பட்டணத்துக்கும் உள்ள வித்தியாசங்கள் அவளுக்கு நன்கு புலனாகி வந்தன.

காஞ்சியில் செல்வத்தில் சிறந்த சீமான்களும் சீமாட்டிகளும் ஆடை ஆபரணங்கள் பூணுவதில் அடக்கம் காட்டுவார்கள். அவர்களுடைய அலங்காரங்களில் கலை உணர்ச்சியே பிரதானமாயிருக்கும்.

இந்த நகரிலோ எங்கே பார்த்தாலும் யாரைப் பார்த்தாலும் படாடோபமும் பகட்டும் தாண்டவமாடின.

காஞ்சி வீதிகளில் தெரிந்தவர்கள் சந்தித்தால் ஒருவருக்கொருவர் அன்புடனும் மரியாதையுடனும் முகமன் கூறிக்கொண்டார்கள். வாதாபியின் தெருக்களிலோ தெரிந்தவர்கள் சந்திக்கும்போது இடி முழக்க ஒலியில் சிரித்து ஆர்ப்பரித்தார்கள்.

காஞ்சியில் எஜமானர்கள் வேலைக்காரர்களுக்குக் கட்டளையிடும்போது கூட அன்புடனும் ஆதரவுடனும் பேசினார்கள். வாதாபியில் எஜமானர்கள் வேலைக்காரர்களிடம் பேசும்போது கடுமையான மொழிகளையும் துர்வசனங்களையும் கையாண்டார்கள்.

இவற்றையெல்லாம் தவிர காஞ்சிக்கும் வாதாபிக்கும் உள்ள இன்னும் ஒரு வித்தியாசத்தையும் சிவகாமி கவனித்தாள்.

காஞ்சி வீதிகளில் புத்த பிக்ஷுக்கள், திகம்பர சமணர்கள், வைதிக சந்நியாசிகள், ஆண்டிகள், காபாலிகர்கள், வெறும் பிச்சைக்காரர்கள் ஆகியவர்கள் மொய்த்துக் கொண்டு வீதியில் போவோர் வருவோரின் பிராணனை வாங்குவது வழக்கம். தர்ம புத்தியுள்ள தனவான்கள் அதிகம் உள்ள இடத்



திலே யாசகர்கள் கூட்டமும் அதிகமாகப் பெருகி விடும் போலும்!

வாதாபியின் வீதிகளில் அம்மாதிரி பிக்ஷுக்களும், யாசகர்களும் அதிகம் காணப்படவில்லை. தர்மம் கொடுப்பவர்கள் இல்லாதபடியால் யாசகர்களும் இல்லை போலும்! — இம்மாதிரியெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டும் வாதாபியின் செல்வ வளத்தை வியந்துகொண்டும் சிவிகையில் சென்ற சிவகாமி, ஒரு நாற்சந்தி மூலையில் அதுவரையில் காணாத காட்சி ஒன்றைக் கண்டாள்.

ஸ்திரீகளும் புருஷர்களும் அடங்கிய ஒரு கூட்டம் அங்கே நின்றது. அவர்கள் ஒவ்வொருவருடைய கரங்களும் சேர்த்துக் கட்டப்பட்டிருந்தன. அவ்விதம் பந்தமுற்ற கைகளுடன் தலைகவிழ்ந்து நின்ற கும்பலைச் சுற்றி யமகிங்கரர்களைப்



போன்ற முரடர்கள் சிலர் கையில் பெரிய பெரிய சாட்டைகளுடன் நின்றார்கள்.

இந்தக் காட்சியைப் பார்க்கும்போது சிவகாமியின் உள்ளம் பதைத்தது. கைகள் கட்டப்பட்டு நின்ற ஸ்திரீ புருஷர்கள் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் என்று தோன்றியபடியால் அவளுடைய மன வேதனை பன்மடங்காயிற்று.

பல்லக்கை நிறுத்தி அவர்கள் அருகில் சென்று விசாரிக்கலாமா என்று சிவகாமி ஒரு கணம் நினைத்தாள். ஆனால், அதற்கு வேண்டிய மனோதைரியம் அவளுக்கு ஏற்படவில்லை. சிவிகை மேலே சென்றது.

நாற்சந்தி முனையிலிருந்து சிவிகை கொஞ்ச தூரம் போனபிறகு சிவகாமி தடுக்க முடியாத ஆவலினால் திரும்பிப் பார்த்தாள். அந்தக் கூட்டத்தில் இருந்தவர்களில் சிலர் கட்டுப்பட்ட கைகளினால் தன்னுடைய சிவிகையைச் சுட்டிக் காட்டுவது போலவும், கண்ணீர் ததும்பிய கண்களாலே தான் போகும் திசையை உற்றுப் பார்ப்பது போலவும் அவளுக்குத் தோன்றியது. உடனே சிவகாமி தன் பார்வையைத் திருப்பிக் கொண்டாள். பல்லக்குச் சுமந்தவர்களை நேரே வீட்டுக்குப் போகும்படி கட்டளையிட்டாள்.

வீடு போய்ச் சேர்ந்ததும் சிவகாமி தான் கண்ட காட்சியைத் தாதியிடம் சொல்லி, அதைப் பற்றி ஏதேனும் தெரியுமா என்று கேட்டாள். தாதி தனக்குத் தெரியாதென்று சொல்லவே, போய் விசாரித்துக் கொண்டு வரும்படி பணித்தாள்.

அவ்விதமே அந்தத் தாதி வெளியே போய் விசாரித்துக் கொண்டு வந்தாள். அவள் கூறிய விவரம் சிவகாமிக்குச் சொல்ல முடியாத பயங்கரத்தையும், மன வேதனையையும் அளித்தது.

தாதி விசாரித்து வந்து கூறிய விவரம் இதுதான்:

பல்லவ நாட்டிலிருந்து புலிகேசி சக்கரவர்த்தி அநேக ஸ்திரீ புருஷர்களைச் சிறைப் பிடித்துக் கொண்டு வந்திருந்தார். அவர்களில் சிலர் சிறையிலிருந்து தப்பிப் போக முயன்றார்கள். சிலர் அடிமைத் தொண்டு செய்ய மறுத்தார்கள். சிலர் உணவு உட்கொள்ளாமல் பிடிவாதம் பிடித்தார்கள். இத்தகைய குற்றங்களைச் செய்த கலகக்காரர்களை வாதாபி நகரின் நாற்சந்திகளில் நிறுத்திச் சாட்டையினால் அடிக்கும்படியாகப் புலிகேசிச் சக்கரவர்த்தி கட்டளை இட்டிருக்கிறார். இந்தச் சாட்டையடி உற்சவம் இன்றைக்குத்தான் ஆரம்பமாகியிருக்கிறது. இன்னும் இரண்டு மாதம் வரையில் நடக்கும். தினம் சாயங்கால வேளையில் வீதிகளில் நடக்கும் வாதாபி நகர வாசிகள் அந்த வேடிக்கையைப் பார்த்துக் களிப்பார்கள்!

* * *

சிவகாமி அன்றிரவு ஒரு கணமும் கண்ணுறங்கவில்லை. வேதனையும் துன்பமும் நிறைந்த அவளுடைய வாழ்க்கையில் இதுவரை என்றும் அநுபவித்தறியாத வேதனையை அவள் அநுபவித்தாள். சுளீர் சுளீர் என்று அவளுடைய உடம்பில் சாட்டை அடி விழுவது போன்ற உணர்ச்சி அவளுக்கு அடிக்கடி உண்டாயிற்று.

பொன்முகலி ஆற்றங்கரையில் அவள் புலிகேசியை வேண்டித் தன்னுடன்

அவள் மென்மையானவள்...
அவள் ஒரு புதிர்...
அவள் மிருதுவானவள்,
உறுதியானவள்...
தீப்போன்றவள் அவள்
பெண்மையே உருவானவள்

பட்டுப்போன்ற டால்க்... அன்பைப் போல மிருதுவானது. உங்கள் மேனியைத் தழுவி அரவணைப்பது. உங்களை மோகன மாதிரியில் ஆழ்த்தும் அருமையான புது நறுமணம் கொண்டது. ஹேலோவிற்கெனவே பிரத்யேகமாக உருவான அதன் நறுமணம் நீண்ட நேரம் உங்களைத் தழுவி உங்களைச் சுற்றி கமகமவென வீசிக் கொண்டிருக்கும். அதுவே உங்கள் வெயில் ஆஃப் லவ். ஹேலோ மட்டுமே அளிப்பது.



ஹேலோ

வெய்ல் ஆஃப் லவ்
டால்க்

தனிச் சலுகை
எகானமி சைஸ் டப்பா
ஒவ்வொன்றுக்கும்
ரூ.1.50
விலையில் தள்ளுபடி

புள்ளியிட்ட கோட்டினூடே வெட்டவும்.

பக்கத்திலுள்ள கூப்பனை வெட்டி எடுங்கள் அதில் உங்கள் பெயரையும், முகவரியையும் ஆங்கிலத்தில் பூர்த்தி செய்து, கூப்பனில் உள்ள முகவரிக்கு போஸ்ட் செய்யுங்கள். (தபாலில் அனுப்புங்கள்) உங்களுக்கு ஒரு விசேஷ தள்ளுபடிச் சீட்டு அனுப்பப்படும். அந்தச் சீட்டை உங்கள் டீலரிடம் கொடுங்கள். அவர் பட்டியல் விலையைவிட ரூ. 1.50 குறைந்த விலையில் ஹேலோ வெய்ல் ஆஃப் லவ் டால்க் எகானமி சைஸ் டப்பா ஒன்று கொடுப்பார். இந்த விசேஷ சலுகை குறுகிய காலத்திற்கு மட்டுமே உண்டு. எனவே முந்துங்கள். இன்றே கூப்பனை தபாலில் சேருங்கள்.

COUPON

K

To
Halo Veil of Love Talc D. O.
C/o Colgate-Palmolive (India) Pvt. Ltd.
12-A Ritchie Street, Madras 600 002.

Dear Sirs,
I would like to have my Halo Veil of Love Talc discount voucher sent to :

Name ____________________

Address ____________________

____

HT.G.2 TM

சிறைப்பட்டிருந்த மாதர்களை விடுதலை செய்தது அவளுக்கு நினைவு வந்தது. அன்று விடுதலையானவர்கள் சளுக்கர் சைனியத்தினால் சிறைப்பிடிக்கப்பட்டவர்களில் ஒருசிலர்தான் போலும். இன்னும் எத்தனையோ பேரை முன்னால் சென்ற பெருஞ் சைனியம் சிறைப் பிடித்துக் கொண்டு போயிருக்க வேண்டும்.

இன்று பகலில் சக்கரவர்த்தி வந்து தன்னுடன் பேசியதன் கருத்தும் தனக்கு வாதாபி நகரைச் சுற்றிப் பார்க்க அநுமதியளித்ததன் கருத்தும் இப்போது சிவகாமிக்குப் புதிய பொருளில் விளங்க ஆரம்பித்தன. சிவகாமியைத் தன்னுடைய காலிலே விழுந்து கெஞ்சும்படி செய்வதற்காக இப்படியெல்லாம் ஏற்பாடு செய்திருக்கிறான் அந்தக் கிராதகன். ஆனால், அவனுடைய எண்ணம் நிறைவேறப் போவதில்லை. யார்



எப்படிப் போனாலும் சரி. இனி நான் புலிகேசியின் காலில் விழுந்து கெஞ்சப் போவதில்லை. அவனுடைய சபையில் வந்து நடனமாடவும் ஒப்புக் கொள்ளப் போவதில்லை. ஒருநாளும் முடியாது! அப்படியா வஞ்சம் தீர்க்க நினைத்திருக்கிறான், அந்தப் பாவி!

'எதற்காக வாதாபி நகரைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினோம்? பேசாமல் வீட்டுக்குள்ளேயே அடைத்து கிடந்திருக்கக் கூடாதா?' என்று எண்ணி எண்ணிச் சிவகாமி தவித்தாள். இரவெல்லாம் தூக்கமின்றித் துடித்துக் கொண்டிருந்தாள்.

* * *

மறுநாள் பொழுது விடிந்தது. சூரியோதயம் ஆயிற்று. வான வெளியில் சூரியன் மேலே வர வர சிவகாமியின் இதயத் துடிப்பும் அதிகமாயிற்று. சூரியன் மேற்கு நோக்கிப் பிரயாணம் செய்யச் செய்ய அவளுடைய உள்ளமும் உடம்பும் பதறத் தொடங்கின.

இத்தனை நேரம் அந்தப் பல்லவ நாட்டு ஸ்திரீகளும் புருஷர்களும் நாற்சந்தியில் கொண்டு வந்து நிறுத்தப் பட்டிருப்பார்கள்! அவர்களுடைய கைகள் பின்னால் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கும். இத்தனை நேரம் யமகிங்கரர்கள் போன்ற காவலர்கள் கையில் பெரிய சாட்டைகளுடன் வந்து நிற்பார்கள். இன்னும் சிறிது நேரத்துக்கெல்லாம் சாட்டையினால் அடிக்கத் தொடங்கி விடுவார்கள்!

சிவகாமி முதல்நாள் இரவு கொண்டிருந்த மன உறுதியெல்லாம் பறந்து போயிற்று. பரபரப்புடன் பல்லக்குக் கொண்டு வரும்படி வாசற் காவலர்களிடம் கட்டளையிட்டாள். பல்லக்கு வந்ததும் அதில் விரைந்து ஏறிக் கொண்டு நேற்றுப் பார்த்த நாற்சந்தி முனைக்குப் போகும்படி சொன்னாள்.

நாற்சந்தியின் சமீபத்தில் இன்று சிவகாமியின் சிவிகை போய்ச் சேர்ந்த போது அங்கே கரங்கள் கட்டப்பட்டு நின்றவர்களிடம் நேற்றுக் காணாத கிளர்ச்சியை இன்று கண்டாள். அவர்கள் ஒருவருக்கொருவர் ஏதோ பேசிக் கொண்டார்கள். அவர்களில் பலர் சிவகாமியை நோக்கி, ''அம்மா! தாயே! எங்களைக் காப்பாற்று!'' என்று கூச்சலிட்டார்கள்.

எதிர்பாராத இந்த அபயக் கூக்குரல்களினால் சிவகாமியின் உள்ளம் பெருங் குழப்பம் அடைந்தது. 'ஐயோ! இவர்களைக் காப்பாற்றும் சக்தி உண்மையில் நம்மிடம் இருக்கலாகாதா?' என்ற ஏக்கம் ஒரு பக்கம் உண்டாயிற்று. பல்லக்கைத் தரையில் இறக்கச் சொல்லித் தானும் இறங்கிக் கூட்டத்தை அணுகினாள்.

மீண்டும் ''அம்மா! தாயே! எங்களைக் காப்பாற்று!'' என்ற கூக்குரல்கள் அக்கூட்டத்திலிருந்து எழுந்தன.

சிவகாமி அவர்கள் அருகில் இன்னும் நெருங்கிச் சென்றாள். அவர்களில் சிலருடைய உடம்பில் முன்னமே சாட்டையடி பட்ட காயங்களைக் கண்டாள். அந்தக் காயங்களிலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருப்பதையும் தரையில் பல இடங்களில் இரத்தம் சொட்டிக் கறையாகி யிருப்பதையும் பார்த்தாள்.

சிவகாமியின் தலை சுற்றியது. வயிறு குமட்டியது. மயக்கம் வந்தது. அதை

யெல்லாம் சமாளித்துக் கொண்டு ஒருவாறு சித்தத் தெளிவை நிலைநாட்டிக் கொண்டாள்.

கூட்டத்தில் அவளுக்குச் சமீபத்தில் நின்ற ஸ்திரீயைப் பார்த்து, "அம்மா! உங்களைக் காப்பாற்றும்படி என்னை வேண்டிக் கொள்கிறீர்களே, அது ஏன்? உங்களைப் போல் நானும் ஓர் அபலைப் பெண்தானே? சளுக்கரால் சிறைப் பிடித்துக் கொண்டு வரப்பட்டவள் தானே? உங்களைக் காப்பாற்றும் சக்தி எனக்கு ஏது?" என்றாள்.

"எங்களைக் காப்பாற்றும் சக்தி உனக்கு உண்டு, தாயே! அதோ அந்த ராட்சதனைக் கேள்! அவன் அவ்விதம் சொன்னான்!" என்றாள் அந்த ஸ்திரீ.

அவள் சுட்டிக் காட்டிய ராட்சத வடிவங் கொண்ட வீரர் தலைவனைச் சிவகாமி அணுகினாள். வாதாபிவாசிகள் பேசிய கலப்புப் பாஷையில், "ஐயா! இவர்களை ஏன் இப்படிச் சாட்டையால் அடித்துச் சித்திரவதை செய்கிறீர்கள்? வேண்டாம்; இந்தப் படுபாதகச் செயலை நிறுத்துங்கள்!" என்றாள்.

அந்த வீரர் தலைவன் கலகலவென்று சிரித்தான். என்னவோ யோசிப்பவன் போல் சற்று இருந்துவிட்டுப் பிறகு, "நாங்கள் என்ன செய்வோம் தாயே! சக்கரவர்த்தியின் ஆக்ஞை!" என்றான்.

"அப்படியானால் கொஞ்ச நேரம் பொறுத்திருங்கள். நான் உங்கள் சக்கரவர்த்தியிடம் சென்று வேண்டிக் கொண்டு பார்க்கிறேன். அதுவரையில்..." என்று சிவகாமி சொல்வதற்குள், அவ்வீரன், "வேண்டாம் அம்மா! சக்கரவர்த்தியிடம் நீ போகவே வேண்டாம். இவர்களைச் சாட்டையால் அடிப்பதை நிறுத்தும் அதிகாரம் உன்னிடமே இருக்கிறது. நீ சொன்னால் நிறுத்தி விடுகிறோம். ஆனால், அதற்கு ஒரு நிபந்தனை உண்டு!" என்றான்.

அந்த வீரன் முதலில் கூறிய வார்த்தைகளை வியப்போடும் உவகையோடும் கேட்ட சிவகாமி, "நிபந்தனை" என்றதும் திடுக்கிட்டாள். ஏதோ வஞ்சம் இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன், 'என்ன நிபந்தனை?" என்றாள்.

"நீ இந்த இடத்தில், எங்கள் எல்லாருடைய முன்னிலையிலும் நடனம் ஆட வேண்டும். நீ ஆடும்வரையில் நாங்கள் இவர்களை அடிக்காமல் இருக்கிறோம். சூரியன் அஸ்தமிக்கும் வரையில் நீ ஆடிக் கொண்டிருந்தால், நாங்களும் பார்த்துக் கொண்டே இருப்போம். சூரியன் அஸ்தமித்ததும் நீ வீட்டுக்குத் திரும்பலாம். நாங்கள் இவர்களைச் சிறையிலே கொண்டு போய்ச் சேர்ப்போம். நாளைக்கும் அவர்கள் அடிபடக் கூடாது என்று நீ கருதினால், நாளைக்கும் நீ இம்மாதிரியே இவ்விடம் வந்து நடனம் ஆடலாம்!" என்றான் அந்தக் கிராதகன்.

சிவகாமியின் உள்ளத்திலிருந்து எரிமலை தீக்குழம்பையும் கரும் புகையையும் கக்கத் தொடங்கியது.

'ஆஹா! இதுவா அந்தப் பாதகனுடைய எண்ணம்? இப்படியா என் மீது அவன் பழி வாங்கப் பார்க்கிறான்? இப்படியா என் அற்புதக் கலையை இழிவுபடுத்த நினைக்கிறான்? புத்த பிக்ஷு வேஷத்தில் வந்து என் கலையைக் கண்டு மெய்ம்மறந்து பரவச மடைந்ததாக நடித்ததெல்லாம் இதற்காகத்தானா?

'ஆனால் அந்த வஞ்சக நெஞ்சனுடைய உத்தேசம் ஒருநாளும் நிறைவேறப் போவதில்லை. யார் எப்படிப் போனாலும் நான் வாதாபியின் நாற்சந்தியில் நின்று நடனமாடப் போவதில்லை. ஒரு நாளுமில்லை.'

முகத்தில் குரோதம் பொங்க, கண்களில் தீப்பொறி பறக்க நின்ற இடத்திலே ஸ்தம்பமாய் நின்று யோசித்துக் கொண்டிருந்த சிவகாமியைப் பார்த்து மேற்படி வீரர் தலைவன், "என்ன முடிவு சொல்கிறாய், தாயே! நடனம் ஆடப் போகிறாயா? அல்லது இவர்களைத் தங்கள் காரியத்தைப் பார்க்கச் சொல்லட்டுமா?" என்று கேட்டான்.

அந்தக் கேள்வி சிவகாமியின் செவிகளில் பழுக்கக் காய்ந்த வேல் நுழைவது போல் நுழைந்தது.

திடீரென்று பிரக்ஞை பெற்றவள் போல் அவள் துள்ளி நிமிர்ந்து நின்று அவ்வீரனைப் பார்த்தாள்.

"ஆஹா! இந்த நாற்சந்தியில் நின்று என்னை நடனம் ஆடவா சொல்கிறாய்? மாட்டேன்; ஒரு நாளும் மாட்டேன்!" என்றாள்.

அவ்வீரர் தலைவன் முகத்திலே புன்னகையுடன், "சரி! உங்கள் வேலையை நீங்கள் நடத்துங்கள்!" என்று கையில் சாட்டையுடன் நின்றவர்களைப் பார்த்துக் கட்டளையிட்டான். (தொடரும்)

இந்தியாவிலும். அயல்நாடுகளிலும் இப்போழுது அதிகமான அளவில் தேவைப்படுகிறது இந்த தேங்காய் நார்



Ennor

இயந்திரங்கள்—
தேங்காய் நார்
தயாரிக்க.



Crusher

குறைந்த முதலீட்டில் சிறந்த முறையில் தேங்காய் நார் தயாரிக்க இயந்திரங்கள் இதோ!


தேங்காய் நார் தயாரிக்க இந்தியாவில் இதுவரை சரியான இயந்திரங்கள் இல்லாமல் இருந்தது. அதிக அளவு உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்ய முடியாமல் இருந்தது.

இப்பொழுது இதற்குத் தேவையான எல்லா இயந்திரங்களையும் நாங்கள் தயாரித்துள்ளோம். இதன் மூலம் நீங்கள் குறுகிய காலத்தில் அதிக அளவு தேங்காய் நார் உற்பத்தி செய்யலாம். அதிக அளவு ஏற்றுமதியின் மூலம் அதிக வருவாய் தேடிக் கொள்ளலாம்… உங்களுக்கும் உங்கள் தேசத்திற்கும்!


இதுவரை தென் இந்தியாவில் 12 இடங்களில் எங்கள் என்னூர் இயந்திரங்கள் நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன

மற்ற விபரங்களுக்கும் சரியான ஆலோசனைக்கும் எங்களை அணுகுக:


Manufacturers:
BHARAT MOTORS
5, Greames Road, Madras-600006
Phone: 86204 Cable: FIBRO-FLEX




Turbo Cleaner



Defibering Machine



Revolving Screen



Fibre Baling Press


கலைத்திறன் எழிலும் சரித்திரப் புகழும்

கௌசிகன்

வேகத்துக்கு எடுத்துக்காட்டாகப் பிருந்தாவன் எக்ஸ்பிரஸ் விரைந்து கொண்டிருந்தது.

கால் நீட்டிப் படுத்த நிலையிலிருப்பது போன்ற வசதி மிக்க இருக்கை. நிமிர்ந்து உட்காரவும் நீட்டிக் கிடக்கவும் நிலை மாற்றிக் கொள்ளத் தகுந்த ஆசனங்கள். கீழே புல்தரையில் நடப்பது போன்ற விரிப்பு. கடச்கடக் காப்பி, மெதுவடை, சமோஸா, ஸ்வீட்டுகள், பிஸ்கட்டுகள், சிகரெட்டுகள் — தேவையானவர்களுக்குத் தேவைப்பட்டதை ஓடும் வண்டியிலேயே தயாரித்து அவரவர்கள் இருக்கைக்கே கொண்டு வந்து உபசரிக்கும்—காசு வாங்கிக் கொண்டுதான் — விதரணை; இத்தனையும் சேர்ந்து பிருந்தாவன் எக்ஸ்பிரஸில் பிரயாணம் செய்த போதிருந்த மகிழ்ச்சி மைசூருக்கு வந்ததும் ஆவியாகப் போய் விட்டது. மாலை ஐந்து மணிக்கு நகரத்துக்கு வந்தும் இரவு எட்டரை மணி வரை ஒரு ஹோட்டலிலாவது தங்குவதற்கு இடங் கிடைக்கவில்லை. இத்தனைக்கும் மைசூர் நகரம் சுற்றுலாப் பயணிகள் வந்து மொய்க்கும் ஒரு முக்கியமான ஊர். நகரில் போர்டிங் லாட்ஜிங் வசதிகளோடு கூடிய விடுதிகளுக்கும் குறைவில்லை. ஏராளமாக இருக்கின்றன. ஆனால் நான் போன அன்று ரோட்டரி சங்க மகாநாடு. ஏராளமான ரோடேரியன்கள் தங்கள் குடும்பங்களோடு வந்து நகரிலுள்ள அத்தனை ஹோட்டல் அறைகளிலும் மொய்த்துக் கொண்டிருந்ததுதான் என் தவிப்புக்குக் காரணம்.

மைசூர் ஒரு முதல்தரமான சுற்றுலாக் கேந்திரம். ஆண்டு முழுதும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் உல்லாசப் பயணிகள் வந்த வண்ணம் இருக்கிறார்கள். சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் சென்று சுற்றிக் காட்டத் தனியார் பஸ்கள் ஏராளமாக இருக்கின்றன. வாரத்தின் எல்லா நாட்களிலுமே இவர்களுக்கு நல்ல தொழில் நடக்கிறது. மன்னர் ஆட்சி நடந்த காலத்தில் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட அழகு மிக்க நகரம் மைசூர். நீண்ட நெடுஞ்சாலைகள், விசாலமாகவும் துப்புரவாகவும் காட்சியளிக்கின்றன. மன்னர் மேற்பார்வையின் கீழ் இந்த நகரம் மகோன்னதமாக விளங்கி யிருக்க வேண்டும் என்பதற்கான சான்றுகளை இன்றும் காண முடிகிறது. மகிஷம் என்றால் சம்ஸ்கிருதத்தில் எருமை என்று பொருள். எருமைத் தலையோடு கூடிய ஓர் அரக்கனின் பிடியில் அவதியுற்ற மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கக் காளி (சாமுண்டி) தோன்றினாள். மகிஷனை வதைத்து மகிழ்ச்சியை அளித்தாள் மக்களுக்கு. மகிஷூர் என்பதே மைசூராயிருக்கிறது. இந்தியாவின் பூங்கா நகரம் என்றழைக்கப்படும் மைசூரின் காவல் தெய்வம் சாமுண்டி. மலைமீதுள்ள சாமுண்டீசுவரி தேவிதான். மைசூர் மன்னர்களின் குலதெய்வமும் கூட. மைசூர் நகரைப் பற்றிய புராணப் பெருமை இது. இன்





நகர் வலம்

மைசூர்



றைய கர்நாடக ராஜ்யத்தின் கேந்திரமாக பெங்களூர் இருந்தாலும் மன்னராட்சியின்போது தலைநகரமாக மகிமையோடிருந்தது மைசூர்தான். பாரம்பரியமான சரித்திரப் புகழ் உண்டு இந்த நகருக்கு. சங்கரர், மத்வர், ராமானுஜர் ஆகிய மூன்று சமயாசாரியர்களுடனும் தொடர்புடைய நகரம் இது. கதம்பர்கள், ஹொய்சாளர்கள், கங்கர்கள், சாளுக்கியர்கள் விஜயநகர மன்னர்கள் ஆகியவர்களின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த நாடு இது. அந்நியர்களை விரட்டியடிக்க வீறுகொண்டெழுந்து போரிட்ட ஹைதரும் திப்புவும் அரசாண்ட நாடு இது. இன்றைக்கும் இங்குள்ள பெரிய பெரிய கட்டிடங்களில் முஸ்லிம் கட்டிடக்கலையின் அழகைக் காண முடிகிறது. நகரின் நாற்பது சத விகிதத்தினர் முஸ்லிம்கள்.

நகரை ஒட்டிய ஒரு மலை மீது அமர்ந்திருக்கிறாள் சாமுண்டீசுவரி. அன்னையின் கோயிலுக்குப் போகும் வழியில் ஒரே கல்லில் ஆன பிரம்மாண்டமான நந்தி இருக்கிறது. மைசூருக்குப் போகிறவர்கள் இந்த அழகு நந்தியைக் காணாமல் வரமாட்டார்கள். சாமுண்டி மலைமீதிருந்து மாலை மறைந்து இருள் சூழ்ந்த பிறகு கீழுள்ள நகரைக் காண வேண்டும். கறுப்பு வெல்வெட்மேலே நவரத்தினங்களை வாரி இறைத்தாற் போல நகரின் மின்விளக்குகளின் வண்ண ஜாலம் வேறு எங்கும் காணக் கிடைக்காத ஒன்று. நினைவை விட்டகலாத காட்சி!

முதன் முதலில் கர்நாடக தேசத்தில் பிரதான தலைநகரை அமைத்த இந்து மன்னரின் மகளைப் பற்றிய உருக்கமான கதை ஒன்று உண்டு. நகரின் கோட்டை வாசலுக்கான நிலைப்படியைச் சிற்பி எத்தனை முறை எழுப்பி அமைத்த போதும் அது மறு நாள் காலையில் சரிந்து தரை மட்டமாயிற்றும். சிற்பி தமக்கு வேலை தெரியவில்லை என்று ஒப்புக் கொள்வாரா? தெய்வம்



கோபித்துக் கொண்டிருக்கிறது என்று கூறித் தப்பிக்கப் பார்த்தார். மன்னருக்கு யோசனை சொல்ல ஆட்களுக்கா பஞ்சம்? அவர்களில் ஒருவர் நிறை கர்ப்பிணியான ஒரு பெண்ணைப் பலி கொடுத்தால் நிலைவாசல் நிலைக்கும் என்று சொல்லி வைத்தார். எந்தப் பெண்ணைப் பலியிடுவது? உயிரிழக்க யார் முற்படுவார்கள்? அதுவும் நிறை கர்ப்பிணியாக? நடக்கக்கூடிய காரியமா?

தந்தையின் சஞ்சலத்தை அறிந்தாள் மகள் லக்ஷ்மி. அவள் அப்போது நிறைமாதக் கர்ப்பிணி. மன்னரின் ஒரே செல்வ மகள். அசட்டுப் பெண் மன்னரின் துயர் துடைப்பதாகவும், மக்கள் நலனைக் காப்பதாகவும் தியாகம் புரிவதாகவும் எண்ணிக் கொண்டு அன்றிரவு யாரும் அறியாமல் நகர நிர்மாண இடத்துக்குப் போனாள். கோட்டையிலிருந்து கீழே குதித்து விட்டாள். அன்றைக்குப் பார்த்துச் சிற்பியும் தவறிழைக்காமல் திறம்படச் செயல்படவே நிலைவாசலும் நிலைகுலையாமல் நின்றுவிட்டிருந்தது! அந்த நல்ல செய்தியைக் கூற மன்னரிடம் ஓடினார் சிற்பி. மன்னரின் துயரைக் கண்டதும் சிற்பியின் மகிழ்ச்சி இருந்த இடம் தெரியாமல் ஓடிவிட்டது. இளவரசி லக்ஷ்மியின் நினைவாக லக்ஷ்மி தேவியின் கோயில் இன்றைக்கும் இந்தச் சோகக் கதையைக் கூறிக்கொண்டு கர்நாடக ராஜ்யத்தில் உள்ளது. மன்னரின் பெயர் கெம்பகௌடர். இப்படி எத்தனையோ கர்ண பரம்பரைக் கதைகள் கர்நாடகத்தில் உண்டு.

திப்பு சுல்தானின் வீரத்துக்கு முன்னே ஆங்கிலேயர்கள் திணறியதைப் பற்றி எத்தனையோ சொல்லலாம். கடைசியில் அந்த வீரத் திருமகனைச் சூழ்ச்சியால் வீழ்த்தியதையும், மைசூர் புலியான திப்புவின் இறுதி நாட்களையும் இந்நகரிலுள்ள மியூஸியத்தில் ஓவியங்களாகக் காணும்போது கண்கள் குளமாகின்றன. ஸ்ரீரங்கப்பட்டணத்தில் திப்பு, ஹைதர் இவர்களின் நினைவுச் சின்னங்களைக் காணும்போது மைசூரின் அந்த மகோன்னதமான காலம் நம் மனக் கண் முன்னே விரிகிறது. கோட்டையும் கொத்தளமும் அகழியும், பாதாளச் சிறைகளும் குகை வழிகளும் நம்மைச் சரித்திர காலத்துக்கே கொண்டு போகின்றன. மைசூருக்கு அருகிலுள்ள நஞ்சன்கூடு புராதனப் பெருமை மிக்கதொரு நகரம். இங்குள்ள சிவன் நஞ்சுண்ட கண்டன். திப்புவின் தகப்பனாரான ஹைதர் தம்முடைய புகழ் பெற்ற யானையின் கண்நோய் குணமாக இந்த ஈசனை வேண்டிக் கொண்டாராம். நோயும் குணமாயிற்றாம். இதனால் 'ஹக்கீம் நஞ்சுண்டா' என்றே, இந்த ஆண்டவனை அழைத்த திப்பு இவருக்குக் காணிக்கையாக, பல விலைமதிப்புள்ள ஆபரணங்களை அளித்திருக்கிறார். கோயிலில் சுல்தானின் பெயரில் (திப்பு சுல்தான் லிங்கம்) ஒரு லிங்கம் இருப்பதைக் காணலாம். இப்படி முஸ்லிம் மன்னரானாலும் இந்துக்களின் கோயிலான ஸ்ரீரங்கநாதரின் ஆலயத்துக்கும் நஞ்சன்கூடுக்கும் அவர் வழங்கியுள்ள அறக் கட்டளைகளைக் காணும்போது அந்த மன்னரின் பரந்த மனப்பான்மையை எண்ணிப் பெருமிதம் கொள்கிறோம்.

இதே போல் பிற மதத்தவரையும் மதிக்கும் நல்ல குணத்தை மைசூரை ஆண்ட மன்னர் எல்லாரிடமுமே காண முடிகிறது. கி. மு. 1300ம் ஆண்டிலேயே கிறிஸ்துவ மதப் பிரசாரகர்கள் இந்தப் பிராந்தியத்தில் குடியேறி விட்டார்கள். சின்னஞ் சிறிய பல தேவாலயங்கள் நாட்டில் ஆங்காங்கே நிறுவப்பட்டிருந்தாலும் மைசூரில் மகாராஜா கிருஷ்ணராஜ வாடியார் காலத்தில் எழுந்த செயின்ட் ஃபிலோமினா கதீட்ரல் பிரபலமான ஒன்று. காதிக் கட்டடக் கலையின் அழகையெல்லாம் கொண்டுள்ளது இந்தக் கதீட்ரல். 1931ம் ஆண்டு வாக்கில் கட்டி முடிக்கப்பட்ட இதன் உயரம் 165 அடிகளுக்கும் மேலே. இரண்டு கோபுரங்களைக் கொண்ட கம்பீரமான கதீட்ரல். உள்ளே போய்ப் பார்ப்பவர்கள் அதன் அழகிலும் அருள் பொலிவிலும் சொக்கிப் போவார்கள்.

மைசூர் நகருக்கு வருபவர்கள் மகாராஜாவின் அரண்மனையைக் காண ஆசைப்படுவது இயற்கை. ஆனால் அதைக் காண வாய்ப்புக் கிடையாது என்று அறியும்போது ஏமாற்றம் ஏற்படுவதும் சகஜம். நகரின் நடு நாயகமாக— இன்று பொலிவிழந்த நிலையிலும்கூடத் தலை நிமிர்ந்து நிற்கிறது அரண்மனை. அதன் ஆசார வாசலிலே காவல்காரன் கைவிரித்து உள்ளே விட மறுப்பதைக் கண்டு ஒரு பெருமூச்சுடன் இமைக்காத விழிகளால் ஏக்கத்துடன் அதைப் பார்த்துத் திரும்புவதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை.

ஜகன்மோகன் அரண்மனைக் கட்டடத்திலுள் தொல்பொருள் கண்காட்சிசாலை இடம் பெற்றிருக்கிறது. தெய்வ வடிவங்களுக்குத் தன் கற்பனையால் உருக் கொடுத்து ஓவியங்களாகத் தீட்டிய ஓவிய மன்னர் ராஜா ரவி வர்மாவின் அற்புதமான பல ஓவியங்களின் அசல்களை இங்கு கண்டு மகிழலாம்.

இத்தாலி தேசத்துச் சலவைக் கற்களால் அழகுபடுத்தப்பட்ட லலித மகால் என்ற அரண்மனையும் இப்போது பொதுமக்களின் பார்வைக்குக் கிடைக்காத ஒன்று. இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இந்த அழகு மாளிகையை ஒரு சர்வ தேசப் பயணிகள் விடுதி (ஹோட்டல்)யாக மாற்றி யமைத்து விட்டது.

சென்னை நகரின் கொத்தவால் சாவடியைப் பற்றி நினைத்தாலே முகம் சுளிப்பவர்கள் மைசூரின் மையத்திலுள்ள மிகப் பெரிய காய்கறிப் பழ மார்க்கெட்டின் துப்புரவையும் அழகிய அமைப்பையும் கண்டு பொறாமைப்படலாம். விஸ்தாரமான இந்த மார்க்கெட் முழுதும் கருங்கல் தளவரிசையிடப்பட்டுள்ளது. உள்ளே போகவும் வெளியேறவும் பல வாயில்களைக் கொண்டுள்ளது.

தென்னகத்தின் ஜீவ நதியும் தெய்வீகத் தன்மையும் கொண்ட காவிரியின் உற்பத்தி இந்த ராஜ்யத்தில்தான் (குடகு) என்பதில் கன்னடியர்களுக்குச் சொல்லி முடியாத பெருமை. தமிழ் நாட்டில் போல் இங்கும் ஒரு ஸ்ரீரங்கப்பட்டணம் இருக்கிறது. ரங்கநாதர் இங்கும் பள்ளி கொண்டிருக்கிறார். காவிரி இரண்டாகப் பிரிந்து இந்த ஊரையும் மாலையிட்டது போலச் சுற்றிக் கொண்டு போய் ஒன்றுசேருகிறது.

மைசூர் என்றாலே நமக்கு நினைவு வருவது பட்டு, சந்தனம், மணமான காப்பி, கமகமக்

கண்களை ஒருபோதும் கசக்க வேண்டாம்...



கரித்தாலும், களைப்படைந்தாலும், கூசினாலும் கண்களைக் கசக்காதீர்கள். சிவந்த கண்களை நிமிட நேரத்தில் இதமுடன் தெளிவாக்கு-வதற்கு வைஸின் இருக்கிறது.
வைஸின் உபயோகியுங்கள்.
கண்கண்ட பலனை உலகெங்கும் உணர்த்தியுள்ளது வைஸின்.
அது வன்மை வாய்ந்தது,
எனினும் மென்மை கனிந்தது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

சில்லறை விலை ரூ. 2.97
(தல வரிகள் தனி.)

வைஸின்

கலங்கிய கண்களிலே கதிரொளி ம்பது வைஸின்



60 விநாடிப் பரிட்சை

இந்த எளிய வைஸின் பரிட்சையை எற்றுப் பாருங்கள். சிவந்த ஒரு கண்ணிலே இரு சொட்டு வைஸின் விட்டுக் கொள்ளுங்கள். ஒரு நிமிடம் கழித்துக் காண்பீர்கள் அத்தாட்சி –ஒரு விழியில் சிவப்பு, மறு விழியில் தெளிவு. (இனி, சிவந்த விழியிலும் வைஸின் இட்டு தெளிவாக்குங்களேன். கண் சிவப்போ, கரிப்போ நீடித்தால், டாக்டரிடம் ஆலோசனை கேளுங்கள்).

Pfizer :பைஸர் தயாரிப்பு "உலக நலனை நாடும் விஞ்ஞானம்"

Pfizer

விண்டாஸ்-PZ.VI.2a-140 TM


பவுடரினால் துலக்கிய
பாத்திரத்தின் மீது பொடிக் கசடு
பின்தங்கியிருக்கிறதா?
மாசில்லாத பளபளப்பை
வீசிட வைப்பது
விம்.
கசடு இல்லை!
பிசுக்கு இல்லை!
கீறல் இல்லை!
Vim

கும் சோப்பும், ஊதுபத்திகளும், தந்தம், சந்தனக் கட்டைகளினுலான கைவேலைப் பொருள்கள் முதலியன. மைசூர் பட்டின் மகிமையே தனிதான். அதே மாதிரி வேறு எங்குமே விளையாத மணம் கமழும் சந்தன மாத்துக்குப் புகழ் பெற்றது மைசூர். இந்தப் பிராபல்யத்தைப் பயன்படுத்திக் கொண்டு சுற்றுலாப் பயணிகளிடம் வாசனை மிக்க சந்தனத் தைலம் தடவிய சாதாரண மரத்தாலான கைவினைப் பொருள்களைச் சந்தன மரத்தாலானது என்று கூறி விற்றுப் பணம் பண்ணுபவர்கள் நிறைய இருக்கின்றனர். நாளானால் இந்தப் போலி மணம் போய்விட்ட போதிலும் மைசூரின் அழகிய காட்சிகளின் நினைவு நிஜமான சந்தன மணமாக என்றென்றும் நிலைத்து நிற்கும். மைசூரின் சந்தன மரத்திலும் தந்தத்திலும் கைவினைக் கலைஞர்கள் காட்டியுள்ள கைவண்ணத்தின் புகழ் உலகம் முழுவதிலும் பரவி இருக்கிறது. அது மட்டுமா? ஒற்றை அரிசியிலே ஓவியம் தீட்டியுள்ள அற்புதத்தையும் கூட இங்குதான் காண முடியும்.

பாரதத்திலேயே தங்கம் கிடைக்கும் இடம் இங்குதானிருக்கிறது. கோலார் தங்க வயல்களைத் தன்னகத்தே கொண்டிருப்பதற்காகக் கர்னாடக ராஜ்யம் கர்வப்படுவதற்குத் தகுதியுடையதுதான்.

புகழ் பெற்ற நாவலாசிரியர் திரு ஆர்.கே. நாராயணன் அவர்களையும், கர்னாடக இசைக்குப் பெருமை சேர்த்த திரு வாஸுதேவாச்சார், திரு சௌடையா, வீணை திரு துரைசாமி ஐயங்கார் என்று பாரதத்துக்குப் புகழ் சேர்க்கும் பல தவப் புதல்வர்களையும் அளித்த பெருமை மைசூருக்கு உண்டு.

அன்று கண்ணன் விளையாடிய பிருந்தாவனம் எப்படி இருந்திருக்கும் என்று நமக்குத் தெரியாது. கண்ணன் விளையாடிய திருத்தலம் போலவே மகிழ்ச்சி அளிப்பதாக இருக்க வேண்டும் என்ற கருத்தில் மனோரம்மியமான ஒரு கனவு உலகை உருவாக்கிக் காட்டியிருக்கிறார் அன்றைய திவானாக இருந்த ஸர் மிர்ஸா இஸ்மாயில். காவிரி நதியின் குறுக்கே கண்ணம்பாடி என்ற இடத்தில் அணை கட்டுவதற்குத் திட்டமிட்டு வழி வகுத்துக் கொடுத்தவர் திரு எம். விசுவேசுவரய்யா. அணையின் நீர்த்தேக்கத்துக்குக் கிருஷ்ணராஜ சாகரம் என்று பெயர். இந்த அணைப் பகுதியில் பிரபலமான பிருந்தாவன் கார்டன் அமைந்துள்ளது. விதம் விதமான நீரூற்றுக்களை உடைய இந்தப் பிரதேசத்தை இரவிலே வண்ண விளக்குகள் இந்திரபுரியாக்கி ஜாலம் புரியும் அற்புதத்தை நேரிலே கண்டுதான் மகிழ முடியும்.

இத்தனை பெரிய அணையைச் சிமிண்ட் இல்லாமலே கல்லாலும் சுண்ணாம்பாலும் கட்டியிருக்கிறார்கள். ஒரு லட்சத்துத் தொண்ணூற்று இரண்டாயிரம் ஏக்கரா நிலத்திலே பசுமைப் புரட்சி செய்துகொண்டிருக்கிறது இதில் தேக்கி விடப்படும் தண்ணீர்.

மைசூர் மக்கள் அரசியல் பிரச்னைகளுக்குச் செவி சாய்க்காதவர்கள். இங்குள்ளவர்கள் எல்லோரும் அநேகமாக வியாபாரிகளே. இன, மொழி, பிராந்திய வேறுபாடுகளை வியாபாரிகள் விரும்புவதில்லை. சுற்றுலா ஸ்தலமாகையால் பல மொழி இன மக்கள் இங்கு வந்த வண்ணம் இருக்கின்றனர். அவர்களுடன் சகோதரர் போல இனிமையாகப் பழகியாக வேண்டுமே.

புகழ் பெற்ற மைசூர்பாகு, மைசூர் போண்டா, மைசூர் ரசம் ஆகியவைகளை நமக்கு அளித்த மைசூர்க்காரர்களின் கைவிஞலேயே தயாராகும் இப்பொருள்கள் இன்னும் விசேஷமாக இருக்குமோ என்று எண்ணினேன். ஆனல் அசலை விட நகல்தான் இந்த விஷயத்தில் சிறப்பாக இருக்கிறது என்பதை அறிந்தபோது கொஞ்சம் பெருமையாகவே இருந்தது.

o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o

'தம்பதிகள் ஒற்றுமையாக வாழ்வது எப்படி?' எனும் நூலை எழுதிப் புகழ் பெற்றார் ஆங்கில எழுத்தாளர் ஒருவர். அவரை நேரில் காணுவதற்கு ஒரு தம்பதி சென்றனர். அப்பொழுது அவர் தம் மனைவியைப் பிரிந்து தனியாக வசிப்பதை அறிந்தனர். இது குறித்து அவர்கள் வியப்பைத் தெரிவித்த போது, அவர் தந்த பதில்: "தம்பதிகள் ஒற்றுமையாக வாழ்வது பற்றித்தான் நான் எழுதியிருக்கிறேன். நிம்மதியாக வாழ்வது எப்படி என்று இனிமேல் நான் எழுதப் போகிறேன்!"

— வசந்தா கண்ணன்





சிமெண்டைத் தண்ணீர் விட்டுக் குழைத்துச் சுமார் ஒன்றரை அங்குலக் சுற்றளவுள்ள பந்துக்களாக உருட்டிக் கொள்ளவும். அதை அப்படியே இருபத்து நான்கு மணி நேரம் விட்டு வைக்கவும். பிறகு அந்த உருண்டைகளைத் தண்ணீரில் போடவும். உருண்டை உடைந்தாலோ விரிசல் கண்டாலோ, அது நல்ல சிமெண்டல்ல. இருபத்து நாலு மணி நேரம் காத்திருக்க முடியாதவர்களுக்கு இன்னொரு சோதனை முறை: ஒரு தட்டில் கொஞ்சம் சிமெண்டைப் போட்டு, தட்டை ஸ்டவ்வில் இருபது நிமிடங்கள் வைத்துச் சூடேற்றவும். நல்ல சிமெண்ட் நிறம் மாறாது. அப்படியே இருக்கும். கலப்படச் சிமெண்டாக இருந்தால் அது நிறம் மாறும். சில சமயங்களில் எரிந்து போய்விடும். — ஸயன்ஸ் டுடே - பாலி

ரூ. 12,500/-க்கு

விஜயா ரொக்கப் பத்திரம்

ஒன்று இன்றே வாங்குங்கள்.
அது 21 ஆண்டுகளில்

ஒரு லட்சம்

ரூபாய்க்கு மேலாக

பெருகி உங்கள் மகனுக்கு உதவும்

விஜயா ரொக்கப் பத்திரத்தின் பூர்த்தி காலத்தை
21 ஆண்டுகளாக நிர்ணயம் செய்தால்,
உங்கள் பணம் 8 மடங்குக்கு மேல் பெருகிவிடுகிறது.
21 ஆண்டுகளுக்குக் குறைவாகவும் பூர்த்தி
காலத்தை உங்கள் இஷ்டப்படி நிர்ணயிக்கலாம்.
முழு விவரங்களுக்கு உங்கள் அருகேயுள்ள
விஜயா பாங்கின் கிளையை அணுகவும். எங்களுக்கு
இந்தியாவெங்கிலும் 295 கிளைகள் உள்ளன.



விஜயா பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: லைட் ஹவுஸ் ஹில் ரோடு, மங்களூர்-575003.
அட்மினிஸ்டிரேடிவ் ஆபீஸ்: 2, ரெசிடென்ஸி ரோடு, பெங்களூர்-560025.

சேர்மன்: எம். சுந்தர் ராம் ஷெட்டி

OBM:2983-TH



புது வெள்ளம்

பண்ணையாரின் கொடுமை பற்றிய பழைய கதை தான் என்றாலும் படப்பிடிப்பின் சிறப்பினாலும் நடிப்பாற்றலினாலும் இந்தக் 'குருகுரு' வண்ணப் படம் நம் கவனத்தைக் கவர்கிறது.

படத்தின் ஹீரோ சிவகுமாருக்கு நல்ல 'சான்ஸ்!' முரட்டுத்தனமாகவும், நளினமாகவும் நடித்து, சண்டைக் காட்சிகளில் சக்கைப் போடு போட்டு ஜமாய்த்திருக்கிறார். அண்ணியின் சொல்லுக்குக் கட்டுப்படும் இடங்களில் நெகிழ்வோடு அருமையாக நடித்திருக்கிறார்.

அண்ணனாக வரும் வி. கோபாலகிருஷ்ணனின் நடிப்பு மிகவும் இயல்பாக இருக்கிறது. பண்ணையாரிடம் கைகட்டி நின்று குழையும் போதும் சரி, தம்பியைக் கடிந்து கொள்ளும் போதும் சரி, அவர் தம் பாத்திரத்தைச் சிறப்பாக வெளியிட்டிருக்கிறார்.

புஷ்பலதா அண்ணி; தம் பாத்திரத்தை உணர்ந்து நன்றாய் நடித்திருக்கிறார். சாவித்திரி தாம் தாயாக வருவதற்கு எல்லாத் தகுதிகளையும் பெற்றவர் என்பதை ஆரம்பக் காட்சிகளிலேயே நிரூபித்து விடுகிறார். மகனிடம் பரிவையும், பாசத்தையும் காட்டும் அதே நேரத்தில், கடுமையையும் காட்ட நேரிடும் போது நடிகையர் திலகத்திடம் நடிப்பின் முதிர்ச்சியைக் காண முடிகிறது.

வழக்கம்போல் மனோகருக்கு முரட்டுப் பண்ணையார் பாகம் தான். ஆகவே, அவர் நடிப்பும் வழக்கம் போலத்தான் இருக்கிறது.

துரையவனின் கதைக்கு, பாஸ்கரன் வசனம் எழுதியிருக்கிறார். விஜயனின் டைரக்ஷன் படத்தில் பாராட்ட வேண்டிய அம்சம்.

கர்நாடக மாநிலத்தில் மிகவும் வெற்றிகரமாக ஓடும் ஒரு கன்னடப் படத்தின் தமிழாக்கம் இது. தமிழ்ப்படுத்தும் அளவுக்கு அப்படி ஒன்றும் உயர்ந்ததாகவோ புதுமையாகவோ இல்லை. கதாநாயகி அடிக்கடி கதாநாயகனை, 'பொறுக்கி, எச்சிற்கலை' என்று திட்டுவது கொஞ்சம்கூட நன்றாயில்லை! ரியலிஸம் என்று நினைத்துக் கொண்டார்கள் போலும்!

புதுமுகம் குமாரி மஞ்சுளா ஹீரோயினாக வருவதற்கு ஏற்ற கவர்ச்சியை மட்டும்தான் பெற்றிருக்கிறார். நடிப்பில் இன்னும் முதிர்ச்சி பெறவில்லை. முதலில் வசனங்களை உணர்ந்து பேசப் பயில வேண்டும்.

''துளித்துளி, மழைத்துளி'' என்ற வாலியின் பாடல் சுசீலாவின் தேன்குரலில் மிகவும் இனிமையாக ஒலிக்கிறது.

''புதுவெள்ளம்'': தலைப்பு மிக நன்றாயிருக்கிறது.

அனுபவங்கள்

கணவன் - மனைவி இருவருக்கும் இடையே சந்தேகம் பேய் புகுந்து விளையாடும் பழைய காலக் கதைதான் இந்நாடகம். சந்தேகத்துக்கு உரிய சம்பவங்கள் மிகவும் செயற்கையான சம்பவங்களாகத்தான் தோன்றின. நாடகத்தில் பல கருத்துக்களைப் புகுத்த வேண்டும் என்னும் ஆர்வத்தில் கூடுதலாகவே புகுத்தி விட்டார்கள். அதே சமயத்தில் ஒரு சின்ன நாடகம் எவ்வளவுதான் தாங்கும் என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா?

நல்ல மனிதனாக, ஒழுக்கமுள்ளவனாக, நேர்மையாளனாக வந்து நாடகத்தை ஆக்கிரமித்துக் கொண்டு விட்ட அரசு ஊழியர் சண்முகம் இந் நாடகத்தின் ஜீவநாடி. ஜே. வி. எஸ். அந்தப் பாத்திரத்தை நன்கு சோபிக்கச் செய்தார். அவர் மேடையில் தோன்றியபோதெல்லாம் ஒரு நாடகம் பார்க்கிற நினைவே இல்லை. அவ்வளவு இயற்கையான நடிப்பு.

சண்முகத்தின் மனைவி பத்மா நாடகத்தின் முக்கிய பாத்திரம். அதை ஏற்ற மாலா அருமையாக நடித்தார். ஆரம்பத்தில் கணவனை ஏசியபோதும் சரி, பிற்பகுதியில், கணவன் நோயுற்றதும் நெகிழ்ந்து உருகின போதும் சரி, சிறப்பாயிருந்தது.

தாண்டவமூர்த்தியின் பாத்திரம் நாடகத்தை நல்ல படியாக, அழுத்து வைக்கும் பாத்திரம். அதை ஏற்ற 'கலி' நாகராஜன் மேடையைத் தம் போக்குத் திறமையினால் கலகலப்பாக்கினார். பிறரது ஆடம்பர வாழ்க்கையைக் கண்டு பொறாமைப்படுவதோ, நாமும் அப்படி வாழ விரும்புவதோ பெருந்தவறு என்ற நாடகக் கதையின் கருத்தைத் தாண்டவமூர்த்தியின் உரையாடல்கள் தெளிவாக்குகின்றன.

பத்மாவின் தங்கை புருஷன் முரளியாக நடித்த கண்ணனின் மேடைக்கேற்ற கதாநாயகத் தோற்றத்தைப் பாராட்டலாம்.

கதை, வசனம், டைரக்ஷன் எஸ். எல். ரத்தினத்தின் திறமைக்குச் சவால் விடுகின்றன. ஈரோஸ் பேட்டை. சீப்ரங்ஸ் லீவைன் ஆட்ஸ் குழுவினரின் இந்த நாடகம் ஓர் அனுபவம்தான்! -சாந்தன்



பொன்னியின் புதல்வர்



சுந்தா

31. விமோசனம்

என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்?
என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்?

—பாரதியார்.

ராஜாஜியை ஆசிரியராகவும் கல்கியை உதவி ஆசிரியராகவும் கொண்ட மதுவிலக்குப் பிரசாரப் பத்திரிகை — ''விமோசனம்'', சுக்ல வருஷம் ஆவணி மாதத்தில், அதாவது 1929 ஆகஸ்டு மாதத்தில் வெளியாகத் தொடங்கியது.

அந்தப் பத்திரிகை பற்றிய விளம்பரம் ஒன்று, சிறிது காலத்துக்கு முன்னால் வரை கல்கி வேலை பார்த்து வந்த ''நவசக்தி''யின் 21-8-1929 இதழில் வெளியாயிற்று:

விமோசனம்
ஒரு மாதப் பத்திரிகை

இந்தப் பத்திரிகை சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியால் நடத்தப்பட்டு வருகிறது. இதன் நோக்கம் பூர்ண மதுவிலக்கு. வருஷச் சந்தா, தபாற்கூலி உள்பட ரூபா ஒன்று. அயல்நாட்டுக்கு. ரூ. 1-2-0.

அடியிற்கண்ட விலாசத்திற்குத் தொகையைத் தபால் தலை அல்லது மணியார்டர் மூலம் அனுப்பிச் சந்தாதாராகப் பதிவு செய்து கொள்ளலாம்.

தனிப் பிரதிகள் எல்லாக் காதி வஸ்திராலயங்களிலும் கிடைக்கும். விலை அணா ஒன்று. கள்ளை ஒழிக்கும் கிளர்ச்சியில் சேர்ந்து ஏழைகளைக் காப்பாற்றுங்கள்.

காந்தி ஆசிரமம், திருச்செங்கோடு

அதே நவசக்தியின் அதற்கு முந்திய வாரத்து இதழில், புதிய பத்திரிகையை வரவேற்கும் மதிப்புரை ஒன்று வெளியாயிற்று:

..அப்பத்திரிகை மதுவிலக்கின் இன்றியமையாமையைக் கதைகள் வாயிலாகவும், படங்கள் வாயிலாகவும், பிற வாயிலாகவும் விளக்க வல்ல பொருள்களைத் தாங்கி யிருக்கிறது. இப் பொருள்கள் மக்கள் நெஞ்சில் ஊற ஊற மதுவில் அவர்கட்கு வெறுப்பு உண்டாகு மென்பதில் ஐயமில்லை. இம்முயற்சி போற்றுதற்குரியது. இதற்குத் துணை நிற்க வேண்டுவது தமிழ்நாட்டின் கடமை.

''குமரி மலர்'' ஆசிரியர் ஏ. கே. செட்டியார், ''விமோசனம்'' இதழ்களை ஆராய்ந்து அதன் தனிச் சிறப்புக்களை எடுத்துச் சொல்லி யிருக்கிறார்:

குறிப்பிட்ட ஒரு கொள்கைக்காகவே, முற்றிலும் மதுவிலக்குப் பிரசாரத்துக்காகவே





வெளி வந்தது; மக்கள் அனைவரும் புரிந்து கொள்ளும் எளிய நடை; வியாபார விளம்பரம் கிடையாது; சித்திரங்களுடன் வெளி வந்த முதல் (தமிழ்ப்) பத்திரிகை; அச்சுப் பிழையே இல்லாதது; பத்திரிகை தர்மம் வழுவாத பத்திரிகை; தரமான கட்டுரைகளும் கதைகளும் கொண்டது.

(கல்கி இதழ் — 18-2-73)

எடுத்த எடுப்பிலேயே ''விமோசனம்'' சிறானதொரு வெளியீடாய் இருந்ததற்குக் காரணம், ராஜாஜிக்கும் கல்கிக்கும் பத்திரிகைத் தொழிலில் இருந்த அனுபவம். மகாத்மா காந்தி 1922ல் சிறையிலிருந்த போது அவருடைய ''யங் இந்தியா'' வாரப் பத்திரிகையை நடத்திய அனுபவம் ராஜாஜிக்கு; நவசக்தி அனுபவம் கல்கிக்கு.

அந்தப் பத்திரிகையைத் தொடங்குவதற்கு முன்னால் கல்கிக்குச் சில சந்தேகங்கள் உண்டாயின. அவற்றிற்கு ராஜாஜி எப்படிச் சமாதானம் கூறிப் பத்திரிகையின் வெற்றிக்கு வகை செய்தார் என்பதைப் பல ஆண்டுகளுக்குப் பிறகு, ''என் பூர்வாசிரமம்'' என்ற கட்டுரையில் கல்கி தெரிவித்தார்:

''பத்திரிகையின் பக்கங்கள் எத்தனை?''

''நாற்பது பக்கங்கள்.''

''நாற்பது பக்கங்களும் மதுவிலக்கு விஷயமேயா?''

''ஆமாம்.''

''நாற்பது பக்கத்துக்கு மதுவிலக்கு விஷயம் எப்படித் திரட்டுவது? அப்படித் திரட்டிப் பத்திரிகை கொண்டு வந்தாலும் ஜனங்கள் வாங்குவார்களா?''

'' ஏன் வாங்க மாட்டார்கள்? வாங்கா விட்டால் வாங்கச் செய்ய வேண்டும்.''

''எப்படி வாங்கச் செய்வது? அடிபிடி கட்டாயம் செய்ய முடியுமா? படிக்கச் சுவாரஸ்யமாய் இருந்தால்தானே பத்திரிகையை வாங்குவார்கள்?''

''படிக்கச் சுவாரஸ்யமாய் இருக்கும்படி செய்யலாம். நீ பார்த்துக் கொண்டே இரு. முதல் இதழை நான் தனியாகவே தயாரித்துக் காட்டுகிறேன்.''

அவ்விதமே ராஜாஜி ''விமோசனம்'' முதல் இதழைத் தயாரிக்க ஆரம்பித்தார். ஒரு வாரத்தில் தயாரித்து முடித்து விட்டார். அட்டைப் பக்கத்துக்கு மதுப் புட்டியாகிய அரக்கனை ஜனங்கள் விரட்டியடிப்பதுபோன்ற படம். உள்ளே முதல் பக்கத்துக்குப் பாரதியாரின் ''ஜய பேரிகை கொட்டடா!'' என்ற பாட்டைத் தழுவி, ''மதுவெனும் பேய்தனை அடித்தோம்!'' என்று ஒரு பாட்டும் படமும். மதுவிலக்கின் அத்தியாவசியத்தைப் பற்றிய தலையங்கம். குடியின் தீமையை விளக்கும் இரண்டு கதைகள். இன்னும் சில கட்டுரைகள். ''கடற்கரைக் கிளிஞ்சல்'' என்னும் தலைப்பில் அநேக சிறு குறிப்புக்கள். ஆங்காங்கே மதுவிலக்குப் பிரசாரப் படங்கள். இவ்வளவும் தயாராகி விட்டன. படங்களுக்கு ஒருவாறு உருவங்களை யெல்லாம் குறிப்பிட்டு ராஜாஜி பிளான் போட்டுக் கொடுத்து விடுவார். அவற்றைப் பார்த்துச் சரியான படங்களைச் சென்னையில் ஸ்ரீ செட்டி என்பவர் செய்து கொடுத்து வந்தார்.

அமெரிக்காவிலிருந்தும் இங்கிலாந்திலிருந்தும் பல மதுவிலக்குப் பிரசார நூல்களும் பத்திரிகைகளும் ராஜாஜி தருவித்தார். அவற்றைப் படித்து ''மதுவிலக்கு வினா—விடை'' என்றும் ஒரு விஷயத்துக்கு மட்டும் முதல்



★ ''பாங்கர் விநாயக ராவ்'' என்ற புத்தகத்தில் 'தெய்வ யானை' என்ற கல்கியின் சிறுகதைக்கு 'ரேஸாக்' வரைந்த சித்திரம்.

★ விமோசனம்-மேலட்டை. ''முதல் இதழைப் பார்த்ததுமே என் சந்தேகங்கள் எல்லாம் பறந்தன; இந்தப் பத்திரிகை வெற்றியடையப் போகிறது என்று தைரியம் உண்டாயிற்று.''

- நன்றி: ஏ. கே. செட்டியார்

★ விமோசனம் பத்திரிகைக்காக நவசக்தியில் வெளியான விளம்பரம்.

புகைப்படம்:
இரா. முத்துக்குமாரசாமி.

இதழுக்கு நான் எழுதிக் கொடுத்ததாக ஞாபகம் இருக்கிறது. விஷயம் எல்லாம் தயாரான பிறகு பத்திரிகையை எங்கே அச்சடிப்பது என்ற கேள்வி ஏற்பட்டது. காந்தி ஆசிரமத்தில் அச்சுக்கூடம் இல்லை. பல யோசனைகள் செய்த பிறகு அப்போது சென்னை திருவல்லிக்கேணியில் இருந்த ஹிந்திப் பிரசார அச்சுக் கூடத்தில் அச்சடிப்பது என்று தீர்மானிக்கப் பட்டது.

''திருவல்லிக்கேணியில் பத்திரிகையை அச்சடிப்பது சரிதான். அச்சடித்த பிரதிகளை என்ன செய்வது?'' என்று கேட்டேன்.

''ஒரே பார்சலாகக் கட்டி இங்கே கொண்டு வந்து சந்தாதாரர்களுக்கு அனுப்புவது. காந்தி ஆசிரமம் தபாலாபீசுக்கு வேலை வேண்டுமோ இல்லையோ?'' என்றார் ராஜாஜி.

''சந்தாதார் இருக்கும் இடமே தெரியவில்லையே? அவர்களை எப்படிப் பிடிப்பது?'' என்று கேட்டேன்.

''பார்த்துக் கொண்டே இரு. போட்டி போட்டுக் கொண்டு வருவார்கள்'' என்று ராஜாஜி சொன்னார்.

அப்போது தமிழ் மக்களிடையே பத்திரிகை படிக்கும் வழக்கம் நன்கு பரவி இருக்கவில்லை. ஸ்ரீ வ. வே. சு. ஐயர் அவர்களின் 'பால பாரதி'யும், ஸ்ரீ ஏ. மாதவய்யா அவர்களின் 'பஞ்சாமிர்தம்' என்னும் பத்திரிகையும் எவ்வளவு கஷ்டப்பட்டன என்பதை நான் அறிந்திருந்தேன். 'பாலபாரதி'க்கு 300 சந்தா தாரர்களுக்கு மேலும், 'பஞ்சாமிர்த'த்துக்கு 400 சந்தாதாரர்களுக்கு மேலும் சேரவில்லை. ஸ்ரீ மாதவய்யா பத்திரிகை போட்டுப் பண நஷ்டமும் அடைந்தார். எத்தனையோ விதமான ரஸமான விஷயங்களை வெளியிட்ட பத்திரிகைகளே இவ்வளவு லட்சணத்தில் நடந்திருக்கும் போது, மதுவிலக்குப் பிரசாரத்துக்காக மட்டும் நடத்தும் பத்திரிகை எவ்விதத்தில் வெற்றி அடையப் போகிறது? குடிகாரர்கள் இந்தப் பத்திரிகையை ஒருநாளும் படிக்க மாட்டார்கள். குடிப் பழக்கம் இல்லாதவர்களுக்கோ இப்பத்திரிகை தேவையே இல்லை. அப்படி இருக்கும் போது மதுவிலக்குப் பிரசாரத்துக்காக ஒரு தனிப் பத்திரிகை நடத்துவதில் என்ன பயன்? யார் வாங்கப் போகிறார்கள்? வீண் கஷ்டத்தோடு நஷ்டமும் ஏற்படுமே?

இப்படிப்பட்ட சந்தேகங்களும் குழப்பங்களும் மனத்தில் குடி கொண்டிருந்தன. ஆனால் ''விமோசனம்'' முதல் இதழைப் பார்த்ததும் என் சந்தேகங்கள் எல்லாம் பறந்தன. ராஜாஜியே சென்னைக்குச் சென்றிருந்து ஹிந்தி பிரசார சபையில் முதல் இதழை அச்சடித்துக் கொண்டு வந்தார். அவர் கொண்டு வந்த விமோசனப் பத்திரிகைக் கட்டைப் பிரித்து ஆவலுடன் ஒரு பிரதியை எடுத்துப் பார்த்தேன். ''நம்முடைய பயங்கள் எல்லாம் வீண். இந்தப் பத்திரிகை வெற்றியடையப் போகிறது'' என்று எனக்குத் தைரியம் உண்டாகி விட்டது.

முதல் இதழ் ஆயிரம் பிரதிகள் தான் அச்சிட்டோம். அதுவரை சேர்ந்திருந்த சந்தாதாரர்களுக்கு அனுப்பிய பிறகு, தமிழ் நாட்டிலிருந்த கதர் வஸ்திராலயங்களுக்கு எல்லாம் விற்பனைக்காக அனுப்பினோம். என்னுடைய சந்தேகங்கள் பறந்துபோய்ப் பத்திரிகைப் பிரதிகளும் பறந்து போய் விட்டன.

இரண்டாவது இதழிலிருந்து நானே பொறுப்பை எடுத்துக் கொண்டேன். ராஜாஜி ஒவ்வொரு இதழுக்கும் மதுவிலக்கைப் பற்றிக் கதையோ கட்டுரையோ எழுதுவார். நானும் இதழுக்கு ஒரு மதுவிலக்குக் கதை தவறாமல் எழுதி வந்தேன். ராஜாஜியின் கருத்துக்களையொட்டி மதுவிலக்குப் பிரசாரக் கட்டுரைகள் குறிப்புக்கள் முதலியவற்றையும் எழுதி வந்தேன்....

'விமோசனம்' விற்பனை ஒவ்வொரு இதழுக்கும் அபிவிருத்தி அடைந்து வந்தது. மொத்தம் பத்து இதழ்கள்தான் வெளியிட்டோம். ஒன்பதாவது, பத்தாவது இதழ்கள் நாலாயிரம் பிரதிகள் அச்சிடப்பட்டன. அந்தக் காலத்து நிலைமையில் ஒரு தனிப்பட்ட விஷயத்தைப் பற்றிய பத்திரிகை அவ்வளவு பிரதிகள் விற்பனையானது ஒரு மகத்தான வெற்றி என்றே கருத வேண்டியிருக்கிறது.

(வெள்ளிமணி 12-9-47)

''விமோசனம்'' இதழ்களில் கல்கியின் எழுத்துப் பங்கு கணிசமானது. பட விளக்கங்கள் குறிப்புக்கள் முதலிய அம்சங்களைத் தவிர, ''பாங்கர் விநாயக ராவ்'' என்ற சிறு நாடகம் ஒன்றையும் ஆறு சிறுகதைகளையும் அவற்றில் அவர் எழுதினார்.


அந்த ஆறு கதைகளாவன: தெய்வயானை; சின்னத் தம்பியும் திருடர்களும்; அரசூர்ப் பஞ்சாயத்து; கோவிந்தனும் வீரப்பனும்; கவர்னர் வண்டி; விதூஷகன் சின்ன முதலி.

இந்தக் கதைகளில் சில, முன்பு ''நவசக்தி''யில் வந்த கல்கியின் கதைகளைவிட, நடையிலே நெகிழ்ச்சியும் உத்தியிலே நேர்த்தியும் கொண்டவை. ''பாங்கர் விநாயக ராவ்'' என்ற பெயர் கொண்ட நூலிலும், வேறு தொகுப்புக்களிலும், இவை இடம் பெற்றுள்ளன.

விமோசனத்தில் வந்த கதைகள் ஆறிலும் சிறந்தது ''தெய்வயானை''. சுருக்கமாய் இந்தக் கதை என்னவென்றால்:

கிராம முனிசீபு அப்புக்குட்டி முதலியாரின் மூத்ததாரத்து மகள் தெய்வயானை. அவள் மீது ஓமக்குட்டி காதல் கொள்கிறான். அது ஓர் எட்டாக் காதல். ஏனெனில், பெண்ணின் தகப்பனார் பெரிய பணக்காரர்; அவனோ ஏழை.

அவளைத் தனக்குக் கட்டிக் கொடுக்கும்படி அப்புக்குட்டி முதலியாரைக் கேட்க வேண்டும் என்றால், அவருக்குச் சமமாய் அவன் விரைவிலே பணக்காரனாக வேண்டும். அதற்கு ஒரே வழி உள்ளூர் கள்ளு, சாராயக் கடைகளைக் குத்தகைக்கு எடுப்பது. அப்படி எடுப்பதற்குத் தன் தாயாரின் உதவியை நாடு


வாழ்க்கையில் அதிர்ஷ்டமுள்ள ஆடவர் ஒருவரை மீண்டும் சந்திக்கும்போது...
...அவர் அணிந்துள்ள ஆடைகளின் அழகையும் பாருங்கள்!
நிச்சயமாக, மபத்லால் க்ரூப் அளிப்பவை நேர்த்தியான துணிமணிகள்தான் !



திரு என். எஸ். சிவா அவர்களின் புதல்வன் சிரஞ்சீவி வைத்யநாத சிவாவுக்கும், திரு எஸ். பத்மநாபன் அவர்களின் புதல்வி சௌ. சங்கரிக்கும் அண்மையில் சென்னை உட்லண்ட்ஸில் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்

கிறான். அவன் பொற்றிப் பொற்றி வைத்திருக்கும் பணத்தைக் கேட்கிறான். அவனுடைய தகப்பனார் குடித்துக் குடித்தே சொத்தையெல்லாம் அழித்து விட்டு மாண்டதைத் தாயார் எடுத்துச் சொல்லி, ''கள்ளு விற்கும் பாவத் தொழில் நமக்கு வேண்டாம் அப்பா!'' என்கிறான். ''கள்ளுக்கடையில் தகப்பனார் பறிகொடுத்த பணத்தை அதன் மூலம் மீட்பேன்'' என்று அவன் வாதித்துத் தாயாரிடமிருந்து பணத்தைக் கைப்பற்றுகிறான்.

கள்ளும் சாராயமும் விற்று ஓமக்குட்டி கொள்ளை லாபம் சம்பாதிப்பதைக் கிராம முனிசீபு கண்டு பொறாமைப்படுகிறார். ''கள்ளுக்கடைக்காரப் பயல்'' என்று அவனை இழிவாகப் பேசுகிறார். சிறிது காலத்துக்குப் பிறகு அவரே குடிப்பழக்கத்துக்கு உள்ளாகிறார். ஓமக்குட்டியின் கடையிலிருந்தே புட்டி புட்டியாய்ச் சாராயம் தருவித்துக் குடிக்கிறார். மளமளவென்று செல்வத்தை இழந்து கடனாளியாகிறார். நெருக்கடியான ஒரு சமயத்தில் ஓமக்குட்டியிடம் அவர் ஓடி வந்து பண உதவி கேட்கிறார். அவர் கேட்டதை இளைஞன் கொடுத்து விட்டு, தனது வெகுநாளைய ஆசையை அவரிடம் குறிப்பாய்த் தெரிவிக்கிறான். மகிழ்ச்சியுடன் அவர் இணங்குகிறார். ஆனால், கல்யாணத்திற்கு முகூர்த்தம் வைப்பதற்கு முன்னால் மிதம் மிஞ்சிய குடியினால் அவர் இறக்கிறார்.

ஓமக்குட்டி யோசிக்கிறான். தெய்வயானையைக் கல்யாணம் செய்து கொண்டால் அவளுடைய சித்தியையும் வைத்துக் காப்பாற்ற வேண்டும். குடிகார அப்புக்குட்டி முதலியார் விட்டுச் சென்ற கடனையும் அடைக்க வேண்டியதாகும். ஏன் இந்த வீண் பொறுப்பு?... ஆனாலும் மனம் கேட்கவில்லை. தான் ஆசைப்பட்ட பெண்ணை மணக்கவே வேண்டும் என்று தீர்மானிக்கிறான்.

இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும் தருவாயில் அவன் இருக்கையில், ஒருநாள், தன் கடையிலிருந்து கிராம முனிசீபின் வீட்டுக்குச் சாராய புட்டி போவதைக் கவனிக்கிறான். குடித்துக் கெட்டவர் இறந்து போன பிறகும் யார் அங்கே குடிப்பது? அதைக் கண்டு பிடிப்பதற்காக ஓமக்குட்டி அந்த வீட்டுக்குச் செல்கிறான்.

அங்கே, சித்தியுடன் சேர்ந்து தெய்வயானை குடித்துக் கொண்டிருக்கிறாள்!

இது பிரசாரக் கதையே யாயினும் நல்ல கதை அம்சம் பொருந்தியது. குடியின் கேட்டையும் கெடுக்கும் தன்மையையும் ஒருங்கே எடுத்துக் காட்டுகிறது. இறுதியில் வரும் அதிர்ச்சி உத்தியைக் கல்கி, பின்னாளில் மேலும் சில கதைகளில் நயமாகக் கையாண்டிருக்கிறார்.

ஓமக்குட்டியே தம்மிடம் சொன்ன பாணியில் இந்த கதையைக் கல்கி எழுதியிருக்கிறார். கதை மாந்தர் ஒருவரே கதையைச் சொல்வதான இந்த உத்தியையும் பிந்தியக் கதைகள் பலவற்றில் அவர் பயன்படுத்தி உள்ளார்.

''விமோசனம்'' இதழ்களில் நிறைய எழுதியவர்கள் கல்கியும் ராஜாஜியும். மற்றவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள், இப்போதைய கல்கி அதிபர் சதாசிவம், ராஜாஜியின் குமாரி நாமகிரி அம்மாள், கே. சந்தானம், தி.ஜ.ர.

''விமோசனம்'' ஏழாவது இதழில் அந்தப் பத்திரிகையின் செல்வாக்கைக் காட்டும் குறிப்பு ஒன்று வெளியாயிற்று:

தமிழ்நாட்டின் பல இடங்களிலும் பல அன்பர்கள் மதுவிலக்குக்காகப் பாடுபட்டு வருகிறார்கள். விமோசனத்துக்குச் சந்தாதார்

The following particulars regarding the ownership of 'KALKI', the Tamil weekly newspaper, are published, as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules, 1956.

FORM IV

1. *Place of Publication*: Madras
2. *Periodicity of its Publication*: Weekly
3. *Name of Printer and Publisher*: V. Vaidyanathan

   Nationality: Indian

   Address: 1-A/2, Tank Road Nungambakkam Madras-600 034
4. *Name of Editor*: K. Rajendran

   Nationality: Indian

   Address: No. 1, Purushothama Mudaliar Road, Lake Area, Nungambakkam Madras-600 034
5. *Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital;*

   Bharathan Publications Pvt. Ltd., 20, Dr. Guruswami Mudaliar Road, Madras-600031.

V. Vaidyanathan

1-3-75 *Publisher*

சேர்த்துக் கொடுத்தும், தனிப் பிரதிகள் விற்பனை செய்தும், தாங்களே ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிகள் வாங்கி விநியோகித்தும் உதவி செய்யும் அன்பர்கள் எல்லோருக்கும் நமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பத்திரிகைக்கு ஆதரவு பெருகி வருவதைக் கண்டு, மாதத்துக்கு மாதம் கூடுதலான ஊக்கத்துடன் கல்கி உழைத்தார். கதை கட்டுரைகள் எழுதுவதோடு அவருடைய வேலை நிற்கவில்லை. விமோசனம் சம்பந்தமான அலுவல்கள் — சந்தாக்களை வரவு வைப்பது, பிரதிகளைக் கட்டியும் உறையிலிட்டும் அனுப்புவது உள்பட — எல்லாவற்றையும் அவர் கவனித்துக் கொண்டார். ராஜாஜியின் பக்கத்தில் உட்கார்ந்து வேலை செய்யும் பெருமையால், எந்த அற்பக் காரியத்தையும் பெருமையுடனே செய்தார்.

அப்புறம், மிக மிகப் பெருமையும் உற்சாகமும் அளிப்பதாய், சில தடவைகளில் ராஜாஜியுடன் சென்னைக்குப் போய்த் தங்கி வருவது —

மாதம் ஒரு தடவை சென்னைக்குப் புறப்பட்டுச் சென்று பத்திரிகையை அச்சடித்து பைண்டு செய்து எடுத்து வருவேன். சில சமயம் ராஜாஜிக்குச் சென்னையில் வேறு காரியங்கள் இருக்கும். எனவே, இரண்டு பேருமாகச் சென்னைக்குப் போவோம். மூன்று நாளைக்குள் ஹிந்திப் பிரசார அச்சுக்கூடத்தார் பத்திரிகையை அச்சிட்டு பைண்டு செய்து கொடுத்து விடுவார்கள். இந்த மூன்று நாளும் ... ஹிந்தி பிரசார சபையிலேதான் எங்களுக்கு வாசம். இரவு நேரங்களில் சபைக் கட்டிடத்தின் மேல் மச்சில் மொட்டை மாடியில் படுத்து உறங்குவோம். தூக்கம் வருகிற வரையில் ராஜாஜியுடன் பேச்சுக் கொடுத்து, அவருடைய பழைய வாழ்க்கைச் சம்பவங்களைப் பற்றி ஏதாவது கேட்பேன். அவர்களும் ரஸமான சம்பவம் ஏதாவது சொல்வார்கள்.

(பாங்கர் விநாயகராவ் - முன்னுரை)

சில சமயம் கல்கி, நாட்டுக்கு விமோசனம் உண்டா, சுயராஜ்யம் என்பது கிடைக்கக் கூடியதுதானா, எப்போது எப்படிக் கிடைக்கும் என்றெல்லாம் கேட்பார். அப்போது அண்மையில் (1929 இறுதியில்) அமிருதசரஸில் கூடிய காங்கிரஸ் மகாசபை, பூர்ண சுயராஜ்யத் தீர்மானத்தை இயற்றி யிருந்ததுபற்றி அவர் குறிப்பிட்டு, அந்தத் தீர்மானம் செயலில் நிறைவேறுமா என்று தலைவரைக் கேட்பார். அதற்கு ராஜாஜி, அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும் பொறுப்பைக் காந்திஜி ஏற்றுள்ளதால் அவர் ஏதேனும் கட்டாயம் செய்வார் என்று பதில் சொல்லுவார். ஆனால் சுயராஜ்யம் கிடைக்கிறவரை காத்திராமல், மக்களுக்கு நம்மாலான தொண்டை இடையறாமல் செய்து கொண்டே இருக்க வேண்டும் என்பார்.

சில இரவுகளில் பேசிக் கொண்டே ராஜாஜி கண் அயர்வார்; கல்கி தூக்கம் கொள்ளாமல் எழுந்து விடுவார்; மொட்டை மாடியில் குறுக்கும் நெடுக்கும் அலைவார். கீழே ஹைரோட்டில் டிராம் வண்டிகளின் ஓட்டம் குறைந்து குறைந்து நின்று போகும். ஜட்கா வண்டிகளின் கடகட சப்தம் மட்டும் இடையிடையே கேட்கும். ஜிலுஜிலு வென்று கடற்காற்று வீசும்; அந்தக் காற்றுடன் அலை ஓசையும் கலந்து வருவது போல் தோன்றும். உள்ளத்தில் ஏதேதோ உணர்ச்சி அலைகள் எழுந்து எழுந்து மோதும்...

ராஜாஜிதான் தம்முடைய இலட்சிய புருஷர் என்பதை, முன்பு எத்தனையோ தரம் மனத்துக்குள் சொல்லிக் கொண்டது போல், மீண்டும் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொள்வார். ''இவருடைய வாழ்க்கையுடன், வாழ்க்கை நெறியுடன் இன்னும் வலுவாக இணைந்து கொள்வேன். எப்போதும் எங்கேயும், இவருடன் நடப்பேன். என்ன கஷ்ட நஷ்டங்கள் நேர்ந்தாலும் பொறுத்துக் கொள்வேன். குடிசையிலும் வசிப்பேன்; சிறையிலும் வசிப்பேன். தேசத்துக்கே உழைக்க ஜன்மம் எடுத்தவர் இவர். இவரைப் பின்பற்றி, இவரைப் போற்றி மகிழவே நான் ஜன்மம் எடுத்தேன் என்று தோன்றுகிறது.''

அந்த மொட்டை மாடி நினைவோட்டங்களின் போது, சுதந்திரம் என்பது ஒரு கனவாகத்தான் இருந்தது. எப்போது அது நனவாகுமோ தெரியாது. விடுதலைப் போராட்ட காலத்திலும், விடுதலை அடைந்த பின்னரும், தாம் போற்றும் வீரர் நிறைய பங்குக் கொள்ளக்கூடும் என்பதைக் கல்கி உணர்ந்து தான் இருந்தார். ஆனால், எவ்வளவு பெரிய பங்கு என்பதை ஊகித்திருக்க முடியாது. நாட்டின் வரலாற்றுடன் தமது இலட்சியத் தலைவரின் வரலாறும், அதனுடன் தமது வரலாறும் எவ்வளது தூரம் பிணைந்திருக்கும் என்பதையும் அவர் அளவிட்டிருக்க முடியாது.

வேகமாகக் கடற் காற்று வீசுகிறது. அலை ஓசை கேட்கிறது...

அடுத்த சில வாரங்களில், அலையலையாக அதிசய நிகழ்ச்சிகள்! (தொடரும்)

தலைவர் தரிசனம் 7

பி. ராமமூர்த்தி

சொல்பவர்: குமாரி மைதிலி சிவராமன்

★★★



உங்களுக்குப் பஞ்சாபி சப்பாத்தி பிடிக்குமா? இல்லை ராஜஸ்தான் ரகத்தின் மீது விருப்பமா? இல்லை நம் தென்னிந்திய ரகமே போதுமா? எது வேண்டுமானாலும் கிடைக்கும், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு பி. ராமமூர்த்தி அவர்கள் ஆட்டா மாவுடன் அடுப்படிக்குப் போய் விட்டால்! ஆம்! அவர் ஒரு சமையல் நிபுணர். பல பிராந்திய உணவு வகைத் தயாரிப்புக்களும் அவருக்கு அத்துப்படி! இந்தக் கலையை அவர் தமது நீண்ட கால ஜெயில் வாசத்தின்போது கற்றுத் தெரிந்து கொண்டிருக்கிறார்! அவருக்கு இப்போது அவகாசம் மாத்திரம் இருந்ததோ, அருகில் உள்ளவர்களுக்குச் சுவையான உணவு நிச்சயம் கிடைக்கும்!

இவருக்குச் சுவையான உணவுதான் வேண்டும். அது பிடிக்கும்; இது பிடிக்காது என்ற விவகாரமே கிடையாது. தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள பலப்பல விவசாயக் குடும்பத்தினருடன் வெவ்வேறு சமயங்களில், அவர்களின் கூழையும், நீராகாரத்தையும் பகிர்ந்து கொண்டு எத்தனையோ நாட்களைக் கழித்திருக்கிறார்.

1970ம் ஆண்டில்தான் நான் முதன் முதலில் ராமமூர்த்தி அவர்களைச் சந்திக்க நேர்ந்தது. அதற்கு முன் நான் அவரைப் பற்றிக் கேள்விதான் பட்டிருக்கிறேன்.

ஐக்கிய நாடுகள் சபைக் காரியாலயங்களில் ஐந்து வருட காலம் பணியாற்றி விட்டுச் சில சோஷலிஸ்ட் நாடுகளின் வழியாக நான் தாயகத்துக்குத் திரும்பி வந்த நேரம், ஓர் ஆங்கிலப் பத்திரிகையை ஆரம்பிக்கவும் இட்டமிட்டிருந்தேன். என் அமெரிக்க வாசத்தின்போது எனக்குக் கிடைத்த சில தகவல்கள், அனுபவங்கள் கண்ட காட்சிகள் எல்லாமே என்னைத் தீவிர மார்க்ஸிய சித்தாந்தத்தின் பால் தள்ளி விட்டிருந்தன.

சென்னையில் மார்க்ஸியத் தோழர்கள் ஒரு வகுப்பு நடத்துவதாகக் கேள்விப்பட்டு அதில் கலந்து கொள்ள நான் சென்றிருந்தேன். பெரிய தலைவரான ராமமூர்த்தி எப்படிப் பேசுவாரோ, தடபுடலாக நடந்து கொள்வாரோ என்ற அச்சமெல்லாம் என் மனத்தில் வியாபித்திருந்தது. ஆனால் நான் ஏமாந்து போனேன். மிகச் சாதாரணமாக, கல்யாண வீட்டில் சந்திக்கும் நண்பர்களிடம் பேசுவது போல, எந்த வித ஹோதாவுமில்லாமல் பேசினார். அச்சத்தை விரட்டிவிட்டு என் மனத்தை வியப்பு ஆக்கிரமித்துக் கொண்டது.

அடுத்த வகுப்பில் எனக்கு மற்றோர் ஆச்சரியம் காத்திருந்தது. கற்றுக்குட்டியான என்னை ஒரு பெரிய தொண்டராக மதித்து, ''இந்த வகுப்பில் நான் மேலும் எதற்கெல்லாம் விளக்கங்கள் கொடுக்க வேண்டும்? எதையெல்லாம் சேர்க்க வேண்டும்?'' என்று கேட்டார். இது அவருடைய சரளமான சுபாவத்தையும், எளிமையாகப் பழகும் தன்மையையும் காண்பித்தது.

யாரும் எந்த நேரத்திலும் அவரைச் சந்திக்கலாம், பேசலாம். முன் அறிவிப்புக்கள் எதுவும் அவசியமில்லை. அதேபோல எந்தப் பிரச்னை பற்றியும் அவர் எந்த நேரத்திலும் விவாதிக்கத் தயாரா யிருப்பார். உருது, ஹிந்தி, ஆங்கிலம், தமிழ் நான்கிலும் எழுதவும் பேசவும் வல்லவர். மலையாளம், தெலுங்கு, கன்னடம் மூன்றிலும் சரளமாகச் சம்பாஷிப்பார்.

கட்சி சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்கள் எந்த விநாடியிலும் அவருக்கு நினைவில் இருக்கும். இதேபோலக் கட்சி ஊழியர்கள், மற்றும் பழைய நண்பர்கள் முதலியவர்களின் சொந்தக் குடும்ப விவரங்களும் இவருக்குத் துல்லியமாக நினைவில் இருக்கும். சிரமப்படாமல் சர்வசாதாரணமாக நினைவில் வைத்துக் கொள்வார்.



பள்ளி நாட்களில் கட்டணம் கொடுத்து மைதானத்துக்குள் கிரிக்கெட்

பந்தயம் பார்க்கப் போக முடியாத நிலையில், இலவசமாகப் பார்க்கப்பக்கத்துமரத்தின்மேல் ஏறி உட்கார்ந்து உற்சாகத்தில் கைதட்ட, பிடி நழுவிக் கீழே விழுந்து இவர் காலைச் சற்று ஊனமாக்கிக் கொண்டவர் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இந்தச் சிறு ஊனம், அவர் மன வேகத்தையோ, உடல் வேகத்தையோ தடை செய்வதில்லை. ஆனால் ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் இவர் தலைமறைவாக இருந்த வேளையில், சிறப்பாக மாறுவேடம் போட்டிருந்தும், இந்த ஊனம் இவரைப் போலீசாரிடம் காண்பித்துக் கொடுத்துவிட்டது. வேஷம்போடுவதில் இவர் ஒரு நிபுணர். குறிப்பாக வடநாட்டு சேட்டு வேடம் போட்டுப் போலீஸாருக்குப் பல நேரத்தில் டிமிக்கி கொடுத்திருக்கிறார். ஹிந்தி பாஷையைத்தான் பேச்சில் வெளுத்துக் கட்டுவாரே!

தஞ்சாவூர் மாவட்ட வேப்பத்தூரிலேயே இவர் ஒரு வருட காலம் தங்கி யிருக்க வேண்டுமென்று ஒரு காலத்தில் இவருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆனால் இவர் சீக்கிரமே ஒவ்வோர் இரவும் ஒவ்வொரு கிராமமாக நடந்து, பகலில் யார் கண்ணிலும் படாமல் இருந்து சென்னைக்குக் கால்நடையாகவே வந்து சேர்ந்து விட்டாராம்.

சென்னை மாநிலக் கல்லூரியில்தான் இவர் சேர்ந்து படிக்கலானார். அரசியலைப் பற்றி அடிக்கடி நண்பர்களிடம் விவாதிக்கத் தொடங்கினார். இது ராமமூர்த்தியின் தகப்பனாருக்குப் பிடிக்கவில்லை. மகன் இங்கிருந்தால் அரசியலில் ஈடுபாடு கொண்டுவிடுவான் என்று பயந்து காசி ஹிந்து சர்வகலாசாலைக்கு அனுப்பி வைத்தார். தகப்பனாரின் நோக்கத்துக்கு எதிர்பாராத பலன்தான் கிடைத்தது. காசியிலிருந்து திரும்பியபோது மகன் பக்கா அரசியல்வாதியாகவே மாறி விட்டிருந்தார்.

யாரிடமும் கைகட்டிச் சேவகம் செய்யக் கூடாது என்ற சுதந்திர உணர்ச்சியால் சென்னையில் சில காலம் ஒரு நெய்க் கடையைத் திறந்து வியாபாரம் செய்ய ஆரம்பித்தார். ஆனால் அவரது அரசியல் வேகம் நெய்க் கடையில் அவரை ஒட்ட வைக்கவில்லை.

1952ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் நடந்தபோது இவர் சிறைச்சாலையில் இருந்தார். சிறையிலிருந்தவாறே வேட்பு மனுப் போட்டுத் தேர்தலில் வெற்றியும் பெற்றார்.

ஏறத்தாழப் பத்தாண்டு காலம் இவர் அரசியல் கைதியாக ஜெயில் வாசம் செய்திருக்கிறார். சிறைச்சாலையில் அரசியல் கைதிகளுக்கான வசதிகளையும் சலுகைகளையும் வாதாடிப் பெறுவதில் கெட்டிக்காரர். இவரால், கூட இருந்த பலர் சௌகரியங்கள் அடைந்தனர்.

இவர் ஒரு சிறந்த வாசாலகர். சட்டத்தை முறையாகக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெறாதபோனாலும் அனுபவத்தினால் அத்தனை சட்ட நுணுக்கங்களையும் தெரிந்துகொண்டவர். கட்சி சம்பந்தப்பட்ட வழக்குகளுக்கும் இவரே, சாதகமான அத்தனை சட்ட 'பாயிண்டு'களையும் தேர்ந்தெடுத்துக் கொடுப்பார். தொழிலாளர் 'டிரிபியூனல்'களில் இவரே சட்டங்களைக் காட்டி வாதாடுவார்.

திறமைக் குறைவைக் காணும்போதுதான் இவருக்குக் கொஞ்சம் கோபம் வரும். தமக்குத் தேவையான டாக்குமெண்டுகள், விவரங்கள் எல்லாம் ஒழுங்காக வரிசைப்படுத்தப்பட்டு அளிக்கப்படவில்லையோ, இவர் பொறுமையை இழந்து விடுவார். ஆனால் தம் சொந்த விஷயங்களிலோ, நண்பர்களிடையே இவர் ஆத்திரப்படுவதோ பொறுமையை இழப்பதோ வெகு அபூர்வம்.

தம் குடும்பத்தில் யாராவது உடல் நலமின்றி இருந்தால் இரவு முழுவதும் கண் விழித்திருப்பார். மனத்தை அலட்டிக் கொண்டிருப்பார். ஆனால் அதிகாலையில் கட்சி ஊழியர்களையோ, நண்பர்களையோ சந்திக்கும்போது, அந்தக் கவலை, களைப்பு முதலியவற்றின் சுவடே முகத்தில் இல்லாமல் பழகுவார்.

பிறர் முகத்தைப் பார்த்து அவர்களுக்கு வைத்தியம் செய்யும் டாக்டராகவே மாறி விடுவார்.

ஒரு நாள், நான் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தபோது, என்னுடைய உடல் நலக் குறைவால் கொஞ்சம் மூச்சு வாங்கியது. அதைத் தலைவர் ராமமூர்த்தி கவனித்து விட்டார். நான் பேசி முடித்ததும், என் உடல்நிலையைப் பற்றி விசாரித்து அதற்கு என்னென்ன மருந்துகள் சாப்பிட வேண்டும் என்று அங்கேயே சொல்லி விட்டார்.


அரசியலில் இவருக்கு விரோதிகள் என்று யாருமே கிடையாது. எல்லாக் கட்சிகளிலும் இவருக்குச் சிறந்த நண்பர்கள் உண்டு. கல்யாண விஷயமா? வேலைவாய்ப்பு விஷயமா? எதுவாக இருந்தாலும், எந்தக் கட்சி நண்பர்களுக்கும் தம்மால் இயன்ற உதவி செய்வார்.

சில காலத்துக்கு முன் செம்பியம் பகுதியில் உள்ள ஒரு தொழிற்சாலையில் தொழிலாளர்களுக்கிடையே ஒரு சிறியபோராட்டம். ஒரு பகுதியினர் வெளியே ஆயுதங்களுடன் கலவரத்துக்குக் காத்திருந்தனர். அவர்கள், உள்ளிருந்து வெளியே வரவேண்டிய தொழிலாளர் கோஷ்டிக்கு எதிர்த் தரப்பினர். முன் இரவு வேளை. இந்தச் சூழ்நிலையை மனத்தில் கொண்டு உள்ளே இருக்கும் தொழிலாள நண்பர்கள் போலீஸ் பந்தோபஸ்து இருந்தும் வெளியே வர மறுத்தார்கள். நிர்வாகமோ, அந்தத் தொழிலாளர்கள் அடுத்த 'ஷிப்டு'க்கு இடம் கொடுத்து வெளியே போக வேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்தது.

ராமமூர்த்தி அவர்களுக்குத் தகவல் கிடைத்தது. உடனே செம்பியத்துக்குச் சென்றார். இத்தனைக்கும் அவர் அந்தத் தொழிற்சாலை ஊழியர்களின் எந்தச் சங்கத்துக்கும் தலைவர் இல்லை. மனிதாபிமானத்தின்மீது அங்கு போனார். உள்ளே யிருந்த தொழிலாளிகளுடன் பேசினார். நிர்வாகத்துடன் பேசினார். அந்தத் தொழிலாளிகளுடன் இரவு முழுவதும் தொழிற்சாலைக்குள் வேறு ஒரு பகுதியில் இரவு தங்கியிருந்து காலையில் பத்திரமாக அவர்களை ஊர்வலமாகவே புரசைவாக்கம் அழைத்து வந்து விட்டார். போலீசாருக்கு நிம்மதி. கலவரம் எதுவும் நிகழாமல் ராமமூர்த்தி சமாளித்துவிட்டாரே!

தலைவர் ராமமூர்த்திக்கு மனிதாபிமானம் தான் மதம். அவருக்குச் சொந்த முறையில் அவசியமான விஷயம் வெற்றிலை போடுவது தான். மற்றவர்களின் அவசியங்கள்தான் அவர் மனத்தில் எப்போதும் நிறைந்திருக்கும்.

கேட்டு எழுதியவர்: **கோமதி ஸ்வாமிநாதன்**


தண்ணீர்ப்பஞ்சம்; சிரிப்பு வெள்ளம்!
எப்போ தமிழ்நாட்டுல 'தண்ணி'யை எடுத்தாங்களோ அப்பவே எனக்குத் தெரியும், இந்த மாதிரி தண்ணீர்ப் பஞ்சம் வரும்னு
கார்ப்பரேஷன் தேர்தல் வந்தால்!
5 குடம் லட்சியம் 3 குடம் நிச்சயம்
ரூபாய்க்கு மூன்று குடம் தண்ணீர் கொடுப்போம் இது உறுதி!
கருத்து: பாலி
படம்: விவேக்
இனிமே அம்மா நம்மைத் தினம் தினம் குளி, குளின்னு தொந்தரவு பண்ண மாட்டாங்க! ஜாலிதான்!
இன்றைய ஸ்பெஷல்
குடிதண்ணீர் கப்
கைகழுவத் தண்ணீர் கப்
கூழானாலும் குளிக்காமல் குடி
கந்தையானாலும் கசக்காமல் கட்டு
(ஒன்று விட்ட ஒரு) சனி நீராடு
தாகமாக இருக்கும் குழந்தைக்கு ஒரு ஸ்ட்ரா கிடைத்தால்!
நமக்கு இனி ஆபத்துதான்!
அவன் சுத்த கஞ்சன். பணத்தைத் தண்ணி மாதிரிதான் செலவு பண்ணுவான்!
மாத்திரையை விழுங்க, டானிக் ஊத்திக் கொடுங்க டாக்டர்!

தனது புக்கக வாழ்க்கையைப் பற்றிப் பாமாவிடம் ஒரு நீண்ட கனவு உண்டு. அவள் காணுகிற கனவின் அந்தரங்க ஆசைகளைப் பல்வேறு நிலைகளில் பல்வேறு சூழ்நிலைகளில் சரிபார்த்துக் கொண்டுமிருக்கிறாள். அவை பொருத்தமாக இல்லாதபோது பலரை அவள் மனத்தளவிலேயே கூட்டிக் கழித்துப் பிறகு அடித்துத் தப்புப் போட்டுப் புத்தகத்தை மூடியும் இருக்கிறாள்.

கதிரேசன் எவ்வளவு அழகானவன், அவனது எடுப்பான நாசியும், பட்டாளத்து மேஜர் போல் நடையும், தனிக் கவர்ச்சி தான். ஆனால் அவன் அதிக முன்கோபி எனக் கேள்வி. அவனது தாயார் அவ்வளவாகப் படிப்பில்லை. தந்தை ஓய்வு பெற்ற தபால் காரர்.

எடுத்த எடுப்பில் இதை அவள் ஒதுக்கி விட்டாள்.

சம்பத் அவள் எதிர்பார்த்ததற்கு மேல் ஆள் குள்ளம். வீட்டில் யாருமே கிடையாது. இரண்டு சகோதரிகள் மட்டுமே! அவர் ஓர் 'இர்ரெகுலர்'... வெளியில் ஏராளமான நண்பர்கள். எல்லா வகையிலும்தானும்.

''இப்படியெல்லாம் பார்த்தால் ஒன்றும் பிரயோசனமில்லை. இக்காலத்தில் நூற்றுக்கு நூறு நல்லவர்களாகவும் நாம் எதிர்பார்க்கிற மாதிரியும் கிடைப்பது துர்லபம். கொஞ்சம் ஏறத்தாழ இருந்தால் சரி சரி என்று சரிக் கட்டிக் கொள்ள வேண்டியதுதான்.''

தாயார் இப்படிச் செல்லும்போது பாமா சிரிப்பாள்.

என் கனவுபற்றி அவர்களுக்குத் தெரியாது. அவர்களுக்கும் எனக்கும் இடைவெளி ஒரு தலைமுறை.

''நீண்ட நேரம் அவனுடன் என்ன பேசினாய்?'' தாயார் இப்படிக் கேட்ட போது பாமாவுக்கு வெட்கமாய்ப் போய்விட்டது.

ஒன்றுமில்லை. கர்நாடக சங்கீதம் பற்றிய விமர்சனம்.

''பரவாயில்லையே! உன்னைப் போல் அவனும் கர்நாடக இசையில் ஆர்வம் உள்ளவன் போலிருக்கிறதே!''

''சே, சேகருக்கா? கர்நாடக இசையிலா? சரியான சினிமாப் பைத்தியம். கர்நாடக சங்கீதம் என்றாலே காதைப் பொத்திக் கொண்டு ஓடுகிறார். ரிகார்ட் ப்ளேயரைப் போட்டுவிட்டால் போதும். சோறு, தண்ணீர், ஆபீஸ் ஒன்றுமே வேண்டாம். அவர் தான் அப்படி யென்றால், அவர் வீட்டிலும் அப்படியே. சினிமாவுக்கென்று அவர்கள் செலவழிக்கும் தொகை இருக்கிறதே 'ஷியர் மேட்னஸ்!'... ஒருவரைப் பார்க்க ஒருவர் மோசம். ஒருவர் ஒரு படத்தை ஒருதரம் பார்ப்பதே கிடையாதாம். இரண்டு மூன்று தரம் பார்த்தால்தான் ஒரு படத்தைப் பார்த்த மாதிரி இருக்குமாம். எப்படிக் கதை?''

தாயார் அசந்து போய் அமர்ந்துவிட்டாள்.

''இதனால் வீட்டில் எவ்வளவு மனஸ்தாபங்கள் தெரியுமா?...வேடிக்கைதான்.''

''அவர்களை நீதான் திருத்தேன்!''

''திருத்தறதா? இதற்கு மருந்து இல்லை!''

''அவரைத்தான் உனக்குப் பிடிக்கும் போலிருக்கிறதே.. வீட்டின் மூத்த பிள்ளை. சாதுவானவர் என்கிறாய். நன்றாய்ப் பழகுகிறார் என்கிறாய். அவரைத் திருத்தினால் குடும்பம் திருந்துகிறது!''

''இவை யெல்லாவற்றுக்கும் மூலகாரணமே அவர்தானே?''

''சேகரின் தாயார் இன்று பேச்சோடு பேச்சாக வேறு ஒரு விஷயம் பற்றிப் பிரஸ்தாபித்தார். நான் ஒன்றும் பதில் கூறவில்லை'' என்றாள் பாமாவின் தாயார்.

பாமா விஷயத்தைப் புரிந்து கொண்டு நகைத்தாள்.

''என்ன சிரிக்கிறாய்?''

''எனது மதிப்பீட்டில் சேகர் மிகக் குறைந்த மார்க்தான் வாங்கியிருக்கிறார். நூற்றுக்கு நூறு என்று இல்லாவிட்டாலும் பாதிக்கு மேல் தாண்ட வேண்டாமா, அம்மா? சினிமா பார்ப்பதால், இதனால் குடும்பத்தில் மனஸ்தாபம் வருகிறது. நான் இதைக் கூற வில்லை. பொதுவாக அந்தக் குடும்பத்தில் நாள், கிழமைகள், பண்டிகை, விரதங்கள் என்று ஒன்றையுமே மதிப்பதில்லை. அன்றாட வாழ்க்கையுடன் ஓடி, அன்றன்று உண்டாகிற களிப்பில் களித்து விவகாரங்களை வளர்த்துப் பிறகு சமாதானமடைந்து — இரவில் ஓய்ந்து விடும் வெறும் இயந்திர மயமான குடும்பம் அம்மா அது. எதையுமே உட்கிரகித்து ஒரு ரஸானுபவத்துடன் வாழ்வை நோக்குகிற



ரசனை உள்ளம் அற்ற ஜடங்கள் போல் இருக்கிறார்கள்.

"'என்ன இன்று கார்த்திகைப் பண்டிகை இல்லையா, எவ்வளவு மங்களகரமான நாள் இது! வீடு ஏன் இப்படி அழுது வடிகிறது? பஞ்சபூதங்களில் அக்கினி பகவானைப் பிரீதி செய்வதுதான் இந்தக் கார்த்திகை விழாவின் தாத்பர்யம்' — என்றேன். அவர்கள் வீட்டில் எல்லோருமே முகம் சுளிக்கிறார்கள்.

"'எங்கள் வீட்டில் இவையெல்லாம் அதிகம் கொண்டாடுவதில்லை. எங்களுக்கெல்லாம் இதில் அவ்வளவு உற்சாகமும் இல்லை' என்று கூறினார்கள். இந்துக்களாகப் பிறந்து நமது இந்து கலாசாரத்தின் மேல் அதிகப் பற்று இல்லாதவர்களாக இருக்கிறார்களே என்று எண்ணிக் கொண்டேன். அதுதான் போகட்டும். திருவாதிரை அன்று நீ கொடுத்த 'களி'யைக் கொண்டு போய்க் கொடுக்கக் காலையில் போனேனே அவர்கள் வீட்டில் யாருமே எழுந்திருக்கவில்லை. — கார்த்திகைப் பண்டிகைக்குக் கேட்ட பதிலே மீண்டும் கேட்க மனமில்லாமல், சேகரின் தாயாரை எழுப்பி, நீ கொடுத்த 'களி'யையும் கூட்டையும் கொடுத்துவிட்டு வந்தேன்.

"அம்மா! மதமும் பண்டிகைகளும் வெறும் கேளிக்கைக்காக உண்டானவையல்ல. அதன் அடிப்படை மனிதனின் ஆன்மீக அறநெறி ஒழுக்கம் சீர்மை அடைய வேண்டும் என்பது தானே? இவைகளை மதிக்காதவர் வாழ்க்கையில் எப்படி நிம்மதி இருக்க முடியும்?"

பாமாவின் தாயார் நிலை கலங்கி நின்றாள்.

"அவர்களுடன் பழகலாம், அவர்களுடன் பேசலாம். அவர்களுடன் நேயமுடன் இருக்கலாம். ஆனால் அவர்களுடன் சம்பந்தம் செய்து கொண்டு இரண்டறக் கலக்க முடியாதம்மா, என்னால் முடியாது!"

பாமாவின் தாயார் உள்ளம் பூரித்துப் போனாள். மேலெழுந்த வாரியான போக்குடையவன் என்று தான் எண்ணி வந்த மகனின் மன ஆழத்தில் இவ்வளவு தீர்க்கமான முடிவுகளா?

முற்றிலும் அறிமுகமில்லாத அவர்கள் வீட்டுக்குள் முதன் முதலாக அவள் நுழைந்தாள்.

எதிர் வீடு. அண்மையில் அவர்கள் அவ்வூருக்கு மாற்றலாகி வந்த குடும்பம். பத்து நாட்கள்தான் இருக்கும், அவர்கள் வந்து. பெரிய குடும்பம்தான். எப்பொழுதும் கலகலப்பாக இருந்தது. எண்ணெய்க் கம்பெனியொன்றில் பெரிய உத்தியோகம் அக் குடும்பத் தலைவருக்கு. சாம்பலிங்கம் அவர் பெயர். வாசலில் பெயர்ப் பலகை வந்த இரண்டாம் நாளிலிருந்தே பொருத்தப்பட்டு விட்டது.

"வாம்மா! எதிர் வீடுதானே?" என்றாள் அந்தக் குடும்பத் தலைவி, அவள் குங்குமச் சிமிழுடன் உள்ளே நுழைவதை மலர்ந்த முகத்துடன் வரவேற்று.

"ஆமாம்" என்றவள், "என் அக்காவுக்கு வளைகாப்பு சீமந்தம். குடும்பத்துடன் அவசியம் வரவேண்டும்" என்று அழைத்தாள்.

இப்படி அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அந்தக் குடும்பத்தினர் அத்தனை பேரும் மூலைக்கு ஒரு புறமிருந்து ஓடிவந்து அவளைச் சூழ்ந்து கொண்டனர்.

"இவளுடைய அக்காவின் வளை காப்பு சீமந்தமாம்.... எதிர் வீடுதான்... தெரியவில்லை?" என்றாள் குடும்பத் தலைவி தன் பெண்களிடம்.

தன் பெண்களையும் சின்ன வயதுப் பெண்களையும் அறிமுகப்படுத்தி வைத்தவள், "கலாதர்.... கலாதர்...!" என்று இன்னும் யாரையோ அழைத்தாள்.

கலாதர் உள்ளிருந்து வெளியே வந்தான்.

"இவன் எங்களுடைய அண்ணா கலாதர், எம். ஏ., லிட்டரேச்சர், உத்தியோகம் பேங்கில்!" என்றாள் ஒருத்தி.

அறிமுகங்கள், பரஸ்பர வந்தனங்கள், எடுப்பான ஆரம்பம், பெருமை தரும் வரவேற்பு.


"என் பெயர் பாமா!" என்றாள்.



ஒரு பகுதி

'மகரிஷி'

சுண்டைக்காய் கால் பணம்...



மத்தியப் பிரதேச முதல்வர் உபயோகத்துக்கு என்று ஒரு டகோடா விமானம் வாங்கப்பட்டது. அதன் விலை 50,000 ரூபாய். இரண்டு ஆண்டுகளில் அதற்கு ஆன செலவு மூன்றரை லட்ச ரூபாய். அது பறந்து செல்ல ஆகும் செலவு மணிக்கு ஆறாயிரம் ரூபாய். ஒரு தடவை டெல்லிக்கு அந்த விமானம் போய் வர ஆகும் செலவு 15 ஆயிரம் ரூபாய். விமான டிக்கட் போக வர 500 ரூபாய்தான். 50 மணி நேரம் அது பறந்தபிறகு பம்பாய் போய்ப் பழுது பார்த்து வர ஆகும் செலவு 7 ஆயிரம் ரூபாய்.

டைம்ஸ் ஆப் இந்தியா - பாலி

''ஓ... தெரியுமே, பாமா, பி.ஏ. இங்கே வந்தவுடன் எங்கள் வேலை இதுதானே! பக்கத்து வீடுகள், எதிர் வீடுகளில் யார் யார், அவர்களுக்கு என்ன வேலை என்று தெரிந்து கொள்வதுதானே?'' என்று சொல்லிச் சிரித்தாள், இளையவள் ஒருத்தி.

''நல்ல குடும்பம் அம்மா. எல்லோரும் எப்படி ஒட்டுதலுடன் பழகுகிறார்கள் தெரியுமா? அவர்கள் பேசுவதையும் அந்நியோந்நியமாக வளைய வருவதையும் பார்த்தால் வாழ்க்கையில் அதிகமான பிரச்னைகள் இல்லாதவர்கள் மாதிரி ரொம்பக் கலகலப்பாக இருக்கிறார்கள். எல்லோருக்கும் எல்லா விதமான ருசியும் அளவுடன் இருக்கிறது. பரபரப்பற்றவர்கள். அதிலும் அவர் — கலாதர் — எவ்வளவு அடக்கமானவர், தெரியுமா? அவருக்கு எவ்வளவு விஷயங்கள் தெரிந்திருக்கின்றன! அடேயப்பா, எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாத அடக்கம். அதுவே அவருக்குத் தனி கம்பீரத்தைத் தருகிறது!''

பாமாவின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த தாயார் குறும்புடன் நகைத்தாள். பாமாவின் குறிப்புக்கள் அவளுக்காக மட்டுமல்ல, தனக்கும்தான் என்பதைப் புரிந்து கொண்டு விட்டாள்.

சம்பந்தம் பேசப் பாமா தடை ஏதும்கூற வில்லை, அதுவே ஒரு நல்ல சூசகம்தானே!

நேரிடையாகப் பேச்சுக்கள் ஆரம்பமாகி விட்டன. குடும்பப் பெரியவர்கள் அடிக்கடி சந்தித்துக் கொண்டார்கள். ஜாதகப் பரிவர்த்தனைகள், இதர லௌகிக விஷயங்கள் —எந்த இடத்திலும் எவ்வித மனக் கிலேசமும் உண்டாகவில்லை.

பாமா அதிருஷ்டக்காரி. அவள் வீசிய மலர் வளையம் ஒரு சரியான ஆடவன் கழுத்தில் போய் விழுந்து விட்டது. தான் ஒரு நல்ல குடும்பத்தில் கலந்து விட்டோம் என்கிற பூரிப்பு அவளிடத்தில் இருந்தது. ஆனால் அந்தப் பூரிப்பு சில நாட்களே நீடித்தது.

அந்தக் குடும்பம், பெரியவர் சாம்பலிங்கம் என்கிற ரிங் மாஸ்டரிடம் உள்ள அளவுக்கு மீறிய பயத்தில் வளைய வருகிறது என்கிற உண்மை அங்கே போன சில நாட்களில் புரிந்து விட்டது. அவருடைய அனுமதியும் அங்கீகாரமும் இல்லாமல் ஒரு சிறு காரியம் கூட நடக்க முடியாது.

இது சாதாரணமாக எல்லாக் குடும்பத்திலும் இருப்பதுதான். அவள் அப்பாவுக்குப் பயப்படாதவளா? தன் தாயார்தான் கணவனுக்கு அடங்காதவளா? குடும்பத் தலைவருக்குப் பயப்படாத குடும்பம் உண்டா? அவை ஒரு யதார்த்தப் போக்கில் இருந்தால் தானே பாந்தமாக இருக்கும்? ஆனால் இங்கே அதற்கு ஓர் அளவே இல்லை. அன்றையச் சமையல் அவர் சொல்ல வேண்டும். உடைகள் உள்ள பீரோவைத் திறக்க அவர் அனுமதி வேண்டும். வெளியே போக அவர் அனுமதி வேண்டும். வீட்டுக்குத் தேவையானதை வாங்க அவர் அனுமதி வேண்டும்.

இவை அவளுக்கு அசாத்திய ஆத்திரத்தைக் கிளப்பி விட்டன. கலாதர் மூத்த பிள்ளை. அவரும் இப்படித்தானே கட்டுப் பெட்டியாக இருக்கிறார்! சாம்பலிங்கம் வெளியே போனால்தான் அவ்வீட்டில் சிரிப்பொலி கேட்கிறது. ஒருவரை யொருவர் வாய் விட்டு அழைத்துக் கொள்கிறார்கள், பேசிக் கொள்கிறார்கள்.

'இதென்ன பட்டி வாழ்க்கை! கேளிக்கை சிரிப்பு, கும்மாளம், மனம் திறந்த பேச்சு எல்லாம் சாம்பலிங்கம் வீட்டில் இல்லாத போது மட்டும்தான்!'

அவளுடைய ஆசைகள் ஆசாபங்கப்பட்ட மாதிரி உள்ளுக்குள் அழுதாள். தனது நிர்மானங்களுக்கு ஏற்பட்ட சொந்தத் தோல்வி, இதில் யாரையும் குறை கூறிப் பயனில்லை.

அளவான பேச்சு, அளவான நகைப்பு! இதென்ன வேடிக்கை!


இது பற்றிப் பாமா தன்னுடைய தாயாரிடம் எதுவும் கூறவில்லை. கூறப் பிடிக்கவுமில்லை.

ஆசைகளுக்கு ஓர் அளவு வேண்டும். பெண்களுடைய வாழ்க்கை என்பது அவர்கள் தனியே இருக்கும்போது ஒரு பகுதி. மற்றொரு பகுதியின் ஆரம்பம் விவாகம். பாதிப் பகுதியை நிர்ணயித்துக் கொள்வது அவள் மட்டுமல்ல. கணவனும் அதில் பங்கு கொள்கிறான்.

தன் அளவுக்கு மீறின எதிர்பார்ப்புகள் அதீதமானவை என்பதை அவள் புரிந்து கொண்டபோது தன்னிடமுள்ள தவற்றையும் உணர்ந்தாள். எதிர்கால நிர்ணயம் பற்றித் தன்னிடமுள்ள மிகையான கணிப்பு தவறு என்பதை உணர்ந்தபோது தான் அடைந்த சிறுமை சிறுமையாகப் படவில்லை பாமாவுக்கு.

கலாதர் லீவு முடிந்து தன்னையும் அழைத்துப் போகப் போகிறான் என்கிற செய்தி அவளுக்கு ஆறுதல் அளித்ததை விட, இதைச் சாம்பலிங்கமே தன்னிடம் வாஞ்சை கலந்த அதிகாரத்துடன் கூறியதில் மகிழ்ந்தாள்.

''அடுத்த வாரம் கலாதருடன் நீ புறப்படுகிறாய். உன் உடைமைகளுடன் நீ தயாராகலாம்!'' என்ற வார்த்தைகளில் தொனித்த தோரணை அவளை அதிகம் கவர்ந்தது!



விரைவில் நிவாரணம் பெற சக்தி வாய்ந்த, நம்பகமான அனாஸின் சாப்பிடுங்கள்

சக்தி வாய்ந்தது : உலகெங்கும் டாக்டர்கள் மிக அதிகமாக சிபாரிசு செய்யும் வலி நிவாரணியை அதிக அளவில் கொண்டது அனாஸின். ஆகையால்தான் அனாஸின் வலியிலிருந்து விரைவிலேயே நிவாரணமளிக்கிறது.

நம்பகமானது : டாக்டரின் நம்பகமான மருந்தைப் போல பல மருந்துகளின் கலவையே அனாஸின். ஆகையால்தான் லட்சக்கணக்கானவர்கள் அனாஸின் சாப்பிடுகிறார்கள்; சிபாரிசும் செய்கிறார்கள்.

ஜலதோஷம் மற்றும் ஃப்ளூவினால் ஏற்படும் வலிகள், தலைவலி, முதுகுவலி, தசைவலி, பல்வலி ஆகியவற்றுக்கு அனாஸின் சக்திவாய்ந்த நிவாரணி.



சக்தி வாய்ந்த, நம்பகமான

அனாஸின்

இந்தியாவின் புகழ் பெற்ற வலி-நிவாரணி

Regd. User of TM: Geoffrey Manners & Co., Ltd. A/2/8-74


• முகப்பருவா? • அம்மைத்தழும்பா?
• கண்ணைச்சுற்றி கருமைப்படர்ச்சியா?
கை, கால் வேர்வை அதிகமா?
உடன் நிவாரணம் பெற சிறந்தது.
ஆதி சித்தர்
சர்மரஞ்ஜினிபொடி
• சிறந்த பலன் பெற
ஆதி சித்தர் ராஜ பிருங்காமல தைலத்துடன்
உபயோகிக்கவும்.
ஆதி சித்தர் வைத்தியசாலை
அப்ரகாம் பண்டிதர் ரோடு, தஞ்சாவூர்.


வாலிப மிடுக்கோட
வாழுங்க ஆனந்தமா!
நீஞ்சற வயசுலே ஓஞ்சு கிடப்பாங்களா? மூச்சுத் திணறினவனுக்கு முகூர்த்தம் போச்சு. உங்களுக்கென்ன? 'தம்' இல்லாமப் போகுமா. விரலே அசைச்சா வீரியம் துள்ளிவரும்: வெள்ளிக் காசுக் கணக்கா இந்தாங்க ஒகாஸா. இந்தக் காலத்து டானிக் மாத்திரை, நாளுங்க நழுவினலும் நாடி தளராத தெம்புக்கு: ஒகாஸா. சலிக்காம பல காலம் சிலம்பம் வீசி வாழலாம், ஜமாயுங்க—மேளதாளத்தோட.
வல்லவராய் வாழ்வதற்கே
ஒகாஸா
ஹார்மோ-பார்மா லிமிடெட், லண்டன்-பெர்லின் தயாரிப்பு.
ஆண்களுக்கு வெள்ளி நிற மாத்திரை— எல்லா முக்கிய மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்
OKASA CO.PVT.LTD., 12K Gunbow Street, P. B. No. 396, Bombay-400001
OKASA
THE 20TH CENTURY TONIC
RESTORATIVE
OKASA CO. PVT. LTD. BOMBAY 1
HORMO-PHARMA LTD.
LONDON-BERLIN


பலத்திற்கும்
ஆரோக்கியத்திற்கும்
பண்டிட் D.கோபாலாசார்லுவின்
ஜீவாம்ருதம்
1898
ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட் சென்னை-17.

உண்மையே, உன் விலை என்ன?



சோ

காட்சி 11

(சர்ச். பாத்திரங்கள்: அருமைநாயகம், ஆரோக்கியசாமி)

அருமைநாயகம்: இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?

ஆரோக்கியசாமி: அந்த வக்கீல் ஒய்ஃப் பங்கஜம் இருக்காங்களே அவங்க லேடீஸ் கிளப்பிலே பேசிக்கிட்டிருந்தாங்களாம். அந்த லேடீஸ் கிளப்பிலே எனக்குத் தெரிஞ்ச ஒரு அம்மா இருக்காங்க. அவங்கதான் என்கிட்டே சொன்னாங்க.

அரு: நான் எதையுமே வெளியே சொல்ல மாட்டேன்னு கீதாவுக்கு வாக்குக் கொடுத்தேன். ஆனா இப்ப எல்லாமே வெளியே பரவ ஆரம்பிச்சுது போலிருக்கு.

ஆரோ: டோன்ட் ஒர்ரி ஃபாதர். உலகம் பூரா ஒரு விஷயம் பரவினாக் கூட அதை அப்படியே வளைச்சு என் கைக்குள்ளே போட்டுக்க முடியும்!

அரு: இவ்வளவு தூரம் நடந்த பிறகு, உங்க மகன்தான் தவறு செய்தான், அதைத்தான் தாமஸ் தடுத்தான்னு இப்ப உங்களுக்கே புரிஞ்சு இருக்கும்.

ஆரோ: இப்ப புரியறது என்ன, முதல்லேயே தெரியும்!

அரு: அப்ப ஏன் அதை மறைச்சீங்க?

ஆரோ: என் கௌரவத்தைக் காப்பாத்திக்கத்தான். ஃபாதர்! இனிமே உங்ககிட்டே பிளைய்னா பேசறதுலே தப்பு இல்லே. உங்களுக்குத்தான் எல்லாம் தெரிஞ்சுடுச்சே. இந்த வழக்கிலே இனிமேலும் நீங்க சம்பந்தப்படறது உங்களுக்கு நல்லதில்லே. பேசாம தாமஸை போலீஸ்கிட்டே ஒப்படைச்சுடுங்க. நான் கொடுத்திருக்கிற கம்ப்ளெயின்ட்படி கேஸ் நடக்கட்டும்.

அரு: அப்படி கேஸ் நடந்தா தாமஸுக்குத் தூக்குத் தண்டனை கிடைச்சுடுமே?

ஆரோ: போகட்டும். கேவலம் ஒரு டாக்ஸி டிரைவர்தானே?

அரு: நாம எல்லாருமே டாக்ஸி டிரைவர்கள்தாம்! வாழ்க்கையே ஒரு டாக்ஸிதான். அதை ஆண்டவன் நம்மகிட்டே கொடுத்து ஓட்டச் சொல்லியிருக்கான். மீட்டரைப் பார்த்துப் பணம் கொடுக்கிற மாதிரி நம்ம உழைப்புக்குத் தகுந்த பலன் கிடைக்குது.

ஆரோ: எனக்குத் தத்துவம் எல்லாம் பிடிக்காது. நீங்க சொல்றபடி இருந்தா என்னை மாதிரி சில பேர் மட்டும் பணக்காரர்களா இருக்காங்களே, ஏன்?

அரு: மீட்டர் சார்ஜுக்கு மேலே கேட்டு வாங்கறதுனாலே இருக்கலாம். அது ஒரு பெருமையா? ஆண்டவன் நினைச்சா வண்டி என்னைக்கு வேண்டுமானாலும் ஆக்ஸிடென்ட் ஆயிடும்.

ஆரோ: நான் உங்க நல்லதுக்குத்தான் சொல்றேன். தாமஸைப் போலீஸிலே ஒப்படைக்காட்டி நீங்களே மானம், மரியாதை எல்லாம் இழந்து நிப்பீங்க.

அரு: என்னை மிரட்ட முடியாது. எனக்குக் கடவுளிடம் அச்சமுண்டு. ஆண்டவனுக்குப் பயப்படுவதாலே எனக்கு உலகில் வேறு எதனிடமும் பயம் கிடையாது!

ஆரோ: இவை உங்க பொன்மொழியா?

அரு: மகாத்மா காந்தி சொன்ன வார்த்தைகள்.

ஆரோ: அது கூடச் சொந்தமில்லையா? இரவல்தானா?

அரு: நல்ல விஷயங்களைத் தெரிஞ்சுக்கறது திருட்டுன்னா நான் கிறிஸ்டியனா இருக்கிறது கூடத் திருட்டுத்தான்.

ஆரோ: ஃபாதர்! நேரிடையாகவே கேக்கறேன். அந்த டேப், லெட்டர் எல்லாத்தையும் வாங்கி என்கிட்டே கொடுத்துடுங்க. நீங்க என்ன கேட்டாலும் நான் செய்யறேன்.

அரு: என்கிட்டே வியாபாரம் பண்றீங்க. நான் பிஸினெஸ்மேன் இல்லே, ஏழைப் பாதிரி. நீங்களும் உண்மைக்காக ஒத்துழைக்கணும்னு எதிர்பார்க்கிறேன்.

ஆரோ: என்கிட்டே உண்மையைப் பத்திப் பேசாதீங்க. நான் ஒரு பாதிரி இல்லே. நான் ஒரு பிஸினஸ்மேன். ஃபாதர்! நீங்க இந்த வழக்கிலே சம்பந்தப்பட்டும் — ஒரு கிரிமினல் வழக்கிலே சம்பந்தப்பட்டும் — இன்னும் பிஷப் உங்க மேலே ஒரு நடவடிக்கையும் எடுக்கலையே, ஏன்?

அரு: நான் உண்மைக்காகத்தான் பாடுபடறேன்னு புரிஞ்சுக்கிட்டிருக்கார். என்னாலே சர்ச்சுக்கும், கிறிஸ்தவ மதத்துக்கும் அவமானம் வந்துடாதுன்னு அவர் நம்பறார்.

ஆரோ: உங்களாலே அவமானம் வரும்னு அவர் நினைக்கிற காலம் வந்துட்டா? அதைக் கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க. நான் எதை வேணும்னாலும் விலைக்கு வாங்குவேன். அந்த அளவு என்கிட்டே பணம் இருக்கு.

அரு: ஆரோக்கியசாமி! இந்தமாதிரி பேசாதீங்க! ஹிஸ் லார்ட்ஷிப் பிஷப் அவர்களை உங்களால் விலைக்கு வாங்க முடியாது!

ஆரோ: அது எனக்குத் தெரியும். ஆனால் அவர் மனிதர்களையும் அவர்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களையும் எடை போடுவாரே, அந்தத் தராசை விலைக்கு வாங்கிவிட முடியும் என்னாலே!

அரு: அன்பரே! ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்? வேண்டாம். உண்மையான கிறிஸ்துவனாக நடந்துக்குங்க. டாக்ஸி டிரைவர் தாமஸ்... அவன் உங்களுக்கு ஒரு தீமையும் நினைக்கலையே. அவனுக்கு உதவுங்க.

ஆரோ: என் ஒரே மகனைக் கொலை செய்த அவன் தூக்குமரத்துக்குப் போனாத்தான் என் மனசு ஆறும்.

அரு: பழிக்குப் பழி வாங்கறது ஏசுக்குப் பிடிக்காது ஆரோக்கியசாமி.

ஆரோ: எனக்குப் பிடிக்கும். நான் ஏசு இல்லே.

அரு: அவரை நம்பற மதத்தைச் சேர்ந்த வர்தானே நீங்க!

ஆரோ: அப்படிப் பொறந்துட்டேன். ஆனால் அதுபற்றி எனக்கு அக்கறை இல்லே, ஃபாதர்! என் குடும்ப கௌரவம், என் அந்தஸ்து எல்லாம் இப்ப மாதிரி உயர்ந்தே இருக்கணும். அந்த டாக்ஸி டிரைவர் தூக்கு மேடைக்குப் போகணும். அதுக்காக நான் எது வேணும்னாலும் செய்யத் தயாரா யிருக்கேன். என் முயற்சிக்குக் குறுக்கே நிக்கறவங் களையெல்லாம் நான் விலைக்கு வாங்குவேன். என் கிட்டே அதுக்கு வேண்டிய பணம் இருக்கு!

அரு: பணத்தைக் கொடுத்து எல்லாத் தையுமே வாங்க முடியும்னு நினைக்கறீங்க. ஆரோக்கியசாமி, பணத்தாலே வாங்க முடியாத விஷயங்களும் இருக்குது.

ஆரோ: இருக்கலாம். ஆனா அந்த மாதிரி பணத்தாலே வாங்க முடியாத விஷயங்களை வேறே ஏதாவது கொடுத்து வாங்குவேன்! எல்லாத்துக்கும் ஒரு விலே உண்டு. அந்த விலே எதுவாயிருந்தாலும் அதைக் கொடுக்க என்னாலே முடியும். இந்த உலகத்திலே வியா பாரத்துக்கு வராத பொருளே இல்லே. வியா பாரத்துலே நான் ஒரு நிபுணன்!

அரு: எனக்கு வியாபாரத்தைப் பத்தி ஒண் ணுமே தெரியாதுதான். ஆனா ஒண்ணு தெரியும், ஆரோக்கியசாமி! எப்பவாவது நஷ்டம் வராத வியாபாரமே கிடையாது!

ஆரோ: நான் இதுவரைக்கும் நஷ்டத்தைப் பார்த்தது இல்லே.

அரு: இனிமேலும் நீங்க பார்க்கக் கூடா துன்னுதான் நான் நினைக்கிறேன். அதுக்காகத் தான் இவ்வளவு தூரம் பேசறேன்.

ஆரோ: கவலைப்படாதீங்க. என் வியா பாரத்தை நான் ஆரம்பிச்சுட்டேன்னு எனக்கு நஷ்டமே ஏற்படாது. அதை நீங்களே உணரத்தான் போறீங்க. நான் எல்லாத்துக் கும் விலே பேசப் போறேன். அப்போ ஸ்டாக் என்கிட்டத்தான் இருக்கும். உங்களுக்குத் தேவைப்பட்டால் என்னே வந்து பாருங்க.

அரு: காட் ப்ளெஸ் யூ மை ஸன்!

ஆரோ: எனக்கு அவர் ஆசிகள் தேவை யில்லே. கடவுள் ஒரு வியாபாரியில்லே. நான் வியாபாரத்தில் இறங்கறேன். அவர் இதில் குறுக்கிட்டால் தோல்வி அடைவார்!

அரு: கடவுள் தோல்வி கண்டால் அது உனக்கும் எனக்கும் கூடத் தோல்விதான், அப்பனே!

ஆரோ: ஆ! அப்போ நீங்க கடவுளாலும் தோற்கமுடியும் என்று ஒப்புக் கொள்ளுறீங்க!

அரு: ஆமாம். அவரால் தோல்வியைச் சந்திக்க முடியும். அதை வென்று வெற்றி யாக மாற்றவும் அவரால் முடியும்! ஆனால் தோல்வியைத் தாங்க உன்னால் முடியாது. அதனால்தான் எச்சரிக்கிறேன். தயவுசெய்து இந்த முயற்சியில் இறங்காதே! வேண்டாம், ப்ளீஸ்!

காட்சி 12

(மாளிகாமணி வீடு. பாத்திரங்கள்: பாதிரியார் அருமைநாயகம், தாமஸ் தியாகராஜன்.

அரு: தாமஸ்! இதோ குப்புசாமி எங்கிட்ட சில விஷயங்கள் சொன்னாங்க. அதை நான் உங்கிட்டேகூடச் சொல்லக் கூடாதுன்னு



"அன்பரே! ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்? வேண்டாம். உண்மையான கிறிஸ்துவராக நடந்துக்குங்க....."

சொல்லிட்டாங்க. ஆனா அவங்க பேசினது எல்லாம் வக்கீல் பையன் டேப் ரிக்கார்ட் பண்ணிட்டான். இதெல்லாம் ஆரோக்கிய சாமிக்கும் தெரிஞ்சுடுச்சு. அவர் ரொம்பக் கோபமா இருக்கார். ஆனா எனக்கு என்னவோ நம்பிக்கை இருக்கு. தாமஸ்! ஏன் ஒண்ணும் பேசாம இருக்கே?

தாம: எதுவுமே நடக்காதது மாதிரி நீங்க பேசிக்கிட்டுப் போறீங்க. என்னே என்ன பேசச் சொல்றீங்க? உங்களைமாதிரி எல்லாத்தையும் தாங்கிக்கிட்டு இருக்க எனக்குத் தெரியாதே.

அரு: நீ என்ன சொல்லறே? எதுவுமே நடக்காத மாதிரி பேசறேனா? நடந்ததையெல்லாம்தான் சொல்லிக்கிட்டு இருக்கேனே.

தாம: இவ்வளவுதான் நடந்ததா? இதைவிட முக்கியமா வேறே எதுவுமே நடக்கலில்லையா? அநியாயமான ஒரு பழியை உங்களாலே எப்படித் தாங்கிக்க முடியுது ஃபாதர்?



"வியாபாரத்தை ஆரம்பிக்கப் போறேன்னு சொன்னார். ஆரம்பிச்சுட்டார் போலிருக்கு. எல்லாத்தையும் விலைக்கு வாங்க முடியும்னு சொன்னார். சில விஷயங்களை வாங்கிட்டார்...."

அரு: தாமஸ்! சொல்ல நினைக்கிறதை வெளிப்படையாகச் சொல்லு. அப்பதான் எனக்குப் புரியும்.

தாம: காலையிலே நீங்க எந்தப் பத்திரிகையும் படிக்கலையா?

அரு: இல்லையே, ஏன்?

தாம: அதனாலேதான் நீங்க இப்படிப் பேசறீங்க.

அரு: பத்திரிகையிலே அப்படி என்ன செய்தி வந்திருக்கு, தாமஸ்?

தாம: எல்லாப் பத்திரிகையிலேயும் இல்லே. சில பத்திரிகைகளிலே தான்.

அரு: என்ன வந்திருக்கு?

தாம: அதை என் வாயாலே சொல்ல முடியாது, ஃபாதர். அந்த அக்கிரமத்தையெல்லாம் நீங்களே படிச்சுப் பாருங்க.

அரு (வாங்கிப் படிக்கிறார்): பாதிரி அருமைநாயகம் ஒரு பெண்ணுடன் ரகசியத் தொடர்பா? கிதா குப்புசாமி என்ற ஒரு பெண்ணுடன் பாதிரி அருமைநாயகத்துக்கு...

(தாமஸ் வேறொரு பத்திரிகையைக் கொடுக்கிறான்.)

அரு (படிக்கிறார்): பாதிரி அருமைநாயகத்துக்குக் கொலைகார தாமஸின் சேவை என்ன? பெண்ணுடன் தொடர்பு கொள்ளப் பாதிரியாருக்குத் தாமஸ் என்ற டாக்ஸி டிரைவர் உதவி செய்து வந்ததாகத் தெரிகிறது. அதனால் தான் அந்தப் பாதிரியார் அவனுக்கு அடைக்கலம் கொடுத்திருக்கிறாராம்.

(தாமஸ் இன்னொரு பத்திரிகையை எடுத்துக் கொடுக்கிறான்.)

அரு (படிக்கிறார்): மாதா கோவில் பணம் திருட்டு. குற்றவாளி பாதிரி அருமைநாயகமா? மாதாகோவில் பண விஷயங்களில் சில மோசடிகள் இருப்பதாகவும் இதற்குப் பாதிரியார் அருமைநாயகமே காரணம் என்பதாகவும் பரவலாகப் பேசப்படுகிறது... உம் ஹனி.

தாம: இதெல்லாம் என்ன அநியாயம் ஃபாதர்? எனக்கு நீங்க உதவி செய்யறதனால் தானே உங்களுக்குக் கெட்ட பேர்? அந்த ஆரோக்கியசாமிதான் இந்த மாதிரி பொய்ச் செய்தியெல்லாம் போட வெச்சிருக்கான்னு நான் நினைக்கிறேன்.

அரு: இருக்கலாம். நான் வியாபாரத்தை ஆரம்பிக்கப் போறேன்னு சொன்னார். ஆரம்பிச்சுட்டார் போலிருக்கு. எல்லாத்தையும்

விலேக்கு வாங்கமுடியும்னு சொன்னர். சிலவிஷயங்களே வாங்கிட்டார். இட்ஸ் ஆல் ரைட்...

தாம: இந்த மாதிரி அவதூறை ஏத்துக்கிட்டு நிக்க உங்களுக்குக் கஷ்டமா இல்லேயா ஃபாதர்?

அரு: என்னேப் பத்தியே நினேக்கிறியே! அந்த அம்மா நிலேமை என்னன்னு கொஞ்சம் நினேச்சுப் பாரு! அந்தக் குடும்பத்துலே என்ன குழப்பம் நடக்குதோ? மை லார்ட் ஜீஸஸ்! தயவு செய்து அந்தப் பெண்மணியை அவதூறிலிருந்தும் அவமானத்திலிருந்தும் காப்பாற்று.

தாம: ஃபாதர் நீங்க இப்ப என்ன செய்யப் போறீங்க?

அரு: என்னே வரச் சொல்லி பிஷப் சொல்லி அனுப்பி யிருந்தார். ஏன்னு இப்பத்தான் எனக்குப் புரியுது! அவர் இன்னிக்குக் காலே யிலே பேப்பர் படிச்சிருக்கார். நான் படிக்கலே. நான் முதல்லே போய் ஹிஸ் லார்ட் ஷிப் தி பிஷப்பைப் பார்க்கணும்.

தாம: ஃபாதர், நான் போலீஸுக்குப் போறேன். உங்களுக்குக் கெட்ட பேர் வாங்கிக் கொடுத்து விட்டு நான் வெளியிலே இருக்க விரும்பலே.

அரு: நோ. நீ போலீஸுக்குப் போகக் கூடாது. நாம உண்மைகளேச் சொல்ற சாட்சிகளேச் சேகரிச்சுக்கிட்டுப் போலீஸுக்குப் போவோம்.

தாம: இல்லே ஃபாதர், பணக்காரர் வேலே செய்ய ஆரம்பிச்சுட்டார். அதை நம்மாலே யெல்லாம் தாங்க முடியாது. உங்களுக்கு இன்னும் என்னவெல்லாம் அவமானம் என்னல் வருமோ?

அரு: அதுக்குப் பயந்து உண்மையைத் தேடி அலேயற என் பிரயாணத்தை நிறுத்திட்டா நான் கடவுளுக்குத் துரோகம் செய்த மாதிரி ஆயிடும். உண்மையைத் தேடிப் போய்க்கிட்டிருக்கேன். போகிற பாதை இருட்டா இருக்கேன்னு நான் பயந்துட்டா உண்மையை என்னுலே அடையவே முடியாது.

தாம: அதுக்காக அதுவரையிலும் இருட்டிலேதான் நடக்கப் போறீங்களா ?

அரு: ஆண்டவன் ஒளியைக் கொடுப்பான். ஹி வில் கிவ் அஸ் லேட்..

(திடீரென்று விளக்குகள் அணைகின்றன.)

தாம: இப்ப என்ன சொல்றீங்க ஃபாதர்? அபசகுனம் மாதிரி கரண்ட் கட் ஆயிடுச்சு. விளக்கெல்லாம் அணைஞ்சு போச்சு. இதுக்கு என்ன அர்த்தம்?

அரு: 'நீ இங்கேயே பயந்துக்கிட்டு இருந்தா இருட்டிலே இருக்க வேண்டியது தான்; வெளிச்சத்தைத் தேடிப் போ'ன்னு கடவுள் சொல்றர்! ஹிஸ் லார்ட்ஷிப் தி பிஷப்பைச் சந்திக்க நான் போறேன்!

(தொடரும்)

வட்டமேஜை

வழங்குக சுரந்து வானம்!

வானம் பொய்த்து மழையின்றி மக்கள் துன்பப்படும் இந்த நேரத்தில் ஆண்டவனிடத்திலே நம்பிக்கையுள்ள நல்ல உள்ளம் படைத்தவர்கள் நிலேமை சீர்ப்பட-தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்யப் பரஞ்சோதி முனிவர் பாடியருளியுள்ள

மல்குக வேத வேள்வி; வழங்குக
சுரந்து வானம்;
பல்குக வளங்களெங்கும்; பரவுக
அறங்கள்; இன்பம்
நல்குக உயிர்கட்கெல்லாம்; நான்மறைச்
சைவம் ஓங்கிப்
புல்குக உலகமெல்லாம்; புரவலன்
செங்கோல் வாழ்க!

எனும் திருவிளேயாடல் புராண வாழ்த்தினே — காலேயிலும் மாலேயிலும் ஒருமை மனத்தோடு நெஞ்சுருகிக் கண் பனித்து ஓதுவார்களே யானல் நிச்சயம் நல்ல பலன் கிடைக்கும்; பஞ்சம் பட்டினி ஒழியும்.

சென்னே-18
14-2-75 — சௌந்தரா கைலாசம்

கல்கி 9–2–75 இதழில் 'மோகம் முப்பது நாளா?' என்ற பகுதியில் டி. எமர்சன் ஜே. சிங் என்பவர் எழுதியுள்ள கடிதம் பார்த்துத் திடுக்கிட்டேன். அந்தக் கடிதத்துடன் எனது புதல்வி இசைக்குயிலின் புகைப்படமும் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

இருபத்துநாலு வயதான என் குமாரிக்குச் சென்ற ஆண்டுதான் திருமணம் ஆயிற்று. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் அல்ல. மேலும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது போல் அவள் எமர்சன் ஜே. சிங் என்பவரைத் திருமணம் செய்து கொள்ளவில்லே.

மேற்படி கட்டுரை எழுதியவர் கதை அளந்திருக்கிறர், அவ்வளவும் அவர் கற்பனே, முழுப்பொய்.

சென்னே—73
13—2—75 — எம். எஸ். ராமசுவாமி

மாதர் சிறப்பிதழ் சிறப்பாகத் தயாரிக்கப் பட்டிருக்கிறது.


அட்டைப்படத்தைப் பற்றி ஒரு விஷயம். இதே பெண் இதே போஸில் இதே உடையில் குமுதம் அட்டையில் சில மாதங்களுக்கு முன்பு வந்து விட்டாரே! அதுவும் உத்ரா எடுத்த படம் என்றுதான் நினேவு. அவர் மறுபடியும் ஏன் கல்கிக்கு அனுப்பினர்?

புதுதில்லி
7—2—75 — பி. எஸ். ஆர்.

திலேயங்கத்தில் பாரதிய லோக் தளத்துடன் இணேந்துள்ள சுதந்திரக் கட்சி என எழுதியிருந்தீர்கள். சுதந்திரக் கட்சி தனித் தன்மை வாய்ந்தது. தெருவுக்கு ஒருவர் இருந்தால்கூடப் போதும். அது தனித்தே இருக்கும். நம்மிடையே இருந்து சிலர் விலகிச் சென்றர்களே தவிர சுதந்திரக் கட்சி அப்படியேதான் இருக்கின்றது.

திருச்சி — என். ஆர்.வி.ராமன்
15—2—75 — காரியதரிசி,
திருச்சி மாவட்ட சுதந்திரக்கட்சி.

இயற்கை உங்களுக்கு அளித்துள்ளது எழில்மிகு கேசம்...
அதனை அவ்வண்ணமே வைத்திருப்பீர்
ஹேலோ கேச பராமரிப்பு மூலம்



HSR.G.I.TM

ஹேலோ ஷாம்பூக்கள் மட்டுமே சீரான, சிறந்த உத்தியின்படி தயாரிக்கப்படுகின்றன–உங்கள் கேசத்தின் பராமரிப்பிற்கெனவே

ஹேலோ காஸ்மெடிக் ஷாம்பூ:
இந்த விசேஷ ஷாம்பூவை உபயோகித்து, உங்கள் கேசம் எவ்வளவு மெத்தென்றும், மிருதுவாகவும் இருக்கக் கூடும் என்பதைக் கண்டு கொள்ளுங்கள்.

ஹேலோ எக் ஷாம்பூ:
விசேஷ போஷாக்கு மிக்க இந்த ஷாம்பூவில் உள்ள வனப்பிக்க முட்டைப் புரதத்தின் பயனாக உங்கள் கேசம் கட்டுக்–கோப்புடன், கவர்ச்சியாகத் திகழ்கிறது.



ஹேலோ லெமன்–ஃப்ரெஷ் ஷாம்பூ:
உங்கள் கேசத்திற்கு இயற்கையான தூய்மையான பளபளப்பைத் தருகிறது.

ஹேலோ கான்சென்ட்ரேட் ஷாம்பூ:
சாரமான நுரையினத்தின் மூலம் உங்கள் கேசத்தை மென்மையாகவும், கட்டுக்கடங்கியும் வைத்திருக்க சிறிதளவே போதும்.

இயற்கை ஆரோக்கியத்துடன் கூடிய கேசத்திற்கு–இன்றே உபயோகிக்கத் தொடங்குவீர் ஹேலோ

ஒரு தமிழ் மகனின் வீரமரணம்

ஆங்கிலேயர்களுக்குத்தான் '13' என்ற எண் துரதிர்ஷ்டமுள்ளதாக இருக்கும் என்பதில்லை; நம்மில் சிலருக்கும் அந்த எண் தீங்கு விளைக்கும் போலும்! இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் பர்மா எல்லையோரம் உள்ள மிஸோராம் மாநிலத்தில் அய்ஜால் என்ற நகரில் 13—1—1975 அன்று போலீஸ் இன்ஸ்பெக்டர் - ஜெனரல், துணை இன்ஸ்பெக்டர்-ஜெனரல், ஜில்லா சூபரிண்டெண்ட் ஆகிய மூவர் இயந்திரத் துப்பாக்கியால் பரிதாபகரமாகச் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி பெரும் அதிர்ச்சி ஏற்படுத்தியது. இப்படுகொலையில் உயிரிழந்த போலீஸ் சூபரிண்டெண்ட் கே. பஞ்சாபகேசன் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். இவர் பிறந்த தேதியும் பதின்மூன்றுதான்.

தஞ்சை மாவட்டத்திலுள்ள திட்டைச்சேரி இவரது பூர்வீக கிராமம். வைதிக குடும்பத்தைச் சேர்ந்த ஒரு கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளின் மூத்த குமாரர் பஞ்சாபகேசன். வயது முதிர்ந்த பெற்றோர்கள் இத்துயரச் செய்தியைத் தாங்கிக்கொண்டு காமாக்ஷிபுரம் (தஞ்சை மாவட்டம்) கிராமத்தில் வசித்து வருகின்றனர்.

உயிர் துறந்த பஞ்சாபகேசனின் மனைவி திருமதி புவனேசுவரியை அசுரத்திலுள்ள அவரது பெற்றோரின் இல்லத்தில் சந்திக்கிறேன். பஞ்சாபகேசனின் மாமனார் நடராஜய்யர், பஞ்சாபகேசனின் இரு புதல்விகளையும் எனக்கு அறிமுகம் செய்விக்கிறார். உமா—10 வயது, சீதா—8 வயது. இருவரும் விளையாட்டில் தங்களுக்கு நேர்ந்த பெரு நஷ்டத்தை மறக்க முயல்கின்றனர் போலும்.

''உங்கள் கணவர் எங்கே படித்தார், எப்போது வேலையில் அமர்ந்தார் என்ற விவரங்களைச் சொல்ல முடியுமா?'' என்று கேட்டதும் திருமதி புவனேசுவரி கூறுகிறார்:

''கும்பகோணம்'' நேடிவ் ஹைஸ்கூலில் எஸ். எஸ். எல். சி. தேர்வு பெற்றார். 480 மார்க்குகள் பெற்று, பள்ளியிலேயே முதல் மாணவராகப் பாஸ் செய்தார். பின்னர் தட்டெழுத்தும், சுருக்கெழுத்தும் பயின்று சிறிது காலம் சென்னையில் ரயில்வேயில் குமாஸ்தாவாக வேலை பார்த்தார். அப்புறம் டெல்லியில் சட்ட அமைச்சகத்தில் 'ஸ்டெனோ'வாக வேலையில் அமர்ந்தார். அப்போது அவருக்குப் பத்தொன்பது வயதிருக்கும். டெல்லியில் இருக்கபோது பிரைவேட்டாகப் படித்து, இண்டர்மீடியட், பி.ஏ. இரண்டிலும் முதல் வகுப்பில் பாஸ் செய்தார். பின்னர் எம். ஏ. பரிட்சையிலும் தேர்வு பெற்று ஐ. ஏ. எஸ். பரீட்சை எழுதினார். ஆனால் 'விவா வோஸி' (நேர்முகத் தேர்வு)யில் அவர் தேர்ந்தெடுக்கப்படவில்லை. எனினும் அவரைப் போலீஸ் துறைக்குத் தேர்ந்தெடுத்துப் பயிற்சி அளித்தார்கள். பயிற்சிக் காலம் முடிந்ததும் 1967 ஜனவரி மாதம் அந்தமானில் உள்ள போர்ட் பிளேருக்கு டெபுடி சூபரிண்டெண்டாக நியமித்தது அரசாங்கம். செப்டம்பர் 1970 வரை அங்கு இருந்துவிட்டு புதுடில்லி திரும்பி வந்தோம்.''

''மிஸோராம் மாநிலத்துக்கு எப்போது சென்றார்?''

''31—12—74 முதல் அவருக்கு சூபரிண்டெண்டாகப் பதவி உயர்வு அளித்து மிஸோராமுக்கு மாற்றினார்கள். அவரும் நானும் குழந்தைகளுடன் விமானத்தில் கல்கத்தா சென்று அங்கிருந்து சில்ச்சார் போய், சில்ச்சாரிலிருந்து அய்ஜாலுக்கு ஜீப்பில் போய்ச் சேர்ந்தோம். ஜனவரி 10ந் தேதி அய்ஜாலில் வேலை ஒப்புக்கொண்டார். அய்ஜாலில் அதற்குமுன்பு சூபரிண்டெண்டாக இருந்த திரு மிஸ்ரா



புவனேசுவரி - பஞ்சாபகேசன்

வீட்டைக் காலி செய்யவில்லை. எனவே, 'சர்க்யூட் ஹவுஸி'ல் தங்கியிருந்தோம்.

''திங்கட் கிழமை காலை என் கணவர் அலுவலகத்துக்குப் போய்விட்டுப் பிற்பகல் 'லஞ்ச'க்காக வீட்டுக்குத் திரும்பியதும் 'புவனா! இன்று இந்த ஊரில் ஒரு தமிழரைச் சந்தித்தேன். திரு அர்த்தநாரி என்று பெயர். பொதுப்பணித் துறையில் எக்ஸிகியூடிவ் எஞ்சினியராகப் பணியாற்றுகிறார். மாலையில் உன்னையும் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு தம்முடைய வீட்டுக்கு வரும்படி அழைத்திருக்கிறார். மாலை ஆபீஸிலிருந்து திரும்பியதும் அழைத்துக் கொண்டு போகிறேன். குழந்தைகளுக்கு டிரஸ் பண்ணித் தயாராக இரு!' என்று சொல்லிவிட்டுப் போனவர்தான்....'' திருமதி புவனேசுவரி வேதனை நிறைந்த பெருமூச்சு விடுகிறார். அவராகவே மேற்கொண்டு தொடரட்டும் என்று காத்திருக்கிறேன்.

திருமதி புவனேசுவரி தொடர்ந்து கூறுகிறார்: ''மாலை 4–30 இருக்கும். சைரன் ஒலித்தது. 'ஏன் சைரன் ஊதுகிறது?' என்று ஆர்டர்லியை வினவினேன். 'ஒன்றுமில்லை மேம் ஸாப்!' என்றார் ஆர்டர்லி. அவருக்கு ஒன்றுமே தெரியாதோ, அல்லது தெரிந்திருந்தும் எப்படிச் சொல்வது என்ற பயமோ?

''சற்றைக்கெல்லாம் உதவி ஜில்லா மாஜிஸ்டிரேட் நான் தங்கியிருந்த சர்க்யூட் ஹவுஸுக்கு வந்து என் கணவரையும், ஐ. ஜி., டி.ஐ.ஜி மூவரையும் யாரோ சுட்டுவிட்டதாகச் சொல்லி, 'நீங்கள் வந்து பார்க்கிறீர்களா?' என்று கேட்டார். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. குழந்தைகளையும், என்னையும் மாலையில் வந்து எஞ்சினியர் அர்த்தநாரியின் வீட்டுக்கு அழைத்துப் போவதாகச் சொல்லிவிட்டுப் போயிருந்தாரே!

''உதவி ஜில்லா மாஜிஸ்டிரேட்டிடம், 'சார்! நான் இந்த ஊருக்குப் புதிது. என் கணவர் 10ந் தேதிதான் இங்கு வேலை ஒப்புக்கொண்டிருக்கிறார். ஒருகால் நீங்கள் வேறு யாரை யாவது எண்ணிக் கொண்டு... நீங்கள் சரியான இடத்துக்குத்தான் வந்திருக்கிறீர்களா சார்?' என்று கவலையுடன் கேட்டேன். அவர் தாம் கூறியது அனைத்தும் உண்மை என்றும் சுடப்பட்டவர்களுள் ஒருவர் என் கணவரே என்றும் சந்தேகத்துக்கு இடமின்றிக் கூறினார். நான் அழுததைப் பார்த்துக் குழந்தைகளும் கதறினார்கள். சின்னப் பெண் கீதாவால் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவள் அந்த அதிர்ச்சியைத் தாங்க மாட்டாள் என்று எண்ணி அவளை அங்கேயே விட்டு விட்டுப் பெரிய பெண் உமாவை மட்டும் அழைத்துக் கொண்டு, மாஜிஸ்டிரேட்டுடன் கிளம்பினேன். ஆர்டர்லியும் என்னுடன் வந்தார்.

''நாங்கள் ஐ.ஜி. ஆபீசுக்குப் போனபோது டெபுடி ஐ.ஜி.யின் உடலை ஆம்புலன்ஸில் ஏற்றியிருந்தார்கள். என் கணவரின் உடலை ஆம்புலன்ஸில் ஏற்றவிருந்தார்கள். முகத்தை மூடி வைக்கவில்லை. ஐ.ஜி., டி.ஐ.ஜி. இருவரையும் முதலில் சுட்டார்களோ என்னவோ, அந்த அதிர்ச்சியில் திறந்த வாயுடன் பிரமித்துப் போயிருந்தார் போலும்! கண் இமைகளும் திறந்தே இருந்தன. யாரையும்



மார்புக்குக் கீழே சுடவில்லை. என் கணவரின் தலை, முகத்தில் மட்டும் சுமார் பத்து-கோலிகள் இருந்தனவாம். ஐ. ஜி. யின் அலுவலகத்தின் வாசலில் ஒரு தாழ்வாரம் மாதிரி; அதைக் கடந்தவுடன் ஐ.ஜி.யின் அறைதான். மூவரும் அங்கு அமர்ந்து பேசிக்கொண்டிருந்தபோதுதான் இந்த அக்கிரமம் நடந்திருக்கிறது.''

''வாசலில் காவலுக்கு யாரும் இல்லையா?''

''இருந்திருக்கலாம். சிப்பந்திகளும் உள்ளூர்வாசிகள்தாமே? ஜீப்பில் இரண்டுபேரோ மூன்று பேரோ வந்தார்களாம். அந்த நேரத்தில் மாலை 4 அல்லது 4–15 இருக்கலாம். ஐ. ஜி. ஆபீஸ் வாசலில் ஆர்டர்லி யாராவது இருந்தார்களா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. பெஹின் துப்பாக்கியால் படபட வென்று சுட்டுத் தள்ளியிருக்கிறார்கள். போலீஸ் ஜீப்பில்தான் வந்தார்களாம். போலியான ஒரு நம்பரும் ஜீப்புக்குக் கொடுத்திருக்கிறார்கள் போலிருக்கிறது. கொலைகாரர்கள் யாரும் என் கணவரின் உயிரைப் பறிப்பதற்கென வந்திருக்க முடியாது. இன்ஸ்பெக்டர் ஜெனரல்தான் அவர்களின் இலக்காக இருந்திருக்கும். அந்த நேரத்தில் டி.ஐ.ஜி.யும் இவரும் அங்கு இருக்கவே மூவரையுமே பலி வாங்கி விட்டார்கள். அதற்கு முன்பே ஐ. ஜி.க்கு ஏதோ மிரட்டல் கடிதம் வந்திருந்ததாகவும் தெரிகிறது.

''திரு அர்த்தநாரி என்னைத் தேடிக் கொண்டு வந்தார். அந்த நிலையில் நான் குழந்தைகளுடன் சர்க்யூட் ஹவுஸில் இருப்பது உசிதமில்லை என்று அவர் கூறியது நியாயமாகத் தோன்றவே, குழந்தைகளுடன் அவர் வீட்டுக்குச் சென்று இரவைக் கழித்தேன். என் கணவருடனும் குழந்தைகளுடனும் அந்த வீட்டுக்கு விருந்தாளியாக அன்று மாலை போயிருக்க வேண்டியவள், நான்!

''மேற்கொண்டு ஆகவேண்டிய காரியத்தைப் பற்றிக் கேட்டார்கள். அந்த ஊரிலேயே வேண்டுமானாலும் போலீஸ் மரியாதையுடன் இறுதிச் சடங்குகளை நடத்திவிடலாமா என்று கேட்டார்கள். 'என் கணவரின்

வயது முதிர்ந்த பெற்றோர்கள் கிராமத்தில் இருக்கிறார்கள். அங்குதான் எடுத்துக்கொண்டு போகவேண்டும்' என்று கூறிவிட்டேன். 14ம் தேதி காலை அப்ஜாலில் மூன்று போலீஸ் அதிகாரிகளின் உடல்களையும் மக்கள் பார்வைக்கு வைத்து மரியாதை தெரிவிக்கப்பட்டது. லெப்டினன்ட் கவர்னர் திரு சிப்பர் உருக்கமாகச் சில வார்த்தைகள் பேசினார். ஹெலிகாப்டரில் குழந்தைகளுடன் சில்ச்சார் வந்து, அங்கிருந்து விமானப்படை விமானத்தில் கல்கத்தா வந்து, 'போயிங்'கில் சென்னை வந்து, என் கணவரின் பெற்றோர் இருக்கும் காமாட்சிபுரம் கிராமத்துக்கு உடலை எடுத்துக்கொண்டு போனோம்.''

''அப்ஜாலிலிருந்து திரும்பி வருகையில் உங்களுக்குத் துணை....?''

''அப்ஜாலிலிருந்து கல்கத்தாவரையில் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் எங்களுடன் வந்தார். அங்கிருந்து சென்னைவரை ஒரு டி.எஸ்.பி. உடன் வந்தார். சென்னை வந்ததும் ஆம்புலன்ஸ் தயாராக இருந்தது. காமாட்சிபுரத்தில் இறுதிச் சடங்குகள் நிறைவேறின.''

''சுபாவத்தில் உங்கள் கணவர் எப்படிப்பட்டவர்?''

''சொன்னால் வியப்பீர்கள். பரம சாது. யாருக்கும் ஒரு சிறு கஷ்டமும் கொடுக்க மாட்டார். மெல்ல, சாந்தமாகத்தான் பேசுவார். போலீஸ் உடையைக் கழற்றிவிட்டால் அவருடன் பேசிப் பழகுபவர்கள் அவர் ஒரு போலீஸ் அதிகாரி என்பதையே நம்ப மாட்டார்கள். குழந்தைகளிடம் அவருக்கு அன்பு அதிகம். 'அளவுக்கு மீறிக் குழந்தைகளுக்குச் செல்லம் கொடுக்கிறார்களே' என்று என் அப்பா கூடச் சில சமயம் கேட்பதுண்டு. இரவு 12 மணிக்கு வீடு திரும்பினாலும் சந்தியாவந்தனம் செய்யாமல் சாப்பிட மாட்டார். ஒரு அர்த்தநாரியை இவர் சந்தித்த அன்று 'நீங்கள் 'ஸ்மோக்' பண்ணுவீர்களா?' என்று கேட்டு உபசரித்தாராம் ஒரு அர்த்தநாரி. 'இல்லை' என்றாராம். 'வெற்றிலை போடுவீர்களா?' என்று கேட்டாராம். அதற்கும் இவர் 'இல்லை' என்று பதிலளித்தாராம். 'மது அருந்துவதில்லை, புகை பிடிப்பதில்லை, வெற்றிலைகூடப் போடுவதில்லை! என்ன சார் போலீஸ் அதிகாரி நீங்கள்?' என்று அவர் என் கணவரைப் பரிகாசமாகக் கேட்டாராம்!

திரு நடராஜய்யர் குறுக்கிட்டுக் கூறினார்: ''என் மாப்பிள்ளை பஞ்சாபகேசன் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி கிடைத்தபோது நான் அதிர்ந்து போனேன். எனினும் மனத்துக்குச் சமாதானம் கூறிக் கொண்டேன், இச்செய்தி பொய்யாக இருக்கலாம் என்று. காரணம் விமானப் படையில் விங் கமாண்டராக இருந்த என் மூத்த மாப்பிள்ளைக்கு பாகிஸ்தானுடன் நடந்த போரில் திறமையாகப் பணியாற்றியதற்காக 'வீர சக்கர' விருது கிடைத்தது. ஆனால் அவர் 'வீர மரணம்' அடைந்ததாகத் தமிழ் தினசரியில் செய்தி வெளியாயிற்று. ஆசிரியரை விசாரித்ததில் அச்செய்தி தவறு என்று அவர் வருத்தம் தெரிவித்தார். அதே மாதிரி இதுவும் தவறான செய்தியாக இருக்கக் கூடாதா என்றே ஏங்கிக் கொண்டிருந்தேன். ஆனால் நிஜமாகி விட்டதே, சார்!'' என்று அவர் கூறியபோது அந்தக் குரலின் சோகம் என் நெஞ்சை நெகிழச் செய்தது. நான் புறப்படும் சமயம் திருமதி புவனேசுவரிக்கு இப்போது ஏழாவது மாதம் என்று அறிந்தவுடன் என் நெஞ்சின் பாரம் மேலும் அதிகமாகியது. எளிய குடும்பத்தில் பிறந்து, கடுமையான உழைப்பினால் உயர்ந்த பதவிக்கு வந்து 36 வது பிராயத்திலே தாய் நாட்டின் பணியிலே உயிர் துறந்து வீர சுவர்க்கம் புகுந்த இளைஞர் பஞ்சாபகேசன் மீண்டும் தமிழ் மண்ணிலே வந்து பிறக்கட்டும் என்று மனத்துக்குள் வாழ்த்துக் கூறினேன். பேட்டி : 'பாணன்'

போனஸ்

சென்னையில் பல கடைகளில் 'ரேமன் போனஸ் ஸ்டாம்புகள் இங்கே கொடுக்கப்படும்' என்று அறிவிப்பு ஒட்டியிருக்கிறார்கள். இதற்கு என்ன அர்த்தம்?

'ரேமன் போனஸ்' திட்ட சென்னை கிளை நிர்வாகி திரு சத்தியமூர்த்தியைச் சந்தித்துக் கேட்டபோது அவர் கூறியவை:

'ரேமன் ஸ்டாம்பு' திட்டம் பம்பாயில் பிரபலமான ரேமன் சர்வீஸஸ் என்ற என்ஜினீரிங் ஸ்தாபனத்தின் ஒரு பிரிவு.

அயல்நாடுகளில் பிரபலமாக இருக்கும் இந்தத் திட்டம் இந்தியாவில் முதன் முதலாக பம்பாயில் 1973ம் ஆண்டிலிருந்தும் பிறகு தில்லி, புனா, கல்கத்தா நகரங்களிலும் கடைசியாகச் சென்னையில் சென்ற நான்கு மாதங்களாகவும் செயல்படுகிறது. இந்த ஸ்டாம்புச் சின்னம் போடப்பட்ட கடைகளில் சாமான்கள் வாங்கினால் ஒவ்வொரு ரூபாய்க்கு இரண்டரைப் பைசா மதிப்புள்ள ஒரு ரேமன் ஸ்டாம்பு தருகிறார்கள். கூடவே இந்த ஸ்டாம்புகளை ஒட்டவைக்க ஒரு புத்தகமும் கிடைக்கிறது. இப்படிச் சேகரித்த ஸ்டாம்புகளை இதில் ஒட்டிக் கொண்டே வரலாம். இந்த ரேமன் கம்பெனியில் ஒரு ஷோ ரூம் வைத்திருக்கிறார்கள். இங்கு பிளாஸ்டிக் டம்ளரிலிருந்து டெலிவிஷன் வரையில் பல பொருட்கள் உள்ளன. சேகரித்த ஸ்டாம்புகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப இந்தப் பொருட்களைப் பரிசாக (விலை எதும் கொடுக்காமல்) பெற்றுக் கொள்ளலாம். வாடிக்கையாளருக்குக் கிடைக்கும் லாபம் இது. அவர் செலவழிக்கும் ஒவ்வொரு ரூபாய்க்கும் இரண்டரைப் பைசா விதம் நாளடைவில் ஒரு கணிசமான தொகை சேர்ந்து விடுகிறது.

கடைக்காரருக்கு என்ன லாபம்? இந்த ஸ்டாம்புகளைச் சேகரிக்கும் ஆசையில் மக்கள் இம்மாதிரிக் கடைகளுக்கே வருவதால் வியாபாரம் அதிகரிக்கிறது. கடன் செல்வது குறைகிறது.


ரேமன் கம்பெனியார் இந்த ஸ்டாம்புகளைக் கடைக்குக் கொடுக்கும்போது இரண்டரை பைசாவுக்குத்தான் விற்கிறார்கள்.

ஒரு பகுதியில் ஒரே மாதிரி வியாபாரம் உள்ள இரண்டு கடைகளுக்கு இந்தத் திட்டத்தை அநுமதிப்பதில்லை.

-கே. ஆர்.



காற்சட்டைகள் இலவசமாகக் கிடைப்பதற்குச் சமம்



இது எப்படி என்று நீங்கள் ஆலோசித்திருக்க மாட்டீர்கள்... 'டெரீன்'® காற்சட்டைகள் சாதாரண காற்சட்டைகளை விட அதிகம் உழைக்கின்றன!

உண்மையில் 'டெரீன்' துணிகள் மும் மடங்கு உழைக்கின்றன. அவற்றின் விலை கூடுதலாயிருப்பினும், தரச் சிறப்பு மிக்கவை. ஆகவே நீங்கள் துணிகள் வாங்கும்போது 'டெரீன்' ட்ரேட் மார்க்கைப் பார்த்து வாங்கு வதால் பல வழிகளில் லாபம் அடை கிறீர்கள். 'டெரீன்' துணிகளுக்குச் சலவைச் செலவு இல்லை. அவற்றை இல்லத்திலேயே எளிதில் துவைக்க முடியும். இஸ்திரி அவசியமில்லை.

துணிமணிகளிலுள்ள 'டெரீன்' ட்ரேட்மார்க் அவற்றின் தரச் சிறப்பை உறுதி செய்கிறது.

TERENE

® 'டெரீன்' — கெமிக்கல்ஸ் அண்ட் ஃபைபர்ஸ் ஆப் இந்தியா லிமிடெடின் ரெஜிஸ்டர்ட் ட்ரேட்மார்க்

CHAITRA-CAFI-312 TAM

தெய்வம்

ஆர்.வைத்தியநாதன்

கிழவர் திண்ணையில் அமர்ந்து, தம்மை மறந்த நிலையில், சற்று உரக்கவே படித்துக் கொண்டிருந்தார், பகவத்கீதை.

பரித்ராணாய சாதூனாம்
விநாசாய ச துஷ்க்ருதாம்
தர்மஸம்ஸ்தாபனார்த்தாய
சம்பவாமி யுகே யுகே

உள்ளேயிருந்து வந்த விசாலம், ஆவேசத்துடன் கிழவரிடமிருந்து புத்தகத்தைப் பிடுங்கி வீசி எறிந்தாள். தொப்பென்று அது தெருவில் விழுந்தது.

பெரியவர் மகளைப் பார்த்தார். அவள் கண்களில் கோபம் கொப்பளித்தது. உதடுகள் துடித்தன. அந்தக் கோபத்தை அடக்கும் முயற்சியில் தோற்று அழுகை பொத்துக் கொண்டு வந்தது. தலையைக் குனிந்து கொண்டு உள்ளே போய் விட்டாள்.

''கிருஷ்ணா! தாங்க முடியாத துயரத்தை நீ அவளுக்குத் தாராளமாய்க் கொடுத்து விட்டாய். அதனால்தான் இத்தனை விபரீதமான காரியத்தை அவள் செய்து விட்டாள். எனக்காக அவளை நீ மன்னித்து விடு.''

மரத்துப் போன கால்களை நீவிவிட்டுக் கொண்டே மெதுவாக எழுந்து சென்று தெருவில் கிடந்த புத்தகத்தைத் தூசி தட்டி எடுத்துக் கொண்டு வீட்டில் நுழைந்தார். பகவத்கீதையைப் பூஜையறையில் வைத்து விடலாமென்று அந்த அறையைப் பார்த்ததும், பகீரென்றது. கதவு மூடியிருந்ததோடு, பூட்டும் தொங்கியது!

அருகில் நிழல் தட்டியது. விசாலம்! அவள் விழிகளில் கப்பியிருந்த சோகம் ''இனி இந்த வீட்டில் கடவுளுக்கு இடமேயில்லை'' என்று கூறாமல் கூறின. என்ன செய்வது, ஏது செய்வது என்று புரியாமல் அவள் அந்த வீட்டில் சுற்றிச் சுற்றி வந்தாளே தவிர, உருப்படியாக எதையும் செய்யும் நிலையில் இல்லை.



''என்னை மன்னிச்சுடுங்கப்பா!''

''உன் மனசை என்னாலே புரிஞ்சுக்க முடியறதம்மா! உனக்குக் கோபம் என் மீது அல்ல; இதோ, இந்தப் பகவத் கீதையின் மீது.''

''அப்பா!- நல்லவர்களைக் காக்கவும், தீயவர்களை ஒடுக்கவும் தர்மத்தை நிலை நாட்டவும் யுகந்தோறும் கடவுள் அவதரிக்கிறார்னு நீங்கள் படிக்கது காதில் விழுந்ததும், என் உடம்பெல்லாம் பற்றி எரிகிறதப்பா. கடவுளாம் கடவுள்! வெறும் அண்டப் புளுகு. பொய். புரட்டு!!''

பெரியவர் காதுகளைப் பொத்திக் கொண்டு நகர்ந்தார்.

''நில்லுங்கள் அப்பா! காதுகளைத் தாராளமாகப் பொத்திக் கொள்ளுங்கள். ஆனால் கண்ணைத் திறந்து மூளிக் கழுத்தோடு இருக்கிற என்னையும், குழந்தைகளை வைத்துக் கொண்டு தவிக்கிற தம்பியையும் பாருங்கப்பா. ஒரே வருஷத்துக்குள்ளே, ஆயிரம் ரூபாய்க்கு மேல் மாசம் சம்பாதித்துக் கொண்டிருந்த மாப்பிள்ளையையும் இரண்டு குழந்தைகளையும் கணவனையும் தவிக்கவிட்டுச் சென்றுவிட்ட மாட்டுப் பெண்ணையும் இழந்த பிறகுமா அப்பா, உங்களுக்குக் கடவுள் நம்பிக்கை? நாம் யாருக்குக் கெடுதல் செய்தோம்? நம்மை ஏன் ஒடுக்கி விட்டார்? இது தான் தர்மமா?''

''சிவ, சிவ'' என்று கிழவர் வாய் முணுமுணுத்தது. மீண்டும் திண்ணைக்கு வந்து அமர்ந்தார். சுவரில் சாய்ந்துகொண்டு காலை நீட்டினார். கீதையை எங்கே வைப்பது? இந்த வீட்டில் இப்போதைக்கு அதற்கு இடமில்லை என்றாகி விட்டது. விசாலமாவது தன் துக்கத்தை, தாலியிழந்த துயரத்தை, கசப்பும் வெறுப்பும் கலந்த சொற்களில் உமிழ்ந்து விடுகிறாள். இதயத்தை அழுத்தும் சோகத்தைச் சிறிது சிறிதாக இறக்கி வைக்கிறாள்.

சங்கரோ மனைவியை இழந்த இழப்பை, மனத்துக்குள்ளேயே பூட்டி வைத்துக் கொண்டு மறுகுகிறான். தான் ஆண் பிள்ளை என்பதோடு, தான் அழுதால் தன்னுடன் தன் குழந்தைகளும் அழுமே என்பதோடு தாலி கட்டிய கணவனையே இழந்து விட்டு நிர்க்கதியாக வந்திருக்கிற விசாலத்தின் முன் தான் தன் துயரத்தை வெளிக் காட்டிக் கொள்ளக் கூடாது என்பதற்காகச் சங்கர் தனக்கு ஏதுமே நேராததுபோல் பாவனை காட்டிக் கொண்டிருந்தான்.

சங்கருக்காக விசாலமும், விசாலத்துக்காகச் சங்கரும் கண்ணீர் வடித்தனர். இருவருக்காகவும் கண்ணீர் வடிக்க வேண்டிய கிழவரோ, கீதைப் புத்தகத்தை வைக்க இடம் தேடிக் கொண்டிருந்தார்!

கனிஷ்ட குமாரன் லக்ஷ்மணன், மனைவி மீனாவை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கச் சென்றிருக்கிறான். மீனா நிறை மாதக் கர்ப்பிணி. அவள் பெற்றோரை இழந்து விட்டதால், தலைப்பிரசவமே லக்ஷ்மணன் பொறுப்பாகி விட்டது. விடியற்காலையிலிருந்தே அவளுக்கு இடுப்புவலி எடுத்து விட்டதால், லேடி டாக்டர் ஆலோசனைப்படி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டாள். அநேகமாக இன்னும் சில மணி நேரத்தில் பிரசவமாகி விடலாம்.

''விசாலம்! அப்பாவைச் சாப்பிடக் கூப்பிடு. நீங்களும் வாங்க.''

''சாப்பிட்டுச் சாப்பிட்டு எதைச் சாதித்தோம், மாமி! எனக்கு எதுவும் பிடிக்கவில்லை. சங்கரையும் குழந்தைகளையும்

அப்பாவுடன் சாப்பிடச் சொல்லுங்கள். நான் வேண்டும்போது பிறகு சாப்பிட்டுக் கொள்கிறேன்.''

சமையலறையையே தன் உலகமாக நினைத்து அதற்குள்ளேயே இளமையை இரையாக்கி நரை மூத்து மூப்பு எய்தி விட்டமாமி, ஆதரவாக விலாசாலத்தின் தலையைக் கோதி விட்டாள்.

பார்வை மயங்கி விட்டாலும், பழக்கத்தினால் சமையலைக் கச்சிதமாக முடித்து வைப்பாள். ஒரு வருஷமா, இரண்டா? லக்ஷ்மணனுக்கு ஒரு வயது, அம்மா செத்துப் போகும் போது. இப்போது அவன் முப்பது வயதடைந்து விட்டான். சமையற்கார மாமி வந்து சேர்ந்தும் முப்பது வருஷங்கள் ஆகிறதே!

இப்போது ஓரிரு வருஷங்களாகத்தான் மாமி, அப்பாவுக்கு எதிரில் நடமாடுகிறாள், சாப்பாடு போடுகிறாள். அதற்கு முன் அவள் இருக்கிறஇடத்தில்அப்பா இருக்க மாட்டார். அப்பா நிற்கிற இடத்தில் அவள் தென்பட மாட்டாள். அத்தனை அடக்கம்!

அவளுக்குக் கணவரோ, குழந்தைகளோ இருப்பதாகத் தெரியவில்லை. அவர்களைப் பற்றிய பேச்சே மாமி எடுப்பதில்லை. கேட்டாலும் ஒழுங்காகப் பதில் சொல்வதில்லை.

''அக்கா! மீனாவை 'அட்மிட்' பண்ணி விட்டேன். எப்படியும் இன்றிரவுக்குள் பிரசவமாகி விடும் என்றாள் லேடி டாக்டர்.''

''நிம்மதியாகப் போச்சு. நீ குளித்து விட்டுச் சாப்பிடலாம்.''


''அப்பா எங்கே?''

''இன்னையிலேதானே இருந்தார்.''

''காணோமே?''

''காணோமா? எங்கே போயிருப்பார்? எதிர் வீட்டுக்குத் தான் போய் அந்த ராகவாச்சாரி மாமாவுடன் பேசிக் கொண்டிருப்பார், சாப்பிடக் கூப்பிடு.''





காதல் பேய் !

உண்மைக் காதல் என்பது பேய் மாதிரி. எல்லோரும் அதைப் பற்றிப் பேசினாலும், யாரும் அதைப் பார்த்தது இல்லை.

- கலெக்ஷன்ஸ் - பாலி

''இதோ வந்து விட்டாரே. அப்பா! மீனாவை 'அட்மிட்' பண்ணி விட்டேன். ராத்திரிக்குள் பிரசவமாகி விடுமாம்.''

''நல்லது, லக்ஷ்மணா !''

சாப்பாடு முடிந்ததும், சட்டையை மாட்டிக் கொண்டு லக்ஷ்மணன் ஆஸ்பத்திரிக்குக் கிளம்பினான். அப்போதுதான் அவனைப் பார்க்க நண்பன் நடராஜன் ஸ்கூட்டரில் வந்து சேர்ந்தான்.

''அப்பா! குழந்தை பிறந்ததும் போன் பண்ணறேன். அப்புறமா நீங்க ஆஸ்பத்திரிக்கு வந்தால் போதும்.''

லக்ஷ்மணன், நடராஜனுடன் ஸ்கூட்டரில் பிலியனில் அமர்ந்துகொண்டு கிளம்பி விட்டான். கிழவர், பார்வையிலிருந்து ஸ்கூட்டர் மறைந்ததும், உள்ளே வந்தார். அன்று ஞாயிற்றுக்கிழமை. சங்கரும் குழந்தைகளும்கூட வீட்டில் இருந்தனர். குழந்தைகளைத் தூங்கச் செய்துவிட்டு அவர்கள் அருகிலேயே அவனும் படுத்தான்.

பிற்பகல் ஒரு மணி இருக்கும். டெலிபோன் மணி அடித்தது. சங்கர்தான் ரிஸீவரை எடுத்தான். விசாலமும் அவள் அப்பாவும் அருகிலேயே நின்றனர்.

''எஸ் ... சங்கர் ஹியர்.''

....

''என்ன? ஜெனரல் ஆஸ்பத்திரியா?''

....

''ஆமாம். லக்ஷ்மணன் என் தம்பிதான்.... விபத்தா? ... ஒன்றும் ஆபத்தில்லையே? ... எமர்ஜன்ஸி வார்டா? சரி, இதோ வந்து விட்டேன்.''

'டக்'கென்று ரிஸீவரை வைத்துவிட்டு, சங்கர் திரும்பியபோது பதறிக் கொண்டு நின்ற விசாலம் ''என்னடா சங்கர்? லக்ஷ்மணனுக்கு என்னடா? சொல்லுடா!'' என்று அவனை உலுக்கினாள்.

''ஸ்கூட்டரை லாரி மோதி விட்டதாம். நடராஜன், லக்ஷ்மணன் இரண்டு பேருக்குமே பிரக்ஞையில்லையாம். ஜெனரல் ஆஸ்பத்திரியில் எமர்ஜன்ஸி வார்டிலே போட்டிருக்காங்களாம். விசாலம்! ஆபத்துக்குத் தோஷமில்லே. நீ எழும்பூர் மெடர்னிடி ஆஸ்பத்திரிக்குப் போய் மீனாவைக் கவனித்துக் கொள். நான் போய் லக்ஷ்மணனைக் கவனித்துக் கொள்கிறேன். மீனாவிடம் எதையும் உளறிவிடாதே. அப்பா நீங்க டெலிபோன் அருகிலேயே உட்கார்ந்திண்டிருங்கோ. அப்பப்ப நான் விஷயம் தெரிவிக்கிறேன்.''

சங்கரும் விசாலமும் கிளம்பினர். கிழவர் எதையோ தேடினார்.

''விசாலம்! சாமியறைச் சாவி எங்கே? கொண்டா, இங்கே.''

''இந்தாங்கப்பா, சாவி. முதல் காரியமா அத்தனை சாமி படங்களையும் கீழே போட்டுச் சுக்கு நூறாக உடையுங்கள். ஸ்தோத்திரப் புத்தகங்களையெல்லாம் கிழித்துக் கொளுத்துங்கள். சாமி, கடவுள், கீதை, தர்மம்னு காலமெல்லாம் பாராயணம் படிச்சீங்களே, அது இப்ப ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு நம்மைக் கொண்டு விட்டிருக்கிற அலங்கோலத்தைப் பார்த்தீங்களா அப்பா?''

''விசாலம்!'' என்று கிழவர் போட்ட கூச்சலைக் கேட்டு, அவள் பிரமை பிடித்து நின்றாள். கிளம்பிய சங்கர் உள்ளே ஓடி வந்தான். சமையலறையே கதியாய்க் கிடந்த சமையற்கார மாமியும்தான்!

பூட்டைத் திறந்து கிழவர் கடவுள் படங்களின் முன்பாக நின்றார். அலுமினிய டப்பாவிலிருந்த கற்பூரக் கட்டியை எடுத்துக் கொளுத்தினார். இரு கைகளாலும் பயபக்தியுடன் தூக்கிப் பிடித்துக் கன்னங்களில் நீர் வழியக் கதறினார்:

''திரிபுரம் எரித்த செஞ்சடையா! உன் மனம் எனக்குத் தெரிந்து விட்டது. பழுத்தோலை நானிருக்க, குருத்தோலைகளை நீ ஏன் குத்திக் குதறுகிறாய் என்று புரிந்து விட்டது. கடைசி முறையாக என்னை எச்சரிக்கத்தான் வந்திருக்கிறாய் என்று விளங்கி விட்டது. பரமேசுவரா! போதும், நீ எனக்கு அளித்த தண்டனை. இதோ, இந்த ஜோதியின் மீது ஆணையிட்டு, நான் பெற்ற குழந்தைகள் சாட்சியாகச் சொல்கிறேன். பார்வதம் என் மனைவிதான், அவளை வாழாவெட்டியாக ஒதுக்கியது தவறுதான், அழகற்றவள் என்பதற்காக அவளைச் சமையலறையில் ஒதுக்கி விட்டு வேறொருத்தியைக் கல்யாணம் செய்து கொண்டது குற்றந்தான், பார்வதத்தை என் மனைவியாக நாலு பேர் அறிய மீண்டும் ஏற்கிறேன். அவளுக்குரிய லக்ஷ்மணனின் உயிருக்கு ஆபத்தில்லாமல் காப்பாற்று. என் மகனுக்கு வாழ்வு கொடு. என் உயிரை வேண்டுமானாலும் எடுத்துக் கொள். பார்வதம் இங்கே வா'' என்று கிழவர் திரும்பினார். சமையற்கார மாமி தயங்கினாள். தாரை தாரையாகக் கண்ணீர் வடித்தாள். கிழவர் அசுர வேகத்துடன் அவள் கையைப் பிடித்து அழைத்துப் படத்தின் முன் நிற்க வைத்து, ''பார்வதம்! நீ கேட்டால்தான், என் மகனுக்கு உயிர் கிடைக்கும். சர்வேசுவரன் உனக்காகத்தான் என்னை இத்தனை நாட்களாகத் தண்டித்து வந்தார். அவர் அநாத ரக்ஷகன். என்னைத் தண்டித்தது போதும் என்று நீ வேண்டிக் கொள். என் மகன் நிச்சயம் பிழைப்பான்'' என்று கெஞ்சினார்.


பார்வதம் தாலிக் கயிற்றைக் கண்களில் ஒற்றிக் கொண்டு கணவனைத் தொழுதாள்.

''தாயே! ஜகதீசுவரி! என் மகன் லக்ஷ்மணனுக்கு உயிர்ப்பிச்சை கொடம்மா. அது எனக்குத் தாலிப்பிச்சை கொடுத்தது போல. அம்பிகே! நீ அதைச் செய்யும் வரை நாங்களிருவரும் உன் காலடியில்தான் விழுந்து கிடக்கப் போகிறோம்.''

விசாலமும், சங்கரும் ஓடி வந்து அவளை 'அம்மா' என்று கட்டிக் கொண்டனர்.

''சங்கர்! லக்ஷ்மணன் உயிருக்கு எந்த ஆபத்தும் வராது. போய் வா. விசாலம்! நீயுந்தான் !'' என்றாள் பார்வதம்.

அது தெய்வ வாக்காயிருந்தது.



தீரஜ் சௌடாவைத் தெரியுமல்லவா?
எதிலுமே மிகச் சிறந்தவைதான் வேண்டும் அவருக்கு...

எனவே இந்து ரோல் பிலிம், இந்து புரோமைட் பேப்பர் இவற்றை அவர் உபயோகிப்பதில் வியப்பில்லை. அவர் மட்டும் அல்ல. மிட்டர் பேடியும், ஆர். கிருஷ்ணனும் கூடத்தான்.

இந்தப் புகழ்பெற்ற புகைப்பட நிபுணர்கள் எந்த பிரபல வெளிநாட்டுப் பிலிம்களையும் பயன் படுத்த முடியும். என்றாலும் அவர்கள் இந்துவையே தேர்ந்தெடுக்கிறார்கள். காரணம், இந்துவின் தரமே.

உங்கள் காமிராவும், லென்ஸும் எந்தத் தயாரிப்பாக இருந்தாலும், நீங்கள் எடுக்கப் போவது எவ்வித புகைப்படமாக இருந்தாலும், இந்து ரோல் பிலிமையும், புரோமைட் பேப்பரையுமே பயன் படுத்துங்கள்.

தெளிவான மாறுபாடு, சிறப்பான ஒளிப்பதிவு, ஒரே சீரான தரம், துல்லியமான கிரெயின்கள்–இவற்றை அளிப்பது இந்து. அது மட்டுமல்ல, இந்து மிக எளிதில் கிடைக்கிறது. எனவே புகைப்பட வல்லுநர்கள் இந்துவையே தேர்ந்தெடுக்கிறார்கள்.

இந்து ரோல் பிலிம். இந்து போட்டோ கிராபிக் பேப்பர்கள். இந்து சினி பாஸிடிவ். இந்து சினி சவுண்ட் நெகடிவ். இந்து எக்ஸ்ரே பிலிம். இந்து மீடியம் காண்ட்ராஸ்ட் கிராபிக் ஆர்ட்ஸ் பிலிம். இந்து டயாபாஸிடிவ். இந்து டாகுமெண்ட் காபியிங் பேப்பர்.

இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ்
மானுபாக்சரிங் கோ. லிமிடெட்,
இந்து நகர், உதகமண்டலம் 643005

இந்துவின் தரத்துக்குச் சான்று உங்கள் கண் எதிரே.

INDU

SAA/HPF/1378 TAM



தாய்ப் பாசம்

• மிக்கையில் ரோதினேவ் •

ருஷ்யச் சிறுகதை

ஒருநாள் இரவு, நானும் என் ஆசிரியர் பியோதர் இவானேவிச்சும் ஆற்றங்கரையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம்.

அச்சமயம் ஒரு பெரிய பறவை அந்தப் பக்கமாகப் பறந்து வந்தது. "இப்போதெல்லாம் அவை நம் கிராமத்தில் தங்குவதில்லை" என்றார் ஆசிரியர் வருத்தத்துடன்.

"ஏன்?"

"முன்பு ஒருசமயம் அவை பட்ட துன்பத்தின் காரணமாக வருவதில்லை. அவற்றை அப்படியொரு துன்பத்தில் ஆழ்த்தியதும் நான்தான்" என்று வருத்தத்துடன் கூறினார் ஆசிரியர். பிறகு தொடர்ந்தார்:

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள்... ஓர் ஆண் கொக்கு எங்கள் கூரை மீது வந்து உட்கார்ந்தது; சிறிது நேரம் இங்கும் அங்கும் நடந்தது. பிறகு அங்கிருந்து சென்று விட்டது. சிறிது நேரம் கழித்து ஒரு பெண் கொக்கோடு திரும்பி வந்தது.

அவை இரண்டும் கூரையின் மீது கூடு கட்டி வசிக்கத் தொடங்கின. சில நாட்கள் சென்றன. பெண் பறவை முட்டை இட்டது. முட்டையை அடை காக்கத் தொடங்கியது.

'ஒரு கோழி முட்டையை, கொக்கு முட்டையோடு வைத்தால் என்னவாகும்' என்று பெண்பறவையைவிரட்டிவிட்டு,கோழி முட்டையை அந்தக் கூட்டில் வைத்தேன்.

பெண் பறவை திரும்பி வந்தது; நான்கு முட்டைகளுக்குப் பதில் ஐந்து இருந்ததை அந்தப் பெண் பறவை உணரவில்லை.

ஒருநாள் காலை நான்கு கொக்குக் குஞ்சுகள் முட்டைகளிலிருந்து வெளி வந்தன. ஒரே ஒரு முட்டை மட்டும் அப்படியே இருந்தது. கடைசியாக ஒருநாள் அந்த முட்டையிலிருந்து வெள்ளை நிறமும் குட்டையான கழுத்தும், சிறிய மஞ்சள் நிற அலகும் கொண்ட ஒரு பறவைக் குஞ்சு வெளியே வந்தது. அக்குஞ்சு பரிதாபமாகக் கத்தியது. கொக்கு அதிசயப் பட்டது; இருந்தாலும் ஒரு தாய் அல்லவா? குழந்தைகளை ஒரேவிதமாகவே பாவித்தது. ஆண் கொக்குக்குக் கோபம் வந்து விட்டது; பெண் கொக்கை ஆத்திரத்துடன் பார்த்தது. ஒருநாள் முழுதும் ஆண் பறவை அங்கு உட்கார்ந்து கொண்டிருந்தது. அடுத்த நாள் காலையில் எங்கோ பறந்து போயிற்று; பிறகு திரும்பவேயில்லை. ஆண் பறவை சென்ற உடனே கூட்டமாகப் பல கொக்குகள் எங்கள் கூரையை நோக்கி வந்தன. அவை கொக்குக் கூட்டைச் சூழ்ந்து கொண்டன. தாய்ப் பறவையை இதர கொக்குகள் பலமாகத் தாக்கின. இறக்கைகளால் மோதின, அலகால் கொத்தின. ஆனால் அத்தனையையும் சகித்துக் கொண்டு தாய்ப் பறவை பேசாமல் இருந்தது. சிறு சத்தம் கூட எழுப்பவில்லை. தனக்கு இவ்வளவு துன்பத்தையும் ஆபத்தையும் கொண்டு வந்த அந்தக் கோழிக்குஞ்சைத் தனது உடம்பாலும் இறக்கையாலும் மூடிப் பாதுகாத்துக் கொண்டிருந்தது.

பிறகு அந்தப் பறவைகள் எங்கோ பறந்து போய் விட்டன. தாய்ப் பறவை அருகில் இருக்கும் சதுப்பு நிலத்துக்குச் சென்று அதன் குஞ்சுகளுக்கு உணவு கொண்டு வந்தது. ஒரு பெரிய புழுவைக் கொண்டுவந்து குஞ்சுகளுக்கு ஊட்டிற்று. ஆனால் அந்தக் கோழிக் குஞ்சு வெகு நாட்கள் கூண்டில் இருக்கவில்லை. ஒருநாள் காலை, 'குட்டிப் பறவை'யைக் காணவில்லை. தாய்ப் பறவை கூரை முழுவதும் தேடிற்று. அந்தக் கோழிக்குஞ்சு கூரையின் இடுக்கில் செத்துக் கிடந்தது.

அறுவடை முடிந்து மழைக்காலம் தொடங்கி விட்டது; குளிர் அதிகமாகி விட்டது. எனவே தாய்ப் பறவை குஞ்சுகளுடன் தொலைதூரம் செல்லத் தயாராகிக் கொண்டிருந்தது. அவற்றுக்கு நன்கு பறப்பதற்குக் கற்றுத் தந்தது.

ஒருநாள் காலை தாய்ப்பறவை குஞ்சுகளுக்குச் சொல்லித் தர வேண்டியனவற்றைச் சொல்லிக் கொடுத்தது; குஞ்சுகளை வெப்ப நாடுகளுக்குப் பறக்க விட்டது. குஞ்சுகள் பறந்து சென்றதும், கண்ணிலிருந்து மறையும் வரை தாய்ப்பறவை பார்த்துக் கொண்டிருந்தது. பிறகு தாய்ப்பறவை ஆகாயத்தில் மிக உயரத்துக்குச் சென்றது; தனது கூட்டைச் சுற்றி இறுதியாக ஒரு முறை வட்டமிட்டது. உரக்கக் கத்தி அழுதது. தனது இறக்கைகளை மடித்தவாறு அந்தக் கோழிக்குஞ்சு எங்கே இறந்து கிடந்ததோ, அந்த இடத்தில் தொப்பென்று கல்லைப் போல் விழுந்து தன்னை மாய்த்துக் கொண்டது.

நான் கூரை மீதேறி அந்தக் கோழிக் குஞ்சைப் பிடித்தேன் என்பதும், என் கையிலிருந்து நழுவி அது கூரையிடுக்கில் அகப்பட்டுச் செத்து விட்டது என்பதும், யாருக்கும் தெரியாது. அதன்பின்னர் கொக்குகள் நம் கிராமத்துக்கு வரவேயில்லை. தமது துயர அனுபவத்தை அவை மறக்கவில்லை!

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran

ஆயிரக்கணக்கான நம் நாட்டு மக்கள் தங்களுடைய சேமிப்பை உங்கள் தொழிலில் முதலீடு செய்வதென்பதன்றோ நம்பிக்கைக்குச் சான்று!



இச்சம்பவம் பல வருடங்களுக்கு முன் நடந்தது—அதாவது டாடா அயர்ன் & ஸ்டீல் கம்பெனி துவங்கியபொழுது. ஆயிரக்கணக்கான மக்கள் 'அமருவதற்கு ஆசனமும், உண்பதற்கு உணவும்' உடன் எடுத்துச் சென்று டாடாவின் அலுவலகத்தின் முன் அவரது புது கம்பெனியில் பங்கு (ஷேர்) வாங்கக் காத்து நின்றனர். பணக்காரர், ஏழை, இரு சாராருமே ஒன்றுபோல் பணத்தை முதலீடு செய்தனர்.

மூன்றே வாரங்களில் சுமார் எட்டாயிரம் மக்கள் 230 லட்சம் ரூபாயை புதிய தொழில் துவக்கத்தில் முதலீடு செய்தபொழுது ஸ்ரீ தொராப்ஜீ டாடா அவர்கள் இச்சாதனையைப்பற்றி பெருமையுடன் எழுதியதாவது: 'அது ஒரு முற்றும் புதிய சுதேசி ஸ்தாபனமாக, சுதேசிகளின் பணத்தையும், சுதேசிகளின் ஆக்கத்திறனையும் கொண்டு உருவாக்கப்பட்டது'.

அது நடந்தது 1907ம் ஆண்டில். இன்றும் டாடா ஸ்டீலில் அதே பொறுப்புணர்ச்சி தலைதூக்கி நிற்கிறது. இந்திய மக்களில் சுமார் எழுபத்து ஐயாயிரம் பேர் டாடா அயர்ன் & ஸ்டீல் கம்பெனியில் பங்குதாரர்களாக இருக்கும் அதே பெருமிதம் இன்று ஒரு விதத்தில் டாடாவில் தலைமுறையாக வரும் சம்பிரதாயமாகவே ஆகிவிட்டதென்று கூறலாம்.

டாடா ஸ்டீல்

HT-115-7253

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

வீட்டை பாதுகாப்பதில் நல்ல ஞானம்



டூலக்ஸின் நீடிப்புத் தன்மை, உங்கள் வீட்டிற்கு நெடுங்கால பாதுகாப்பு மற்றும் சிக்கனமும் அளிக்கின்றது.

டூலக்ஸ், வெயிலில் ஒளி மங்காது.

டூலக்ஸ், நீரை உட்புக விடாது: பராமரிப்பதற்கும் சுலபமானது.

டூலக்ஸை சிறிதளவு கொண்டு அதிகமான இடத்திற்குப் பூசலாம்.

டூலக்ஸ், பரவலான பற்பல எழில் மிகுந்த நிறங்களில் கிடைக்கிறது—அதாவது, உங்கள் விருப்பத்திற்கும் மன நிலைக்கும் பொருந்திய பிரகாசமான மற்றும் இலேசான, சுத்தமான மற்றும் கலப்பானவை முதலியன.

நீடித்திருக்கும் ICI டூலக்ஸ்

அடிக்கடி அதிகச்செலவாகும் பெயின்ட் பூசுவதிலிருந்து உங்கள் வீட்டை பாதுகாக்கின்றது

இலவசம்

தி ஆல்கலி அண்டு கெமிகல் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட்
டூலக்ஸ்-இந்தியாவில் தயாரிப்பாளர்களும் விற்பனையாளர்களும்: இம்பீரியல் கெமிகல் இன்டஸ்டிரீஸ் லிமிடெட், லண்டனின் டிரேடு மார்க் 'டூலக்ஸ்' பதிவு பெற்ற உபயோகிப்பாளர்: தி ஆல்கலி அண்டு கெமிகல் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட்



கூப்பனை வெட்டி இன்றே அஞ்சலில் அனுப்பவும்: டூலக்ஸ் இன்ஃபர்மேஷன் ஸர்விஸெஸ், அஞ்சல் பெட்டி 10222, கல்கத்தா-700 019
தயவுசெய்து வீடுகளுக்கான நிறத்திட்டங்கள் பற்றிய இலவச அட்டை ஒன்று அனுப்புங்கள்

பெயர் ....

முகவரி ....

தொழில் ....

ICI டூலக்ஸ்—வீட்டின் சிறந்த நண்பன்

HT-ACCI (P) 8106